
# ஒளி பரவுகிறது...

திக்குவல்லை கமால்



# ஒளி பரவுகிறது

திக்குவல்லை கமால்

SOUTH ASIAN BOOKS COLOMBO

தேசிய கலை இலக்கிய பேரவை

சவுத் ஏசியன் புக்ஸ்

Oliy Paravugirathu
Thikkuvallai kamaal
First published : May 1995
Printed at : Surya Achagam, Madras.
Published in Association with
National Art & Literary Association
by
South Asian Books
6/1 Thayar Sahib II Lane
Madras - 600 002.
Rs. 30.00

---

Published and Distributed in Sri Lanka

by

**Vasantham (Private )Limited.**

44, 3rd Floor, C. C. S. M. Complex, Colombo-11

Tp: 335844. Fax. 94 - 1 - 333279

---

ஒளி பரவுகிறது
திக்குவல்லை கமால்
முதல் பதிப்பு : மே 1995
அச்சு : சூர்யா அச்சகம், சென்னை - 41.
வெளியீடு : தேசிய கலை இலக்கியப் பேரவையுடன்
இணைந்து
சவுத் ஏசியன் புக்ஸ்
6/1, தாயார் சாகிப் 2ஆவது சந்து,
சென்னை - 600 002
ரூ. 30.00

# பதிப்புரை

இலங்கையில் வடகீழ் மாகாணம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் வாழும் முஸ்லீம் மக்கள் பல்லினச் சூழலில் வாழும் பொழுது ஏற்படும் அவர்கள் அனுபவம் புதுமையானது.

திக்குவல்லை கமால் அவர்களுடைய 'ஒளி பரவுகிறது' என்ற இந்த நாவலை சவுத் ஏசியன் புக்ஸ் நிறுவனத்துடன் இணைந்து வெளியிடுவதில் தேசிய கலை இலக்கியப் பேரவை பெருமையடைகிறது.

'தமிழ் நூல் வெளியீட்டு விநியோக அமையம்' ஒன்றினை உருவாக்கித் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் புத்தகப் பண்பாட்டினை மேம்படுத்தும் முயற்சியாக இந்நாவல் வெளி வருகின்றது.

இந்நாவல் பற்றிய கருத்துகளை வரவேற்கிறோம்.

*14, 57 வது ஒழுங்கை* — தேசிய கலை இலக்கியப்
கொழும்பு—6 — பேரவை.
*20-11-1994*

# திறவுகோல்

ஓர் இலக்கியவாதி தான் வெளிப்படுத்த விரும்பும் படைப்புக்குத் தகுந்த இலக்கிய உருவத்தைத் தேர்ந்தெடுத்துக்கொள்கிறான்.

சிறுகதைத் துறையில் அதிக கவனம் செலுத்தி வந்த நான் நாவல், கவிதை, நாடகப் பிரதியாக்கத் துறைகளையும் மறந்துவிடவில்லை. இதற்காக இந்த எல்லாத் துறைகளிலும் வெற்றிகண்டுள்ளேன் என்று சொல்லிவிட முடியாது.

ஏற்கெனவே ''கோடையும் வரம்புகளை உடைக்கும்'' ''குருட்டு வெளிச்சம்'' ஆகிய சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளேன். இப்பொழுது ''ஒளிபரவுகிறது...'' நாவலை வெளிக்கொணர்கின்றேன்.

இந்நாவல் பிரதேச அபிவிருத்தி இந்து சமய தமிழ் அலுவல்கள் அமைச்சு 1982ல் நடத்திய நாவல் போட்டியில் முதற் பரிசுபெற்று, பல்லாண்டுகள் பத்திரமாக இருந்த படைப்பாகும்.

இந்த சந்தர்ப்பத்திலே இந்நூலாக்கத்தோடு சம்பந்தப்பட்டவர்களை நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறேன்.

சென்னை-சவுத் ஏசியன் புக்ஸுடன் இணைந்து இதனை வெளியிடும் தேசிய கலை இலக்கியப் பேரவை தலைவர் எஸ். தேவராஜா, அணிந்துரை வழங்கிய மருத்துவப் பேராசிரியரும் நாவலாசிரியருமான நந்தி, பொருத்தமான முகப்போவியம் வரைந்த 'ஹுனா' (ஹுஸைன்), தட்டச்சுப் பிரதி தயாரித்த ஆசிரிய நண்பர் எம். எஸ். எம். ஸுபைர், மற்றும் ஆலோசனைகள் வழங்கிய டொமினிக் ஜீவா, ஏ. இக்பால், ப ஆப்டீன், மேமன்கவி ஆகியோர் நெஞ்சுச்குரியவர்கள்,

இலக்கிய தாகமே இமயதாகம்,

**திக்குவல்லை கமால்.**

*191/பி, அட்டுலுகம், பண்டாரகம*
*249, யோனகபுர, திக்குவல்லை.*
*இலங்கை*
*1994. 04. 04.*

# புதிய அனுபவம் தரும் நாவல்

"நந்தி"

1890ஆம் வருடம் சித்திலெப்பை எழுதிய 'அசன்பேயின் சரித்திரம்' என்ற நாவல், இலங்கையின் தமிழ் இலக்கிய உலகில் ஆரம்பித்துவைத்த ஆரோக்கியமான நூறாண்டு சரித்திரத்திலே, இன்னுமொரு மதிக்கத்தகுந்த நாவல் 'ஒளி பரவுகிறது...' ஆகும்.

இது தொழிலாளரின் நாவல்; அதிலும் இளம் யுவதிகள் பங்குகொள்ளும் 'வேஜீ' நெசவுத் தொழிற்சாலையை முக்கிய களமாகக் கொண்டு எழுதப்பட்ட படைப்பு. இளமையும் குதூகலமும், நேசமும் பாசமும், சிந்தனையும் பக்குவமான போராட்டமும் இதில் உணர்வு இழைகளெனப் பின்னப்பட்டுள்ளன. ஆரம்பம் முதல் நிறைவுவரை நஸீமா, ஹலீமா, நிஸாயா, தயாவதி, ஸரீனா, அருணா, ரஃபீக்கா ஆகிய இளம் தலைமுறையின் உயிரோட்டம் நிறைந்த ஒரு உலகிலே எம்மை வாழவைக்கின்றார் நாவலாசிரியர். முடிவில் அந்த ஃபாத்திமாவும் எங்களுடன் சேர்ந்துவிடுகிறாள்!

இந்தக் கிராமத்து ஃபெக்டரியின் வெளிச் சூழலிலே இயற்கை இனிக்கின்றது — வானில் பவனிவரும் வட்டநிலா, அது நடாத்தும் கல்யாணம், அதிகாலைப் பனி, இளம் காற்றின் மெல்லிய தழுவல், அதில் கலந்த புனிதமான தொழுகை ஓசை—இவை எல்லாம் இருந்தும் தொழிலாளர் வாழ்வு ஃபெக்டரி உள்ளே போராட்டம் நிறைந்ததாகவே உள்ளது.

அங்கே மனத்திலே அதிகாரம் ஆட்கொள்ளும் முஸ்தஃபா முதலாளி, சின்னபொஸ், அவர்களுக்கு உதவி செய்து தொழிலாளருக்கு வில்லனாக செயல்படும் குத்தூஸ்நானா இருக்கிறார்கள். அவர்களுக்கு 'தொழிலாளர் சங்கம்' என்பது ஆகாத வார்த்தை; உரிமை, சம்பளம், வேலை நேரம்—பேசப்படக்கூடாது. இனி, வாழ்வின் மகிழ்ச்சியை சந்தர்ப்பம் பார்த்துப் பிய்ப்பதற்கு மொட்டைக் கடிதம், சுவரொட்டிகள், பெட்டிசம் எல்லாம் பயன்படுத்தப்படுகின்றன.

யுவதிகளுக்குக் கைகொடுக்கும் ஆண் இனத்தின் பிரதிநிதிகளாக வரும் நியாஸ், காதர், லாஃபிர், ஜினதாஸ ஆகியோர் மனத்திற்கு மானம் சேர்ப்பவர்கள், மிகவும் ஆளுமை மிகுந்த செயலாளர்கள். எல்லாப் பாத்திரங்களையுமே தாமாக இயங்கவைத்து எமது மனத்திலே நிலைநிறுத்துகிறார் ஆசிரியர். இன்னும் ஒரு ஆசீர்வாத உணர்வை கதைபூராக ஊடுருவச் செய்கின்றார்; அதாவது நியாஸ் — நஸீமா இருவரும் பிறப்பால், அன்பினால், பண்பினால், தமது திறமையினால் வாழ்வில் பிணைக்கப்பட வேண்டியவர்கள்!

நாவல் மாந்தரின் உரையாடல்களை அவர்கள் பேச்சு வழக்கிலேயே திறமையுடன் பதிவு செய்துள்ளார் ஆசிரியர். அதனால் அந்தத் தமிழ் பரிச்சயமில்லாதவர்கள் ஆரம்ப 3-4 அத்தியாயங்களை மிகவும் மெதுவாகவும், அவதானமாகவும் படிக்கவேண்டியுள்ளது. அதன் பின்பு கிராமிய முஸ்லிம் தமிழ்நடையின் ஓசையும் ஆரவாரமும் வாசகரை அணைத்துச் செல்கிறது. பேச்சுகளுக்கு இடையிடையே நூல் ஆசிரியரின் தமிழ்நடை தமிழுக்கே செழுமை தருகின்றது; திக்குவல்லை கமால் யாழ்ப்பாணத்து பலாலி ஆசிரிய கலாசாலையிலே பயிற்றப்பட்ட ஆசிரியர், பரிசுகள் பெற்ற எழுத்தாளர் என்பதை ஞாபகமூட்டுகிறது.

இந்தச் சிறிய நாவலில் இயற்கையான ஒரு நாடகக் காட்சி அமைப்பு அத்தியாய வரிசையில் உண்டு. இதனை தொலைக் காட்சியில் தொடர் நாடகம் எழுதும் ஆசிரியர் கள் பயன்படுத்தினால் தமிழ் மக்கள் அந்தப் பயனையும் அடைவார்கள்.

தமிழ் பேசும் மக்களுக்கு இந்த நாவல் புதிய அனுபவத்தைத்தரும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

மருத்துவ பீடம்,
யாழ். பல்கலைக் கழகம்,
யாழ்ப்பாணம்.
*1994—03—30*

**சமர்ப்பணம்**

---

எனது
மூத்த சகோதரியும்
திக்குவல்லையின்
முதல் ஆசிரியையுமான
திருமதி எம். ஜே. எஸ். மன்சூரா வஹாப்
அவர்களுக்கு

# 1

பனிக்குளிரைக் கிழித்துக்கொண்டு அதிகாலை பாங்கோசை ஒலிப்பதோடேயே நஸீமா கண்விழித்துக் கொண்டாள். கண்விழிப்பதோடேயே அவளது நெஞ்சத் தடாகத்தில் அந்த இனிமையான நினைவு மலரும் மலர்ந்து மணம் பரப்பியது. அவசர அவசரமாக எழுந்து லாம்பின் திரியைத் தூண்டிவிட்டபோது, இருளைத் தலைகுனிய வைத்து வெளிச்சம் அங்கே ஆட்சிபீடமேறியது.

கிணற்றடிக்குப் போய் வுளூ செய்துகொண்டு வந்த அவளின் முகம், கைகளை முத்தமிட்டுக்கொண்டிருந்த நீர்த்துளிகளோடு மென்காற்று உறவாடி, ஸ்பரிஷக் குழந்தையை அவளுடலில் தவழ விட்டது.

சுபஹு தொழுதுவிட்டு, வழமைபோல் தொழுத பாயிலேயே 'யாஸீன்' ஓதி முடிக்கையில், வெளியே எழுந்த கலகலப்பு குளிக்கப்போகும் பெண்களுடையது தான் என்பதைப் புரிந்துகொள்ளாமலிருக்க அது என்ன வழமைக்கு மாறுபட்டதொன்றா...? இல்லையே!

''நஸீமா நஸீமா... குளிக்கப்பொக வாரா?'' வெளியே இந்த அழைப்பு ஹலீமாவுடையதுதான்.

''கொஞ்சம் நில்லுடீ இன்ன வரப்போர''— படபடவென்று பிடவை, சட்டைகளைச் சுற்றிக் கொண்டு... குடத்தையும் இடுப்பில் வைத்தவாறு உம்மா வையும் எழுப்பிவிட்டு வெளியேறினாள். சுபஹுக்கு பாங்கு சொன்னது முதல் சுமாராக ஆறுமணிவரை 'கொமரு'களின் ஆட்சிதானே! அவர்களைக் கவனிக்க

விண்ணிலே கண்சிமிட்டும் தாரகைகளைத் தவிர, வேறு யார்தான் இருக்கப் போகிறார்கள்.

அவர்களின் ஆட்சியில் அனைத்து விவகாரங்களும் அலசப்படுவது மிகமுக்கியமான இரண்டொரு கிணற்றடி களில்தானே? அதிலொன்றுதான் அந்தக் கிணற்றடியும். நஸீமா கோஷ்டியினர் அங்கு போயடையும் பொழுது, அங்கே அன்று திறக்கப்படவிருந்த நெசவுத் தொழிற் சாலை பற்றியே விமர்சனம் நடந்து கொண்டிருந்தது.

நஸீமா அவசர அவசரமாக குளிக்கத் தொடங்கி னாள். என்றுமில்லாதபடி இன்று இவ்வளவு அவசரத் துக்குக் காரணம் இல்லாமலில்லை. அது தெரிந்ததால் தான் ஹலீமா... நிஸாயா போன்றோரும் அவசரமாக இயங்கினர்.

பள்ளிவாசல் பக்கமாக சுபஹு தொழவருவோரின் செறிவு வரவர அதிகரித்துக் கொண்டிருந்தது. அப்படி யென்றால் சூரியோதயம் நெருங்குகிறது என்றுதானே பொருள்.

மூவரும் குளித்துமுடித்து வீடுநோக்கி நடைபோடும் போதுதான் ஹலீமா இலேசாகக் கதையை அவிழ்த்தாள்.

''நஸீமா... நாளக்கி ஒன்னப் பத்தித்தான் கெணத் தடியெல்லாம் கதப்பாங்க...''

''மெய்தான்''— நிஸாயாவும் பக்கத்துணை கொடுத் தாள்.

''இந்தப் பேச்சியளுக்கெல்லாம் பயந்துகொண்டீக் கேலுமா... ஒரு நாளக்கிப் பேசுவாங்க... ரெண்டு நாளக்குப் பேசுவாங்க... அதுக்குப் பொறகு எல்லாரும் ஏன்ட பின்னால வாரா இல்லயான்டு பாருங்கொடி...''— அவளது பதில் எதற்கும் துணிந்தவள் என்பதை வெளிக் காட்டியது.

''எங்களப் போலயா... நீ படிச்சீக்கியவள்... ஒன்ட பேச்சிக்கு உம்ம வாப்பமாருக்கும் திருப்பிப் பேசேல. நாங்களென்டா அடிபடி ரெடியாகிக் கொண்டுதான் பேசோணும்''— ஹலீமா தனது ஆற்றலை மீறிக் கட்டுப் படுத்தப்படும் நிலையைப் பிரஸ்தாபித்தாள்.

''பொகப்பொக எல்லம் சரிவரும்... பயப்புடப் படாது'' — கதைக்கு முத்தாய்ப்பு வைப்பதோடேயே அவளது வீடும் நெருங்கிவிட்டது.

''நஸீமா நாங்க போறடி... நாளக்கி வந்து எல்லம் செல்லோணும் தெரீமா...''— இருவரும் விடைபெற்றுச் செல்ல நஸீமா வீட்டுக்குள் புகுந்தாள்.

ஆறு... ஏழு... எட்டு... நேரம் எவ்விதக் கவலையு மின்றி வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. எப்பொழுதும் போல் காலை வேலைகளனைத்தையும் முடித்துக் கொண்டு, உம்மா தயாரித்து வைத்திருந்த இடியப் பத்தைச் சாப்பிட்டாள். மணம் நிரம்பி வழிந்துகொண் டிருந்ததாலோ என்னவோ இடியப்பம் இறங்க மறுத்து அடம்பிடித்தது.

இன்றைய நாளை எதிர்பார்த்து, ஏற்கெனவே கழுவி மடித்து வைத்திருந்த வொயில் ஸாரியை உடுத்தி இயல் பான அலங்காரங்களுடன் தயாரானாள்.

''மகள் நீ கௌமருப்புள்ள... ஊரெல்லாம் வாயத் தொறந்து கதக்க ரெடியாகிக்கோ நிக்கிய... பேச்சியளுக்கு எடம் வெக்காம அதபா பெய்த்திட்டு வாங்கொ... வாப்பக்கெண்டா இது அடியோட புரியமில்ல... ஏன்ட காச்சலுக்கு பேசாம நிக்கிய...'' அவளது உம்மா ஜொஹ ராத்தாவின் பயம் கலந்த புத்திமதி இது.

''நீங்க செல்லியதெல்லம் எனக்கு நல்லா வெளங்கு தும்மா. நீங்க ஒன்டுக்கும் பயப்புடத் தேவில்ல... பேசிய வங்க எப்படீம் பேசாமீக்க மாட்டாங்க... அதுக்குப்

பயந்து பயந்து நாங்கீக்கத் தேவில்ல...'' இது நஸீமாவின் பதில்.

''எப்பிடிச் சரி அல்லா ஈக்கான். பெய்த்திட்டு வாங்கொ''

அவள் பக்கத்து வீட்டுத் தங்கச்சியையும் துணைக்குக் கூட்டிக்கொண்டு வெளிக்கிட்டாள். பெண்களுக்கென்றே பின்பக்க வழிகள் இருக்கும்போது எதற்குத்தான் தயக்கம்...?

மலைவளவால் ஏறி... பியதாஸவின் தோட்டத்துக் குள்ளால் புகுந்து... ஐச மாமியின் கொல்லையால் சென் றால்... போகவேண்டிய இடம்தான்! சின்னஞ் சிறுமி யாக இருக்கும் காலத்திலேயே இந்த வழிகளெல்லாம் போய்வந்து நல்ல பழக்கம் அவளுக்கு! மலைவளைவுச் சரிவால் மெல்லமெல்ல ஏறியபோது தவிர்க்க முடியாமல் இளமை நினைவுகள் அவளது நினைவு மேடையிலே தரி சனம் தந்தன. கழுத்தளவுக்கு வளர்ந்த காட்டு மரங் களைக் கைகளால் விலக்கி... கால்பதித்து முன்னேறுகை யில் செக்கச் சிவந்த சிமிட்டிக் காய்களைக் கண்டதும், சில வேளைகளில் இரண்டு மூன்றுபேர் ஒரேயடியாகப் பாய்ந்து... விழுந்து... அடிதடிப்படுவதுண்டு. இன்று அந்தக் கூட்டாளிக்கூட்டம் சிதறிப்போய்...

''ஆ... எங்கியன் புள்ள போற?'' ஐச மாமியின் கொல்லைப் புறத்தால் வந்துகொண்டிருந்த ராஹிலாக் கிழவிதான் இப்படிக் கேட்டாள்.

''நான் ஃபெக்டரிக்குக் கொஞ்சம் போற ஆச்சி''— பதிலைச் சுருக்கிக்கொண்டு, மண்ரோட்டுக்கு இறங்கி னாள் அவள்.

சற்றுத் தொலைவில் தோட்டத்துக்குள் மதில்களின் அரவணைப்புடன் காட்சி தந்தது அந்தக் கட்டிடம்... நெசவாலை......! சட்டை, புளௌஸுகள் தயாரிக்கும்

தையல் நிலையம்... எல்லாம் உள்ளடக்கியதான... அக் கட்டிடம்தான் 'ஃபெக்டரி' என்று எல்லோராலும் அழைக்கப்படுகிறது. முன்னே 'வேஜீ' என்ற பெயர்ப் பலகை பலவர்ணங்களில் பளிச்சிட்டது.

அன்று, அந்தத் தொழிற்சாலை என்றுமில்லாதபடி எழில்ஜாலம் காட்டி புதுக்கோலத்துடன் பொலிந்தது. முன்பக்கமாக மேடையொன்றும் அமைக்கப்பட்டிருந்தது. அலங்கரிப்புகள் தொடர்ந்தன. தொழிற்சாலை விஸ் தரிப்புத்தான் இத்தனைக்கும் காரணம்.

சுமார் நாற்பதுபேர் வேலைசெய்யும் அங்கு சிறு பிள்ளைகளுக்கான உடுப்புகள்... பெண்களுக்கான பல ரக புளௌஸுகள் முதலியன தயாரிக்கப்படுகின்றன, இவற்றை மேலும் விஸ்தரிப்பதோடு, இருபத்தைந்து தறிகள் உள்ளடக்கிய நெசவாலையொன்றும் அன்று ஆரம்பிக்கப்படவிருந்தது.

பகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திறந்து வைப்ப தோடு, புதிதாக இருபதுபேர் சேர்த்துக்கொள்ளப்படு கின்றனர். இத்தனைக்கும் இதுவொரு கிளையாகும். ஊரைச் சேர்ந்த முஸ்தஃபா முதலாளி கொழும்பில் நடாத்திவரும் தொழிற்சாலையே தலைமையானது. வாராவாரம் அங்கிருந்து வரும் வேன்கள் அத்தனை தயாரிப்புக்களையும் சுமந்துசெல்வது வழக்கம். எப்படி யிருந்தாலும் எத்தனையோ பேருக்குத் தொழில் வாய்ப் பளித்து வரும் இந்த நல்ல முயற்சியைப் பாராட்டாத வாய்களே இல்லை.

தங்கச்சியை வீட்டுக்கனுப்பிவிட்டு ஃபெக்டரி கேற் றுக்குள் புகுந்தபோது, புதியதொரு காவியத் தலைவாச லில் தடம் பதித்துவிட்ட பூரிப்பு நஸீமாவைத் தழுவியது. அவளை வாழ்த்தி வரவேற்குமாப்போல் பல்வேறு கோணங்களிலுமிருந்தும் விழிமலர்கள் மலர்ந்து சிரித்தன. தெரிந்த முகங்கள்... தெரியாத முகங்கள்... என்றாலும்

நொடிப்பொழுதுக்குள்ளேயே ஒரு தோழமையுணர்வின் பூரிப்பு. அந்த அத்தனை முகங்களுக்குள்ளும் அவள் கண்கள், இரண்டொருவரையே துருவித் தேடின.

''நீங்க புதிசாச் சேரத்தானே வந்தீக்கி... அங்கால மூணாவது காமராவுக்குப் போங்க''.

முன்பின் பழகாதபோதும், முக அறிமுகம் மாத்திர முடைய அவன் காட்டிய பக்கமாக அவள் சென்றபோது அங்கே... அவளைப்போல அன்றைக்கென்றே வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்படவிருந்த பலரும் தங்களுக்குள் புதிய உறவின் படிக்கட்டில் சங்கமித்திருந்தனர். எல்லாமே புதிய முகங்கள்தானோவென்று நஸீமா தடுமாறித் தவித்தபோதுதான் அந்தக் குரல்...!

''நஸீமா...'' குரலைத் தொடர்ந்து அக்குரலை எழுப்பிய உருவத்தின் தழுவல்.

''ஆ... தயாவதி''— அவளுக்கு சந்தோசம் பொறுக்க முடியவில்லை. தனக்கு மிகவும் பழக்கமான ஒருத்தியும் வேலைக்குச் சேர வந்திருக்கிறாளே என்பதால்!

''நீங்களும் வாரது தெரியவே''— தெரிந்திருந்தால் இருவரும் ஒன்றாக வந்திருக்கலாமே என்ற பொருள்பட அவள் சொன்னாள்.

''நேத்து ராவுதான் நான் வாரத்துக்கு முடிவெடுத்த''— நஸீமா சொன்னாள்.

உம்மாவுடன் சேர்ந்து குடிதண்ணீர் கொண்டுவரப் போகும் காலத்திலிருந்தே நஸீமாவுக்கு தயாவதியுடன் பழக்கந்தான்!

கையோடு கொண்டுவந்த பகல் சாப்பாட்டை எல்லோருமாக ஒன்று சேர்ந்து சாப்பிடும்போது அலாதியானதொரு இன்பம் இருக்கத்தான் செய்தது.

நஸீமாவைப் பொறுத்தவரை இது முற்றிலும் புதிய அனு பவம்தான். தயாவதி பலாக்காய்ச் சுண்டலை அள்ளி நஸீமாவுக்குப் போட, நஸீமா தீய்த்த மீனை அவளுக்குக் கொடுக்க... முதல் நாளின் தொடர்புப் பரிமாறலே எவ்வளவு இன்பத்தை வாரி வழங்கிவிட்டது.

முதல்நாள் என்பதால் புதியவர்களுக்கு எந்தப் பொறுப்பும் இருக்கவில்லை. எல்லாம் புதினம் பார்ப்ப திலேயே கழிந்தது.

வெளியே ஒரே கலகலப்பாக இருந்தது. துள்ளிசை காற்றோடு கலக்க... சனங்கள் அலையலையாக வந்து சேர்ந்தவண்ணமிருந்தனர். நாலைந்து கார்கள் வரிசை யாக வந்து நின்றன. அதிலொன்றிலிருந்து முஸ்தஃபா ஹாஜியார் தலைநீட்டியதும் ராஜ மரியாதை அவருக்கு! புதிதாக வேலைக்குச் சேர்ந்தோர் நன்றி மலர்களைத் தூவி நின்றனர். நான்கு மணி நெருங்க நெருங்க எல்லோரும் எம்பியின் வரவை எதிர்பார்த்து நின்றனர்.

கால்மைல் தூரமளவு தோட்டத்திலும் பாதையிலு மாக செறிந்து வழிந்த சனத்துக்கு அப்பாலிருந்து 'சட் பட்' டென்ற பட்டாசு வெடிகள் முழங்கின. அதைத் தொடர்ந்து பேண்டு வாத்தியத்தின் ஒத்திசையோடு எம்பி ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்.

ஃபெக்டரி வாசலில் வைத்து மாலை அணிவித்து... கைகுலுக்கி வரவேற்றதைத் தொடர்ந்து நெசவாலையை பாராளுமன்ற உறுப்பினர் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார். வரவேற்புரையை அடுத்து அவர் உரையாற்றினார்.

''கைத்தொழில், ஆடை உற்பத்தித் துறையில் எமது நாடு துரிதமாக வளர்ச்சியடைந்து வருகிறது. கிராமப் புறங்களிலெல்லாம் பல்வேறு தொழிற்சாலைகள் அன்றாடம் திறக்கப்படுகின்றன. அந்த வகையில் இந்தக்

கிராமத்திலும் இத்தொழிற்சாலை விஸ்தரிக்கப்படுவதை யிட்டு நான் பெருமைப்படுகிறேன். இப்பகுதி இளைஞர் யுவதிகளுக்கு இங்கு பயிற்சி பெறவும் தொழில் புரியவும் வாய்ப்புக் கிட்டுவதையிட்டு அவர்கள் பெருமைப்பட வேண்டும்''— அவரது நீண்ட உரையில் இந்தக் கருத்துக் கள் எதிரொலித்தன.

ஐந்தரை மணியளவில் விழா நிறைவு பெற்றதைத் தொடர்ந்து சனங்கள் கலைய, ஃபெக்டரி ஊழியர்களும் வீடு செல்லத் தொடங்கினர்.

நஸீமாவுக்கு இப்பொழுது ஒரு துணை உண்டல்லவா? அவள் எதிர்பார்த்ததுபோலவே, தயாவதி வந்தழைத்த போது இருவருமாக வெளிவரத் தயாராகினர்.

''ஆ... நஸீமா போறா? ஒங்களோட கொஞ்சமாவது கதக்கேலாப் பெய்த்து...'' கலைந்த கேசமும் வியர்வைக் கோலமுமாக, கையில் ஃபைல்களோடு இப்படிச் சொன்னது நியாஸ்தான்.

''அதுக்கெனத்தியன்... ஒரே வேலேல ஓடித் திரிஞ்சீங்க... பொறகு கதக்கோமே...''— அவள் ஓரப் புன்னகையோடு விடை பெற்றாள். □

# 2

அன்று ஞாயிற்றுக் கிழமை. நியாஸ் கட்டிலை விட்டிறங்காது சாய்ந்து கொண்டிருந்தான். கால்களா லேயே ஜன்னல் கொளுக்கியைத் தூக்கித் திறந்த போது, மெல்லிய காற்று சும்மா வந்து நுழைந்துவிடாமல் ஒளிக் கற்றைகளையும் சுமந்து கொண்டு வந்தது.

''அட மகன் எங்கட ஜொஹரா மைனீட மகள் தட்டத் தனிய ஃபெக்டரிக்கி வேலக்கிப் போறாம்...''— குளிக்கப் போய்வந்த அவனது உம்மா கொண்டுவந்த தகவல்தான் இது!

கிணறுகளைச் சுற்றியுள்ள மரங்களுக்கும் மதில்களுக்கும் இந்த ஒரு கிழமையாகப் பெரிய அலுப்பாக இருக்கும். ஏனென்றால் அங்கெல்லாம் இப்பொழுது நஸீமாவைப் பற்றிய அலசல்தானே! அதன் பிரதிபலிப்புத்தான் உம்மாவின் பேச்சும் என்பதைப் புரிந்துகொள்ள அவனுக்கு எவ்விதச் சிரமமும் இருக்கவில்லை. அவளும் இந்த சமுதாயத்தின் மூத்த தலைமுறையின் ஒரு பிரதிநிதி இல்லையா?

இது நியாஸ் இவ்விடயத்தைக் கேள்விப்படும் முதலாவது சந்தர்ப்பமல்ல. பல தடவைகள் பலரின் வாயினால் கேள்விப்பட்ட சங்கதிதான்.

ஒரு சமுதாயத்தில், அச்சமூக உணர்வுகளுக்கு மாறுபட்டதாக இல்லாமலிருந்த போதிலும். புதியதொரு நடைமுறை முன்வைக்கப்படும் பொழுது அர்த்தமற்ற எதிர்ப்புகளும் சலசலப்பும் ஏற்படுவது இயல்புதானே?

இதற்கு, இத்தகைய கதைகளை அளந்துகொண்டிருப்போரை அடக்க முயற்சிப்பதைவிட, இன்னும் பலரை அந்த வேலைத்தலத்துக்கு அனுப்ப வழிவகுப்பதே சரியான பரிகாரமாக இருக்குமென அவன்எண்ணினான். எண்ணத்தைச் செயல்படுத்த வேண்டாமா என்ன? துணிந்து விட்டால் இனித் தோல்வி என்பது கிடையாதே!

ஃபெக்டரியில் இன்னும் எத்தனைபேர்களையென்றாலும் சேர்த்துக் கொள்ளக்கூடிய வாய்ப்பிருந்தது. 'வேஜீ' தயாரிப்புகளுக்கு நாட்டில் பரவலான கேள்வி இருந்ததால் உற்பத்தியை இன்னுமின்னும் பெருக்குவதே நிர்வாகத்தின் முக்கிய இலக்கு.

நியாஸ் துள்ளியெழுந்தான். குளிப்பு... காலையுணவு முதலிய வழமைகளை நிறைவுசெய்துகொண்டு, அவசர

மாக வெளியிறங்கினான். ஞாயிற்றுக்கிழமையென்றால் அன்றைய காலைப்பொழுது கழிவது அக்பரின் வீட்டில் தானே.

வீடு மாத்திரமா அது? அங்கே எத்தனை செயல் திட்டங்கள்... நடவடிக்கைகள்... வித்தூன்றியுள்ளன. பெயர் சொல்லிக்கொண்டு எந்த இயக்கமும் இல்லாவிட்டாலும் 'நியாஸ் நண்பர்கள்' அறிவு... எழுச்சி... சிந்தனை அனைத்தும் ஒன்றிணைந்த இயக்கம்தான். பெயர்ப் பலகை தொங்கவிடப்பட்ட எந்தக் காரியாலயங்களும் இல்லாவிட்டாலும்கூட அக்பரின் வீடு அவர்களுக்குக் காரியாலயம்தான்.

''ஆ... வா மசான் வா'' வீட்டுப் படிக்கட்டில் கால் வைக்கும்போதே உள்ளேயிருந்து சந்தோஷ வெளிப்பாட்டுடன் இப்படி அழைத்தது காதர்தான்.

''ஒன்னத்தான் பாத்துக்கோ நிக்கிய... இன்டக்கி பதினஞ்சி நிமிஷம் பிந்தீட்டாய்'' லாஃபிரின் குரல் இது.

''சரி அதால இப்ப எனத்தியன் கொறஞ்சி போன?'' அக்பரின் முதுகில் தட்டியவாறு சமாளித்துக்கொண்டான் அவன்.

அவர்கள் நால்வரும் ஆரம்ப வகுப்பு முதல் ஒன்றாகப் படித்து... ஆடிப்பாடித் திரிந்தபறவைகள். பசுமையான... மறக்க மனம் வராத இளமை நினைவுகளை இரைமீட்டி மகிழ்வது அவர்களின் அனுபவம். என்னதான் திறமையும் செயல்துடிப்பும் பொருந்தியிருந்தபோதிலும், நியாஸால் கணக்குப் பாடம் பாஸ்பண்ண முடியாமல் போய் விட்டது. இல்லாவிட்டால் அவனும் அடுத்த மூவரையும் போல இந்நேரம் ஒரு அரசாங்க ஊழியனாக இருந்திருப்பான். இதை நண்பர்கள் அடிக்கடி சுட்டிக்காட்டி மனவருத்தப்பட்டபோதிலும் நியாஸ் அதையொரு பொருட்டாக எடுப்பதேயில்லை.

''இன்டக்கி நாங்க முக்கியமான விஷயமொன்டப் பத்திக் கதக்கோணும்...'' நியாஸ்தான் ஆரம்பித்தான்.

''அப்ப நாங்க இவ்வளவு நாளும் கதச்சது முக்கிய மில்லாத விஷயங்களப்பத்தியா?'' இப்படிக் கேட்டான் காதர். அவன் எப்பொழுதும் நகைச்சுவையுணர்வு கூடியவன்தான்.

''சரி சரி செல்லு மசான்'' அக்பரின் கூர்மையான விழிகள் அகலத்திறந்தன.

''எல்லாருக்கும் தெரீந்தானே போன கெழம எங்கட ஃபெக்டரிக்கு புதிய ஆள்கள் சேத்தது. அதில நஸீமாம் ஒத்தி. ஏன்ட தெண்டிப்பிலதான் அவள் வந்த... அவளட துணிவ நாங்க பாராட்டோணும்... இப்ப அதல்ல விஷயம்'' முன்னுரையோடு தொடங்கினான் நியாஸ்.

''ஓ... இப்ப ஊரெல்லாம் இதப்பத்தித்தான் பேச்சி'' இது லாஃபிர்.

அந்தக் குட்டிக்கி மட்டுமல்ல அதோட சேத்தி ஓனக்குந்தான் ஏச்சி. நீதானாம் அந்த அநியாயத்தச் செஞ்சிக்கிய...'' காதர் சிரித்துச் சிரித்தே சொன்னான்.

''ஆ... பொறகு பொறகு''

''இப்படியெல்லாம் கத பரப்பியது தாரென்று தெரீமா...? எங்கட வில்லன்... குத்தூஸ் நானதான். கோபரேடீ டிரக்டர் போர்டிலிருந்து நீதானே அவரத் தட்டின... அந்தக் கோவத்த வெச்சிப் புதுக்க இது நல்ல சான்ஸாப் பெய்த்துபோல'' பின்னணியையும் தொட்டுக் காட்டினான் காதர்.

''ம்... எங்க போனாலும் குத்தூஸ் நானக்கும் எங்களுக்கும் ஃபைட்தான்.'' அக்பர் சிரித்துக்கொண்டே சொன்னான்.

''சரி மசான் இப்ப இதுக்கெனத்தியன் செய்த? இன்டக்கே இதுக்கொரு வழியப் பாக்கோணும்.'' நியாஸ் கொஞ்சம் உணர்ச்சிவசமாகச் சொன்னான். அந்த உணர்வின் பிரதிபலிப்பு அவன் முகத்தில் கோலம் காட்டியது.

''நஸீமாவ போகாம நிப்பாட்டோணும்... ஆனா அத நாங்க ஒரு நாளும் செய்யப்போறல்ல... இல்லாட்டி நாங்களும் பேசித் திரியோணும். ம்... அதுக்கெங்கியன் டைமீக்கிய... இதெல்லாத்தேம்பாக்க நல்ல வேலயொன் டீக்கி... கொஞ்சம் கஷ்டப்பட்டுச் சரி இன்னமின்னம் புள்ளயள ஃபெக்டரிக்கனுப்போணும்.''

காதரின் யோசனையைக் கேட்டதும் அதைத்தான் செயலாக்க வேண்டுமென்ற பாங்கில், எல்லோருமே அங்கீகார முகமலர்ச்சியோடு ஒருவரையொருவர் மாறி மாறிப் பார்த்துக்கொண்டனர்.

''ஓ... மசான் இதத்தான் செய்யோணும்... உம்ம வாப்பமாருக்கிட்டப் பெய்த்து வெளங்கப்படுத்தினா புரியப்படாமலயா ஈப்பாங்க? நாங்க பொகாததுதான் குத்தூஸ் நானாப் போலாக்களுக்கு எடமாகிய.'' இதுதான் சந்தர்ப்பமென்று நியாஸூம் கொஞ்சம் இறுக்க மாகவே சொன்னான்.

''எனக்கும் கொஞ்சம் புள்ளயளத் தெரீம். மம ஊசுப் காக்கட பேத்தி... பாத்தும்ம நாச்சியட மகள்... அத்து ரஹீமட தங்கச்சி... இப்படி எங்கட அசல்லே ஈக்கியாங்க எனத்தியன் செல்லிய பேசிப் பாக்கோமா?'' காதர் அடுத்தவர்களின் பதிலை எதிர்பார்த்து நின்றான்.

''எனத்தச் சென்னாலும் மசான்... நாங்க செல்லியத்த கேக்கிய நெலமக்கி இன்னேம் எங்கடுரு மனிசர் வரல்ல... அதச்சொட்டீம்...''—அக்பர் இப்படிப் பீடிகை போட்ருக் கொண்டிருக்கையில்...

''டக்... டக்''

உள்ளேயிருந்து இப்படிக் கதவில்தட்டி அக்பரை அழைத்தது அவனது தங்கை ஸரீனாதான்.

''ஆ சரிசரி தேத்தண்ணியத் தாங்கொ... இங்க புதிய ஆக்களொத் தருமில்ல.'' இப்படி நையாண்டிவிட்டது லாஃபிர்தான்.

''புதிய ஆள்களில்லாட்டீம் புதிய யோசினயல் ஈக்கிதானே.'' விடுவாளா அவள்.

''இங்க கொஞ்சம் நில்லு ஸரீனா''

உள்ளே போகப்போனவள் நானாவின் குரலைக் கேட்டு திரும்பிநின்று கதவுச் சேலையைக் கொஞ்சம் விலக்கி தலையை நீட்டி ''எனத்தியன்'' என்று கேட்டாள்.

''நாங்க அங்கேம் இங்கேம் ஆள்தேடிக் திரீதத்தப்பாக்க எங்கடெங்கட ஆள்கள அனுப்பினா அதுதான் மத்தவங்களுக்கு பாடமாயீக்கும்... இப்ப ஸரீனக்கு நான் சென்னா பொகாமலீப்பாளா?''

அவள் சற்றுமே எதிர்பார்க்காததொன்றை எல்லோரது முன்னிலையிலும் தூக்கிப் போட்டபோது அவளுக்குத் திண்டாட்டமாய்ப் போய்விட்டது.

''ஸரீனா எங்களப்பத்தி ஒனக்கு மிச்சம் செல்லத்தேவில்ல... இப்ப நஸீம ஃபெக்டரிக்குப் போறத தெரீந்தானே... அவள எப்பிடிச்சரி நிப்பாட்டியத்துக்கு ஒரு கூட்டம் பாக்கிய. நாங்க எப்பிடிச்சரி இன்னமின்னம் அனுப்பப் பாக்கிய... இதுக்கு ஊடுடா ஆக்கள் தேடியத்தப் பாக்க எங்களுக்குள்ள ஈக்கியவங்கள அனுப்பியது நல்லந்தானே...

''ஸரீனவ அனுப்ப யோசிக்கியது சல்லி ஆசக்கல்ல. ஒன்ன இன்னம் எத்தின காலத்துக்கும் எனக்குப்

பாக்கேலும். ஆனா நீ போனா இன்னமுள்ளவங்களுக்கும் வழிகாட்டியாயீக்கும். நஸீமக்கும் தைரியமா ஈக்கும்.''

''நான செல்லியென்டா... நான் போறன்.'' அவள் அடக்கத்தோடு சம்மதம் தெரிவித்தாள்.

''மசான் நான் எங்கட தாத்தட மகளேம் அனுப்பியன். அவள் டீச்சிங் எபொய்மென்டுக்கும் எப்ளிகேசன் போட்டீக்கி. அது கெடக்கங்காட்டீம்சரி பொகட்டும்.'' லாஃபிரும் உறுதியளித்தான்.

எல்லோருக்கும் மிக்க மகிழ்ச்சியாகப் போய்விட்டது. இந்த விஷயம் நாளைக்கே கைகூடினால், அதைப் பார்த்து இன்னும் பலர் தயாராகி... வெறும் கதைகளெல்லாம் மண்ணோடு மண்ணாகிப் போய்விடும். பல குடும்பங்களுக்கு வாழ்க்கைச் செலவுக்கும் வழிதிறந்துவிடும்.

தேநீர்க் கோப்பைகளை எடுத்துக்கொண்டு ஸரீனா மீண்டும் உள்ளே சென்றாள்.

நியாஸுக்கு அப்போதுதான் நிம்மதி ஏற்பட்டிருக்க வேண்டும். அதை வெளிச்சுமந்துகொண்டு நீண்ட பெருமூச்சொன்று விடைபெற்றது.

''எனக்கு இப்பதான் நிம்மதி. இவ்வளவு லேசா விஷயம் சரிவருமென்டு நான் நெனக்கல்ல.'' நியாஸின் மகிழ்ச்சி வெளிப்பாடு இது.

''ஹஹ்... ஹா''—அக்பரும் லாஃபிரும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

''மசான் இந்த முடிவ நீ வரமுந்தியே நாங்க எடுத்திட்டோம்... சும்மா கொஞ்சநேரம் ஒன்ட முன்னுக்கு ஒரு எக்ட். அவளவுதான்.'' லாஃபிர் சொன்னான்.

நியாஸின் கண்கள் வியப்பால் விரிந்தன. எல்லோருமே ஒரு மரத்துக் கனிகள் அல்லவா? அவன் கற்பனைக் கண்களுக்குள் நாளை ஃபெக்டரியில் முக்காடு போட்ட மூன்று முகங்கள்.

''அல்லாஹு அக்பர்... அல்லாஹு...''

ளுஹருக்கான பாங்கோசை காற்றில் மிதந்து வந்து அவர்களை அமைதிப்படுத்தியது.

''டைம் போனதே வெளங்கல்ல... சரிசரி வாங்க வாங்க பள்ளீப்போம்''

நால்வரும் தொப்பிகள் சகிதம் பள்ளிவாசலை நோக்கி நடக்கத் தொடங்கினர். □

# 3

நத்தார் பண்டிகை நெருங்கிக் கொண்டிருந்தது. ஃபெக்டரியில் இடையீடற்ற வேலைகள். உடைகள் தயாரிப்பதற்காக பல்வேறு ரகமான துணிவகைகள் கொழும்பிலிருந்து வந்த வண்ணமிருந்தன.

கணிப்பீடுகளுக்கேற்ப உடைகளுக்கான துணிகளை வெட்டிக் கொடுப்போரா ஒரு பக்கம். அவற்றை தைப்போர் இன்னொரு பக்கம். பொத்தான் பிடித்தல், பூ வேலைப்பாடுகள், பெட்டியடைப்பு முதலிய சில்லறை வேலைகள் மற்றொரு பக்கம்.

நஸீமா... தயாவதி... ஸரீனா... இப்படிப் பற்பலரும் ஒன்றுகூடி நின்று பொத்தான் பிடிப்பதில் ஈடுபட்டிருந்தனர். புதியர்கள் அல்லவா? போகப் போகத்தானே பொறுப்பான வேலைகளைக் கொடுப்பார்கள்.

''கை ஒளயுதுடி'' விரல்களை வளைத்து நெரித்து சொட்டு முறித்தபடி சொன்னாள் நஸீமா.

''பதினொரு மணி'' ஸரீனாவும் எழுந்து நின்று சற்று அங்குமிங்குமாகப் பார்த்தாள்.

''ஆ இப்படி வேலசெஞ்சி சரிவராது. இன்டக்கி எப்பிடிச்சரி இதெல்லாம் முடிக்கோணும். சும்மா கதச்சிக் கதச்சீந்தா அஞ்சிமணிக்கும் பொகக்கெடக் காது'' சட்டைகள் வெட்டும் பொடிஹாமிதான் இப்படிப் பிரஸ்தாபித்தாள்.

''ஆ அதெப்பிடியன் நாங்க சும்ம நிக்கல்லேன். வந்த நேரத்தேலீந்து வேலசெய்த. இப்ப தேத்தண்ணி டைம்'' நஸீமாவின் இந்தப் பதில் பொடிஹாமிக்குப் பிடிக்க வில்லை.

''சும்மா நிக்கியென்டு நான் செல்லல்ல. சீக்கிரம் சீக்கிரம் வேல செஞ்சா சொணங்காமப் பொகெலு மென்டுதான் சென்ன.''

''நாங்க சும்ம நின்டாக்க... இல்லாட்டி கதச்சிக்கோ நின்டாக்கத்தானே அப்படிச் சொல்லோணும்.''

''கொஞ்சம் மனம் வெச்சி செஞ்சா முடிச்சிப்போடலு மேன், இந்த நாளேல வேலேம்கூட, அதச்சொட்டீந் தான் நான் அப்படிச்சென்ன.''

''எப்பிடி வேலீந்தாலும் அந்த டைமாகங்காட்டீந் தான் செய்யேலும்... அதுக்குப் பொறகு ஊட்டியளுக்குப் பொகோணும்.''

''நீ சும்ம எல்லந் தெரிஞ்ச மாதிரி பேசாமிரீ நஸீமா. இவளவு காலமும் நாங்க நேரஞ்சென்டாலும் முடிச் சிட்டுத்தான் போற...''

''ஆ... அப்பிடியா? நாங்களும் எத்தினமணியாகங் காட்டீமென்டாலும் செய்த... அதுக்கும் கூலி தாரென்டா''

பொடிஹாமிக்கும் நஸீமாவுக்குமிடையில் கொஞ்ச நேரம் இப்படி வாய்மோதல் நடைபெற்றதை அவதானித் துக்கொண்டிருந்த அந்தச் சாலைக்குள்ளிருந்தோர், நஸீமாவின் கடைசிக் கருத்தைக் கேட்டதும் தங்களை மறந்தவர்களாக வாய்விட்டே சிரித்துவிட்டனர். அதன் வெளிப்பாடு 'இது கனவிலும் நடக்காத காரியம் என்பதுதான்.

''நஸீமா ஒனக்கொண்டும் தெரிய. சின்னப் புள்ள மாதிரி இப்படியெல்லம் பேசிய, இது நல்ல காலத்துக் கல்ல. சின்ன பொஸ்ஸுக்கு கேள்விப்பட்டா ஊட்டுக்குப் பொகவாகும்'' அவள்மீது அனுதாபம் கொண்ட ஒருத்தி மெல்லிதமாகச் சொல்லி வைத்தாள்.

''ஊம்... ஊட்டுக்குள்ள அவிஞ்சவிஞ்சி ஈந்தத்துக்கு ஜொப் குடுத்தீக்கியது போதாத்துக்கு வாயட நீள்பத்தப் பாத்தா... வந்து ஒரு மாஸமாகல்ல அதுக்குள்ள இப்பிடி யென்டா பொகப்பொக எப்பிடியோ தெரிய.'' இது இன்னொருத்தியின் பொறாமை கலந்த குத்தல்.

''முந்தி வந்தாலும்சரி பிந்தி வந்தாலும்சரி இப்ப நானும் இந்த ஃபெக்டரீலதானே வேலசெய்த... அப்ப எனக்கும் இந்த எதப்பத்தீம் பேசேலுந்தானே.''

நஸீமா ஸரீனாவைப் பார்த்து இப்படிச் சொன்னபடி ஒரு கண்ணோட்டம் விட்டபோது பெரும்பாலான முகங் களில் அவளுக்கு ஆதரவு வெளிப்பட்டு நின்றது. எவ்வளவு காலமாக வெளிச் சொல்ல முடியாமல் இந்த விடயங்கள் அவர்களது மனதுக்குள் புதைந்து கிடந்ததோ!

''சரிசரி தேத்தண்ணி குடிச்சிட்டு வரோம்'' பேசத் தொடங்கினால் தொடர்ந்து கொண்டிருக்கும் நஸீமாவின் குணம் தெரிந்து அவளை இழுத்துக்கொண்டு வெளியேறினாள் ஸரீனா. பதினைந்தே நிமிடத்திற்குள் திரும்பியும் வரவேண்டுமே!

பெயரில் என்னவோ பெரிய ஃபெக்டரிதான். ஆனால் நிர்வாக ரீதியாக அரசாங்க ஒழுங்கு நடைமுறைகளில் சிலவற்றை மேற்பூச்சாகக் கையாள்கிறார்களே தவிர, அங்கு அதற்குரிய மொத்த வெளிப்பாடுகளோ, அங்கு கடமையாற்றும் ஊழியர்களின் நலவுரிமைகளோ பேணப் படுவதென்பது வெறும் கனவுதான். அடிக்கடி சும்மா இருந்தவர்களுக்கு 'ஜொப்' கொடுத்திருப்பதாகப் பறை சாற்றப்படுகிறதே தவிர, உழைப்பைக்கொட்டி... உற்பத்தியைப் பெருக்கி... வருமானத்தை உயர்த்தும் ஊழியர்களுக்கோ, நடப்பது கழுத்தறுப்புத்தான். அதை யார் தான் எடுத்துப் பேசுகிறார்கள்? அதைப் பேசுபவர்களுக்கு அடுத்தவர்கள் குறைந்தபட்ச ஆதரவையாவது காட்ட வேண்டாமா?

வீட்டிலிருந்து காலையில் ஃபிளாஸ்கில் கொண்டு வந்த தேநீரை இருவரும் பருகிவிட்டு மீண்டும் வேலைச் சாலைக்கு வரும்போது ஆஃபீஸ் அறையில் சின்னபொஸ் இருக்கவில்லை. எங்காவது மேற்பார்வைக்குப் போயிருப்பார் என்ற எண்ணத்தோடு இருவரும் வந்தபோது, எதிர்பாராதவிதமாக சின்னபொஸ் இடுப்பில் கைகள் குத்தியபடி உள்ளே ஏதோ அவதானித்துக் கொண்டிருந்தார். அவரது எடுப்பான தோற்றம் ஒரு முதலாளிக்கே உரிய கம்பீரத்தை வெளிப்படுத்தியது. சும்மாவா பெரியபொஸ்ஸின் மூத்த மகனல்லவா?

இருவரது காலடிச் சத்தத்தைக் கேட்டதும் சற்று விலகி உள்ளே போக இடமளித்தார். நஸீமா புன்னகைத் கொண்டே அவரைப் பார்த்தபோது, அவர் முகத்தில்

ஏதோ கோபத்தின் குறியீடுகளைத்தான் காணமுடிந்தது. அவர் அங்கே வரும்போது எல்லோரும் கூடிக் கும்மாள மடித்துக் கொண்டிருந்தார்களோ என்னவோ?

தொடர்ந்து வேலை உச்சக்கட்டத்தை எட்டி நின்றது. பொடிஹாமியின் முகத்திலென்றால் விடிவே தெரியவில்லை.

''பாத்திமா எங்கியன்?'' பியோனின் குரல் எல்லோ ரையும் ஒருகணம் அப்பக்கமாகத் திருப்பியது.

எல்லோரும் ஃபாத்திமாவைப் பார்க்க அவள் ''எனக்தியன்?'' என்றபடி எழுந்தாள்.

''ஒங்கட எப்ளிகேஷன் ஃபோமில பொழயாம். ஒபீஸுக்கு கொஞ்சம் வரச்சென்ன.'' அவன் கூறிவிட்டு நகர்ந்தான்.

உள்ளே ஒருவரையொருவர் மாறிமாறிப் பார்த்துக் கொண்டனர். சிலர் அர்த்தம் நிரம்பிய முறுவல்களைக் கூடப் பரிமாறிக் கொண்டனர். ஃபாத்திமா அங்குவந்து சேர்ந்து மூன்றே நாள்தான். நஸீமாவின் தொடக்கி வைப்பு ஃபாத்திமாவோடு இருபத்தி ஆறில் வந்து நிற் கிறது. இன்னும் எத்தனைபேர் வந்து சேர்வார்களோ!

சின்னபொஸ்ஸை எப்பொழுதுதான் போய்ச் சந்திப் பதென எண்ணியிருந்த ஃபாத்திமாவின் செவிகளில் யாரோ 'நாலுமணி' என்று சொன்னது கேட்டதும் திக் கென்றது. இன்னும் ஒரேயொரு மணிநேரந்தான் இருக் கிறதே! அதற்குள் சந்திக்க வேண்டாமா? உடுப்புகளை பொலிதன் பையிலிட்டு பெட்டிகளில் அடைப்பதுதான் அவளது வேலை. முடித்தவைகளையெல்லாம் அடுக்கி விட்டு மெதுவாக வெளியே நடந்தாள்.

''ஃபாத்திமா எங்கியன் போற?'' ஒருத்தியின் கேள்வி இது.

''ஒபீஸுக்கு வரச்சொன்னத்துக்கு'' மெதுவாக பயந்த பாணியில் பேசுவது அவளது இயல்புதானே!

''ஆ அப்ப சீக்கிரம் போங்க எனத்தியோ தெரிய''

பாவம்; அப்பாவி அவள் ஒன்றுமே பேசாமல் மெது வாகச் சென்றபோதும் 'எனத்தியோ தெரிய' என்ற நையாண்டியின் அடிநாதத்தைப் புரிந்துகொண்ட எதிரொலிகள் ஓய ஒரு சில நிமிடங்கள் எடுத்தன.

ஒஃபீஸை நெருங்கியதும் ஃபாத்திமாவின் உட லெங்கும் என்னவென்று சொல்லமுடியாததொரு பதட்டம் சதிராடியது. என்ன செய்வது... எப்படிப் பேசுவது... எதுவுமே புரியவில்லை அவளுக்கு.

கழுத்தை அடிதொட்டு முதுகுப் பக்கமாகப் போர்த்திய ஸாரியின் ஒரு நுனி, அவள் விரல்களுக் கிடையில் விளையாட மெல்ல அறைக்குள்ளே அடியெடுத்துவைத்தாள்.

''ஆ... வாங்கொ'' ஃபைல் ஒன்றுக்குள் மூழ்கியிருந்த சின்னபொஸ் ஃபாத்திமாவைக் கண்டதும் அதை மூடிவைத்துவிட்டு நிமிர்ந்து அமர்ந்தார்.

அவள் பளிச்சென்ற கண்கள் துடிதுடிக்க முன்பின் பழக்கமற்ற நிலையில் நின்றுகொண்டிருந்தாள்.

''ஒங்கட எப்ளிகேஷன் ஃபோமில படிப்பு சம்பந்தமா ஒண்டும் போடல்லியே... நீங்க ஜீ. சீ. ஈ. படிச்செண்டு சென்னாங்க.''

''அப்பிடியா நான் நெனச்ச போடத்தேவில்லயெண்டு ஒணுமெண்டாப் போடியன்.''

''இந்தாங்கொ''

அவர் நீட்டிய படிவத்தை அவளெடுத்தபோதும், கையில் பேனா இல்லாமல் தடுமாறியபோது...

''பேனயா தேடிய... இந்தாங்கொ''

பேனாவையும் வைத்தெழுத ஃபைலொன்றையும் கொடுத்தபோது அவள் நடுநடுங்கியபடியே எழுதிக் கொடுத்தாள்.

''அட ஆறுபாடம் பாஸாகிக்கே... நீங்க தொடர்ந்து படிச்சிக்கேலுமே...''

அவள் எந்தப் பதிலும் சொல்லவில்லை. மௌனமே பதிலாக அமைந்தது.

''ஒங்களுக்கு படிப்பீக்யியத்தால நம்பிக்கயா நடந்து கொண்டா பொஸ்ஸிட்டச் சொல்லி ஸ்டோர் கீப்பரா போடேலும்.''

இந்த அன்பும் அனுதாபமும் ஏன்தானென்று அவளுக்குப் புரியவில்லை. வந்த காரியம் முடிந்த பின்பும் இப்படியெல்லாம் என்ன கதை என்றுகூட அவள் யோசித்தாள்.

''எத்தினயோ மாதிரி ஆள்கள் இங்க நிக்கியாங்க... கவனமா நடந்துகொளோணும். ஒங்களுக்கு என்ன பிரச்சினயென்டாலும் பயப்புடாம எனக்கிட்ட வந்து செல்லுங்கொ.''

அவள் மெதுவாகத் தலையாட்டினாள். இப்படியெல்லாம் இரக்க சுபாவம் கொண்ட ஒருவரின் மனதை மகிழ்ச்சிப்படுத்த வேண்டாமா என்ன?

''சரி போங்க''

சிரித்த முகத்துடன் விடைகொடுத்தார் அவர். அவரது முகத்தில் இதற்குமுன் அப்படியொரு பொலிவை அவள் கண்டதில்லை. சும்மா விடுவாளா அவளும் பதில் முறுவலுடன்தான் வெளியே வந்தாள்.

வேலைச் சாலைக்குள் புகுந்த அவளை யாரோ ஒருத்தியின் ஹ்ற...ம்' பெருமூச்சுதான் வரவேற்றது.

"எனத்தியன்டீ அப்படித்தான் பஸந்தான சாமா னியளுக்குத்தானே எல்லாரும் புரியப்படுகிய... எங்கட புளௌஸியள் நல்ல பஸந்தச் சொட்டீந்தானே எந்த நாளும் ஓடர் வார."

இதன் உள்ளர்த்தம் ஃபாத்திமாவுக்குப் புரிந்ததோ என்னவோ, அவள் அதற்கு எந்தப் பிரதிபலிப்பையும் காட்டாமல்... அதற்கிடையில் சேர்ந்திருந்த பாக்கிவேலை களைச்செய்யத் தொடங்கினாள்.

"வேன் வந்திட்டு வேன் வந்திட்டுது."

ஜன்னலுக்குள்ளால் எல்லோரும் எட்டிப் பார்த்தனர். நூல் கொண்டுவரப் போயிருந்த ஜினதாஸாவும் நியாஸும் வந்திருந்தனர். நியாஸை இன்று சந்திக்க வாய்ப்புக் கிடைக்காமல்போகுமோ என்று பயந்து கொண்டிருந்த நஸீமாவுக்கு மகிழ்ச்சி தாங்க முடியா வில்லை.

அன்று நாற்பது நிமிடம் கழிந்துதான் எல்லோராலும் வெளிக்கிட முடிந்தது. தொடங்கிய வேலைகளை முடிக்க வேண்டுமென்பது ஃபெக்டரியின் நியதியல்லவா?

கைப் பைகள் சகிதம் எல்லோரும் வெளியேறுகையில், தன்னைமறந்து வியர்வைக்குளிப்பாட்டலுடன் சோர்ந்து போன நிலையில், நூல்பொதிகளைச் சுமப்போரை அவதானித்துக்கொண்டிருந்த நியாஸ் நஸீமாவின் பக்கமாக மெல்ல வந்தான்.

"ஆ! நல்ல காலம் இப்பவாவது வந்து சேந்த" அவள்தான் சொன்னாள்.

"ஃபேமிட் காரருக்கெல்லாம் இன்டக்கித்தான் நூல் குடுக்கியாங்க... அதுதான் சொணங்கின."

''ஒங்களோட எத்தினயோ செய்தியள் கதக் கோணும்.''

''பாருங்கொ இப்ப டைமில்லேன். அப்ப நான் அந்திக்கி ஊட்டுக்கு வாரனே.''

அவள் தலையாட்டினாள். □

# 4

மஃரிபு தொழுதுவிட்டுவந்த நியாஸ், பள்ளிவாசலுக்குள் நிலவிய பரபரப்பையும் முன்சாலையில் விரிக்கப்பட்டிருந்த வெண்விரிப்புக்களையும் ஒப்பிட்டு நோக்கிய போதுதான் அன்று வெள்ளிக்கிழமை இரவென்பதைப் புரிந்துகொண்டான். வெள்ளி இரவில் வீட்டில் ஒரு யாஸீன் ஓதுவது அவனைப் பொறுத்தமட்டில் ஒரு முக்கிய கடமை. இது சின்னப்பருவம்முதலே அவனுக்குள் வேர்யாய்ந்துவிட்டதொன்று. மறந்துபோய்க்கூட அந்நாளில் அவன் விளையாட்டுவாக்கில் எங்காவது தாமதித்துவிட்டால் கையில் தடியோடு தேடிவரும் வாப்பாவின் நினைவு அன்று அவர் தேடிவராதபோதும் அவன் மனக்கண்ணில் தெரிந்தது.

வெள்ளிக்கிழமை இரவென்பது முன்பே ஞாபகத்தில் எழுந்திருந்தால், நஸ்மாவிடம் வீட்டுக்கு வருவதாகச் சொல்லியிருக்கமாட்டான். என்ன செய்வது? அவனை எதிர்பார்க்க வைத்துவிட்டு ஏமாற்றுவது கூடாதென்ற நல்லெண்ணம் அவனை அவள் வீட்டுப்பக்கமாக இழுத்துச் சென்றது.

சும்மாவா? வெள்ளி இரவென்றால் ஒரே பக்திமயம்தான். வியாழன் பின்நேரம் முதல் மறுநாள் ஜும்ஆத் தொழுகைவரை புனிதம் நிறைந்த பொழுதுகள் அல்லவா? பாதை இருமருங்கிலும், எல்லா வீடுகளிலிருந்தும் ஏதாவது ஓதல் ஒலி எழுந்துகொண்டேயிருக்கும். சாம்பிராணி... ஊதுவத்திகளின் மணப்பரவல் வேறு!

நஸீமாவும் விட்டுவைப்பாளா? அவள் வீட்டு வேலியருகே நெருங்குகையில் ''மௌலாய ஸல்லிவஸல்...'' என்ற புறுதா ஓதல் காற்றிலே கலந்துவந்து அவன் காதுகளைத் தழுவியது. ஒரு சில நிமிடங்கள் அப்படியே நின்றான். எந்த நேரத்தில் போனாலும் இப்படிப் புனிதமான பொழுதுகளில் போய்ப்புகுந்துவிடக் கூடாதல்லவா?

ஆனால் அதிக நேரம் அவன் அங்கு நிற்க வேண்டிய நிலை ஏற்படவில்லை. ஏனென்றால் நியாஸ் வருவது தெரிந்ததால் முன்கூட்டியே ஓத ஆரம்பித்து ஏழரைக்கே எல்லாம் முடித்துவிட்டாள் அவள்.

முற்றத்தைத் தாண்டி... பெற்றோல்மெக்ஸ் ஒளிப்பரவலுக்கூடாக வீட்டுவாயிலை அடைகையில், கிதாபை மூடிவைத்துவிட்டு முக்காட்டைக்கூடக் கழற்றாமல் அவள் முன்பக்கமாக வந்தாள்.

''ஆ வாங்கொ வாங்கொ நல்ல நாளேல மஃரிபுக்குப் பொறகு ஒங்கட மொகத்திலதான் முழிச்ச''

''அப்பிடியா அப்ப ஆண்டவன் எல்லம் நல்லாக்கி வெப்பான்'' தொப்பியை சரித்துப் போட்டுக்கொண்டே அவன் உள்ளே புகுந்தான்.

அவள் கதிரையை இழுத்துப்போட்டு... பேப்பர் தாளொன்றை விரித்து அமர்வதற்கு வசதிசெய்து கொடுத்தாள்.

''ஆ மருமகனா வந்தீக்கிய? தாரோ தெரிய பேச்சிக்கொரல் கேட்டு வந்த பாக்கம்... ...ஒரொரு கொழப்பத்த எடுத்துப் போடியெனா'' அவனது மாமியான நஸீமாவின் உம்மாவின் கூற்று இது.

ஏதோ என்னவோ நியாஸை எல்லோருமே குழப்பக் காரனாகவேதான் கணித்திருக்கிறார்கள். பழைமைப் பூஞ்சணம் பிடித்துப்போன சமுதாய அமைப்பில் புதிய சிந்தனைகளை முன்வைப்பவர்களை... அதே பழைய சமுதாயத்தின் பிரதிநிதிகள் அதனைக் 'குழப்பம்' என்ற வார்த்தையால்தான் அழைத்துவிடுகிறார்கள்.

''ஓ மாமி நீங்க சொல்லியது மெய்தான்... நான் அல்லாவுக்கும் ரஸூலுக்கும் மாத்திமில்லாத கொழப்பக் காரன்தான்''

''ஹி... ஹி...'' பொக்கை வாய்ச்சிரிப்போடு அவள் உள்ளே செல்ல உம்மாவின் பின்னால் நஸீமாவும் சென்றாள்.

அவன் கண்களைச் சுழற்றி நான்கு புறமும் பார்த்தான். பக்கிஸ் பலகை மேசையிலிருந்த 'யுகபுருஷர்கள்' என்ற புத்தகத்தை எடுத்துப் புரட்டிய போது கலிலியோ... ஆப்ரஹாம் லிங்கன்: ... சி.வி. ராமன் முதலியோரின் உருவங்கள் ஆங்காங்கே தெரிந்தன.

''இந்தாங்கொ''

அவள் உள்ளே சென்றது சும்மாவல்ல. காரணத் தோடுதான் என்பது அவனுக்குப் புரிந்துவிட்டது. அவளது கைகளில்... வெள்ளி இரவின் விசேட்மான 'சுக்குத் தண்ணி' க் கோப்பை.

ஒருமுறை உறிஞ்சி விழுங்கியவன் அவளைப் பார்த்து ''எப்பிடி... ஃபெக்டரி செய்தியள்? எனத்தியோ முக்கி யமா செல்லியத்துக்கு ஈக்கியெண்டு சென்னீங்களே'' என்று கேட்டாள்.

''எல்லமே முக்கியமான செய்திதானே. பெரிய அநியாயமியள்தான் நடக்குது''

''அப்பிடி எனத்தியன்? கொஞ்சம் விபரமா செல் லுங்கோ''

''ஓ இனி ஒங்களுக்கெனா... நீங்க கணக்குப் புள்ள... ஜினதாஸேம் அப்பிடி... ரெண்டு பேருக்கும் நல்ல சம்பளம்... நீங்களியள் எங்கியன் வாய்தொறக்கப் போற.''

''அப்பிடில்ல நஸீமா. நாங்களும் யோசிச்சி யோசிச்சித்தான் நிக்கிய... நீங்க நெனக்கிய மாதிரி எங்களுக்கு பெரிய சம்பளமொன்டுமில்ல... அது சரி, இதப்பத்தி நீங்க மட்டுந்தானே பேசிய... மத்தவங் கெல்லாம் பேசாம நிக்கிய...எல்லாருமே இப்பிடி யோசிச் சாத்தான் ஒரு நடவடிக்க எடுக்கேலும்.''

''அப்படிச் செல்லவாண... வெட்டேல பேசினா பொஸ்ஸுக்கு கேள்விப்படும்... கடசில ஈந்த வேலேம் இல்லாப் பொகுமென்டுதான் எல்லாரும் பேசாமீக்கிய.''

''அப்ப சம்பளம் போதான்டு எல்லாரும் ஒத்துக் கொளுகிய''

''மறுபேணம் நீங்க செல்லிய... சம்பளம் போதாத்த மட்டுமல்ல... அஞ்சிமணிக்குப் பொறகு வேலசெய்தத் துக்கும் எல்லாரும் எதுப்பு.''

''ஆ அப்பிடியா? அப்பிடியென்டா ஒட ணடியா நாங்கெல்லாரும்கூடி இதுக்கொரு முடிவெடுக் கோணும்... ஆனா இனுமொன்டு...''

''அதெனத்தியன்?''

''எப்பிடீம் இதுக்குள்ள ஒன்டுரெண்டு எதுப்பா யிக்கும். அவங்க விஷயத்த மறுபொக்கத்துக்கு குடுத்திரு வாங்க அப்பிடி நடந்தா?...''

''எங்க பார்த்தாலும் இப்பிடி ஆக்கள் ஈக்கிதானே... நேத்து பொடிஹாமி எனக்கு லோப் போட்டிட்டா...

அவ சின்ன பொஸ்ஸட வாலொன்டுதான்... பாக் கோணும் அவட பேச்ச''

''ஆ வாய்த்தக்கம் நடந்தா?

''நேத்து தேத்தண்ணி டைமிலே நாங்க கதச்சிக்கோ நின்ட... அவசெல்லிய இன்டக்கி மிச்சமா வேலீக்கி... இப்பிடிக் கதச்சிக்கோ நின்டா முடிக்கேலாட்' பொகுமாம் நான் நல்லா திருப்பிக் குடுத்திட்டன்... எல்லாரும் எனக்கு ஃபுல் ஸபோட்''

''அப்ப நஸீமாம் சும்ம நிக்கியல்ல. உள்ளால கதயக் குடுத்துக்கொண்டுதான் வாரபோல...''

''நான் இன்டக்கி நேத்து வந்துக்கொண்டு வாயடிக் கியாம். நான் சென்ன என்டக்கி வந்தாலும்சரி நான் இப்ப இங்க வேலசெய்த. அதச்சொட்டீம் எனக்கெனத் தேம் பேசலுமெண்ட.''

''உடுவீங்களா நீங்களும் வாய்காரிதானே''

''அதோடே இன்னொரு விஷயம். புதிசா வந்த ஃபாத்திமாத் தெரீமா''

''ஓ அவள் நல்ல புள்ளதானே''

''ம்... நல்ல புள்ளதான்... சின்னபொாஸ் இப்ப ஒரே அந்தப் பொக்கத்துக்கு வார... நேத்து ஒபீஸுக்கு கூப்பிட்டு வெச்சிக்கொண்டு பெரிய கத''

''அதப்பத்தி எங்களுக்கு தேவப்படுத்தாது ஏழக் குட்டி எப்பிடிச்சரி... ஆனா வால்புடிக்கியென்டா கவன மாத்தான் நடந்துகொளோணும்... இப்ப நஸீம ஒரு வேல செய்யோணும்''

''செல்லுங்கொ''

''கொஞ்சம் கொஞ்சமா சம்பளம் போதாத விஷயத் தேம் வேல நேரத்தப்பத்தீம் பொம்பிளயளுக்குள்ளே

பத்தவெக்கோணும்... அவங்களுக்குள்ளாகவே வெடிச்சாத் தான் லேசி''

''நான் செஞ்சிக்கொண்டுதான் நிக்கிய... எங்களுக்கு வேல தந்தெண்டு செல்லிச்செல்லி எந்த நாளும் ஏமாத்த உடப்படாது''

எதையெதையோவெல்லாம் உரையாடிக்கொண்டிருந்த இருவர் நெஞ்சங்களிலும் வெளிப்படுத்திக்கொள்ள முடியாத சில மெல்லிய உணர்வுகளும் அவ்வப்போது அலைமோதத்தான் செய்தது. □

# 5

''டடக்... டடக்... டடக்''

கைத்தறிகள் யாவும் துரிதமாக இயங்கி சிருஷ்டிப்பின் ரகசியத்தை அம்பலமாக்கிக் கொண்டிருந்தன. மெஷினோடு இணைந்து கை... கால்களையும் இயக்குகின்ற மனித மெஷின்களின் இயக்கம்... அதை எப்படித்தான் வியப்பது!

சின்னபொஸ் அங்கே நடமாடிக்கொண்டிருந்ததுதான் அதற்குக் காரணமல்ல. பிரதிபலனைப் பற்றி பின்பு கவலைப்பட்டாலும், உழைப்பாளிகள் உழைப்பை ஒரு தொழுகையாகக் கொள்பவர்கள் அல்லவா?

சின்ன பொஸ்ஸின் முகத்தில் தெறித்த கடுகடுப்பும் வழமைக்கு மாறாக அதிகநேர நடமாட்டமும் பலருக்கு சிந்தனை இழைகளை மனதுக்குள் பின்னியிருக்கும்தான்.

கைத்தடுமாற்றத்தினாலோ பதட்டத்தினாலோ என்னவோ, அருணாவின் தறியில் நூல் சிக்கிவிட்டது. சின்னபொஸ் வருவதற்குள் அதனைச் சரிப்படுத்தி விட வேண்டுமென்ற வேகம், நிலைமையை இன்னுமின்னும் சிக்கலாக்கியிருக்க வேண்டும். இருப்பிலிருந்தெழுந்து சிக்கவிழ்த்துக்கொண்டிருந்த வேளையில், எது நடக்கக் கூடாதென்று அவள் எண்ணினாளோ... அதுவேதான் அங்கே நடந்துவிட்டது.

''ம், செய்த வேலயள ஒழுங்காச் செய்யத்தெரிய. அதுக்குள்ள சம்பளம் போதவாம்... வேலகூடவாம்... நாங்க வேற ஆளில்லாமலயா இவங்கள எடுத்த.'' இவ்வளவு நேரமும் மனக்குமைச்சலைக்கொட்ட சந்தர்ப்பம் தேடித்தான் அலைந்திருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள அங்கிருந்த எவருக்குமே அதிக நேரம் பிடிக்கவில்லை.

சொற்பநேரம் அந்தச்சாலையே மௌனச் சாகரத்தில் மூழ்கிவிட்டது. கைத்தறிகள் அப்படியே இயங்காது ஓய்ந்தன.

''நாங்க நெனச்சா எல்லாரேம் இப்பவே ஊட்டுக் கனுப்பேலும். வழில்லாததயெல்லம் கொணந்து தொழில் குடுத்தா, தலக்கிமேல ஏறப்போறாங்க.'' அவர் தொடர்ந்து எரிகணைகளை உமிழ்ந்து கொண்டிருந்தார்.

கருணாவின் கண்கள் கலங்கிவிட்டன. அவள் எப்பொழுதுமே அமைதியாகவும் ஒழுங்காகவும் வேலை செய்பவள். பொல்லாத நேரமாகப் பார்த்து நூல் சிக்கியது போக... சின்ன பொஸ்ஸின் பேச்சு பொதுவாக எல்லோரையும் தாக்கியபோதும் குறிப்பாக அவளைத் தான் குத்திக் கிழித்தது போலிருந்தது. இத்தனைக்கும் அவள் சம்பளப் பிரச்சினை போன்ற கதைகளில்கூட பங்கு கொண்டது கிடையாது. இச்சம்பவம் அவளையும் தூண்டுவது போலிருந்தது.

சின்னபொஸ் அங்கிருந்து நகர்ந்ததிலிருந்து சுறுசுறுப்பாக வேலை நடைபெறுவதாக இல்லை. தங்களுக்குள் கூடி குசுகுசுப்பதும் கருத்துப் பரிமாறல்களும்தான் நடைபெற்றன.

''ஒரு மாடு வேலி ஒடச்சா ஒன்பது மாடும் அகப்படுகியாம். அதப்போலதான் சும்ம நாங்களும் ஏச்சிக்கேட்ட'' இது ஒருத்தி.

''மோட்டுப் பேச்சிப் பேசவாண. வேல செய்யச் செல்ல நூல் சிக்காகியல்லயா... எவளவு நல்ல பழக்கமானவங்களா ஈந்தாலும் இப்படி நடக்கியதான். அதுக்கெனத்துக்கள் ஏசிய.'' இன்னொருத்தி முன்னவளை இடைவெட்டினாள்.

''நான் அதச் செல்லல்லடி. சின்னபொஸ் ஏசினது நூல் சிக்கனதுக்கல்ல. இந்தப் பெரிய மனிசிகளட பேச்சிக்கித்தான்.''

''ஆ இதா'' கண்களை விரித்து ஆச்சரியத்தில் ஆழ்ந்தாள் அவள்.

''மிச்சம் எனத்துக்கன் எங்கட கஷ்டத்தப்பத்தி அவங்களும் யோசிக்கோணுந்தானே... அவங்க நெனச்சீக்கும் அவங்கட பலருக்கு நாங்க பயப்புடுகியென்டு... இன்டக்கி கக்கூஸ் வேல செய்தவனும் நல்ல சம்பளம் எடுக்கிய... நாங்க படுகிய கஷ்டத்துக்கு இன்னம் கொஞ்சம் கூட்டித் தரேலவா... அவங்க இவளவு ஒசந்துக்கொணுபோற தாராளயென்'' ரோஷம் பொருந்திய இன்னொருத்தி தன் மனக் குமுறலைக் கக்கினாள்.

அவளது இடியைக் கேட்ட எவருமே வாய் திறக்கவில்லை. வீட்டிலிருந்தால் இப்படியாவது கிடைக்காதே என்ற எண்ணம் கொடுங்கோலாட்சி செய்து, வேறெதையுமே பேசவிடாது தடுத்துக்கொண்டிருந்த நிலைமை

படிப்படியாக அப்புறமாகி... இது சம்பந்தமாக எதுவுமே பேசாது, ஊமைப் பிறவிகளாக இருந்தவர்கள்கூட இப்பொழுது தங்களுக்குள்ளாயினும் சின்னஞ்சிறு அதிர் வெடிகளை போட்டு...

ஃஒபீஸுக்குள் சென்றமர்ந்த சின்ன பொஸ்ஸுக்கு இருப்புக்கொள்ளவில்லை. இவ்வளவு காலமும் எவ்வித சலனமுமின்றி இயங்கிவந்த நிர்வாகம் இந்த மூன்று மாத காலமாக பேரலை ஓங்காரத்துக்கு ஈடுகொடுக்க வேண் டிய கட்டத்துக்கு வந்துவிட்டதை சின்னபொஸ்ஸால் பொறுக்க இயலவில்லை. அதன் ஒரு வெளிப்பாடுதான் இந்த எதிர்பாய்ச்சல்!

கிராமத்துக்குள் ஃபெக்டரியை விஸ்தரித்து அதில் பெரும்பாலும் பெண்களையே சேர்த்துக்கொண்டதும் சும்மாவல்ல!. இனி எப்படியாவது கட்டுப்படுத்தியாக வேண்டும். அதற்கான நடவடிக்ஸககளைச் சிந்திப்ப திலேயே அவரது நேரம் நகர்ந்து கொண்டிருந்தது.

''உள்ளுக்கு வரவா?''

மெல்லிதமாக ஒலித்த இந்தக் குரலைக் கேட்டு கண் களைச் சுழற்றியபோது அங்கே ஃபாத்திமாவைத்தான் காண முடிந்தது. 'வாங்க' என்று புன்னகைதான் மொழி பேசியது.

உள்ளே சென்றவள் தனது கைகளிலிருந்த ஃபைலை நீட்டினாள்.

''இவ்வளவு சீக்கிரம் முடிச்சா!'' அதிசயத்தோடு கேட்டார் சின்னபொஸ்.

''லேசான வேலதானே'' அவள் இங்கிதமாகப் பதில் சொன்னாள்.

''ஒங்கட எழுத்தும் நல்ல பஸுந்தாயீக்கே''

மகிழ்ச்சியோடு சிரித்தாள் அவள்.

''ஒங்கள இப்பிடி எழுத்து வேலயளுக்கே வெச்சிக் கொண்டா நல்லம்போலீக்கி''

''வாண வாண நான் அதுக்கு வரல்லயே... இப்ப செய்த வேல நல்லம், அப்படியெல்லாம் தந்தா எனக் கிங்க நிக்கேலாப் பெய்த்திரும்'' மௌனமே தஞ்சமெனக் கிடந்தவள் இப்பொழுது சரளமாகப் பேசவும் பழகி விட்டாள். அதி உயர்ந்த இடத்துக் கவனிப்பு இருக்கும் போது பேச்சி தானாக வராமலாபோகும்.

''ஃபாத்திமா மத்தவங்களுக்கு பயந்து பயந்து நாங்க நடக்கேல... பொறுப்பான வேலயள கண்ட கண்டவங் கட கைல குடுக்கேமேல...ம் எங்களுக்கு கத செல்லியவங்க ஈக்கிபோல...''

''வேறகாரன எல்லாம் அந்த நஸிமாம் அவளட கூட்டாளிமாரும்தான். அவள் ஒண்டச் சென்னா மத்த வங்களுக்கு அது ஆண்டவன் கட்டளமாதிரி... எப்ப பாத்தாலும் ஒத்தரொத்தரோட குசுகுசுத்துக்கொண்டு தான், எனக்கு வாயத்தொரக்குடுகியல்ல.'' நிலத்தைக் குடையும் வலக்கால் பெருவிரலைப் பார்த்தபடி ஃபாத்திமா சொன்னாள்.

''அப்படியா? அவள் கொஞ்சம் ஒரு மாதிரியான ஆள்போலத்தெரீது. அளவுக்கு மிஞ்சினா ஆள ஊட்டுக்கே அனுப்பீரேலும்.''

''ம் நீங்க அப்பிடியொண்டும் செய்யவாண. ஆப்பிடிச் செஞ்சா அது பெரிய முஸீபத்தில வந்து முடியும், இப்பவே எனக்கு குத்துவாத்த செல்லியவங்க... நாளக்கி...''

''நஸீமவ மத்தவங்க எதித்துப் பேசியல்லயா''

''எல்லாரேம் அவள் பேச்சால மடக்கிப் போடிய... எப்ப பாத்தாலும் சம்பளத்தைப் பத்தித்தான் பேசிய... இனி மத்தவங்க ஸபோட் பண்ணாமீக்கியா?''?

''ஓஹோ அப்பிடியா... நீங்க எனக்கு இனிமேலேம் ஒதவி செய்யோணும்... இது கோள் செல்லியண்டு நெனக்கவாணம்... ஃபெக்டரிக்கி எதுப்பான பேச்சியன நஸீமாவென்டாலும் தாரென்டாலும் சரி பேசினா என் னோட வந்து பயப்புடாமச் செல்லுங்கோ... இவங் களுக்கு நல்ல பாடம் படிப்பிக் காட்டிச் சரிவராது.''

சின்ன பொஸ்ஸின் விருப்பத்துக்குரிய ஒருத்தியாக மாறிவிட்டபின் அதை ஸ்திரப்படுத்திக்கொள்ள அவரின் விருப்பத்தையெல்லாம் நிறைவுசெய்ய வேண்டாமா? அந்த நிலையில்தான்... பாத்திமா அதற்கு உடன் பட்டாள். சும்மாவல்ல ஒரு கோபுரத்தின் உச்சியைத் தொட்டுவிட்ட பூரிப்பு அவளுக்கு!

''சரி நீங்க போங்கொ... ஒன்டுக்கும் பயப்புடத் தேவில்ல.''

சின்னபொஸ்ஸின் தைரிய மாத்திரையை விழுங்கிக் கொண்டு வந்த ஃபாத்திமா வேலைச் சாலைக்கு வந்து சேர்ந்தபோது, அமைதிக்கடலாக மாறியது அவ்விடம். எதிர்பாராத வேளையில் பொஸ்வந்தால் எப்படியிருக்கு மோ அப்படித்தான்.

''இன்டக்கி வேன் வாராம் வேலயள முடிச்சிவெக் கடடாமென்டு பொஸ் சென்ன.''

பியோன் சொன்ன செய்தியைக் கேட்டதும் பொடி ஹாமி திடுக்கிட்டாள். எப்படியும் இன்று எதிர்பார்த் தளவு வேலைகளை முடிக்க இயலாமல்போகும் என்ப தால்தான்!

''டாங்... டாங்''

இது பகலுணவு நேர அறிவிப்பு வழக்கமாக இந் நேரத்தில் சாப்பாட்டறையைத்தான் ஒவ்வொருவரும் அடைந்துவிடுவார்கள். ஆனால் இன்று...

ஒரே பரபரப்பாக இருந்தது. எல்லோரது வாய்களிலும் வீவிங்க்ப்பக்கம் நடைபெற்ற சம்பவம்தான்! அதோடு புளௌஸ் வேலைக்காரர்களுக்கு அனைத்து வேலைகளையும் முடிக்கவேண்டுமென்று சொல்லியிருக்கும் செய்தியும் சங்கமித்துக் கொண்டது.

ஒரு பக்கம் நஸீமா... மறுபக்கம் நியாஸ்... இன்னொரு பக்கம் ஜினதாஸ. இவர்களை மொய்த்தபடி ஒவ்வொரு கூட்டம்! இந்தக் காட்சிகளையெல்லாம் படிக்கட்டில் நின்று அவதானித்தபடி இரண்டு அதிகாரக் கண்கள். □

# 6

**வ**ழமையாக ஞாயிற்றுக்கிழமை புலர்ந்தால் அக்பரின் வீட்டில் ஒரே கலகலப்புத்தான். ஒரு பக்கம் அவனுடைய நண்பர்கள் கூட்டம், மறுபக்கம் ஸரீனாவின் தோழிகள் கூட்டம். ஆனால் இந்த இரு கூட்டங்களுக்குமிடையே நெருங்கிய பிணைப்பு இருக்கவே செய்தது.

''ரஹீமாதான் சான்ஸ்காரி. அவளுக்கு டீச்சர் வேல கெடச்சிட்டு. நாங்களும் ஒழுங்காப் பாஸாகீந்தா எங்களுக்கும் கெடக்கியதானே.'' நஸீமா சொன்னாள்.

''அது எகட தலயெழுத்துடீ கணக்குப் பாடமென்டா எங்கட மண்டேல ஏறியல்ல'' ஸரீனாவின் குரல்.

''அவளும் எங்களப் போலதாண்டி. ரெண்டாம் பைணம்தானே பாஸாகின. அது அவளட மாமடதென்டிப்பால. எங்களுக்கு அப்பிடிச் செல்லித்தர ஒத்தருமில்லாப் பெய்த்து''

''அதப்பத்தி இப்ப கவலப்பட்டு வேலில்ல. எங்களுக்கும் இப்ப ஜொப்பீக்குதானே...''

'ம். ஜொப்தான் இது... நாய்படாத பாடுபட்டு கெடக்கியத்த செல்லேம் வெக்கம்''

''அவசரப்படாம நில்லுங்கொ. எல்லாரும் சேந்து சம்பளத்தக்கூட்டிக் கேக்கோம்.''

''ஓ. சம்பளம் கூட்டிக் கெடக்கிமோ... ஊட்டுக்குப் பொகவாகுமோ தெரிய. ஒனக்கென்டா எப்பிடிம் சரி. இன்னம் கொஞ்சம் நாளேல கலியாணம்...நாங்கதான்...''

''போடீ போடீ ஒனக்கு ஒரே கலியாணப் பேச்சிதான்... அவசரம் புடிச்சிக்கொண்டு... எனக்கப்படி ஒன்டுமில்ல... நடக்கிய காலத்துக்கு நடக்கட்டும்.''

''ம் நடக்கிய காலம் கிட்டவாகிக் கொண்டுவாரதத்தான் செல்லிய. நாங்கதான் எந்தநாளும் இப்படி''

''ஓ ஓ ஒன்டசெய்தி எங்களுக்கு தெரியான்டு நெனச்சிக்கோ நிக்கிய... எல்லம் வெளப்பம்''

ஸரீனா தலையாட்டியாட்டிச் சிரித்தாள். தயாவதி தனக்கும் தெரியுமென்பதை சிரிப்போடு வெளிப்படுத்தினாள். வெளியே கேட்ட பேச்சுக்குரல்கள் அவர்களது கவனத்தை அப்பக்கமாக ஈர்த்தது. அங்கே வழக்கமான வாடிக்கையாளர்களோடு ஜினதாஸாவும் கூடவே வந்தான். 'வேஜீ' ஃபெக்டரியின் முக்கிய புள்ளிகள் எல்லோரும் அங்கே!

''நாங்க எவளவு நேரமா காத்துக்கோ நிக்கியன்'' நஸீமாவின் வரவேற்புரை இது!

''அப்பிடியா... எவளவு நேரமென்டாலும் நிப்பீங்கென்டு தெரீந்தானே'' நியாஸின் பதில்.

''ஆ சரிசரி... வெயில்ல அலஞ்சிக்கொண்டுவந்த கதய வெச்சிட்டு குடிக்கியத்துக்கு எனத்தியாலும் கொணு வாங்கொ'' லாஃபிர் உள்ளே பார்த்தும் பார்க்காமலும் சொன்னான்.

''ஓ எங்கட லாஃபிர்நான வெளன கொணந்து குடுத்த குரும்பக் கொலயால வெட்டி வெட்டிக் கொணுவா ஸரீனா'' நைஸாக ஒரு நக்கல் விட்டாள் நஸீமா.

''ஒங்களியலுக்கு கெடக்காட்டீம் எனக்கென்டா குரும்பயல்ல தெம்பிலி கெடச்சாலும் கெடக்கும்'' இது லாஃபிர்.

''ஓ இனி ஒங்கள ஸ்பெஷலா கவனிக்க ஆளிக்கி தானே,'' இதைச்சொல்லி முடித்தாளோ இல்லையோ அவளது இடுப்பில் விழுந்தது ஒரு கிள்ளு.

ஜினதாஸ அவர்கள் யாருக்குமே புதியவன் அல்ல. ஆனால் அந்த இடத்துக்கு அவன் புதியவன்தான்... நஸீமா... ஸரீனா... தயாவதி இவர்கள்கூட முன்பெல் லாம் அவரைக் கண்டிருந்தபோதிலும் ஃபெக்டரியில்தான் ஓர் அந்யோன்யத்தை ஏற்படுத்திக்கொண்டனர்.

ஜினதாஸவின் கண்கள் அக்பரின் அறைச் சுவரில் தொங்கவிடப்பட்டிருந்த படங்களில் திளைத்திருந்தன. அந்தப் படங்களை அடியொட்டிய தகவல்களை அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் அவனுக்குள் தளும்பிக் கொண்டிருந்தது.

''இது இக்பாலின் படம். பாகிஸ்தானைச் சேர்ந்த புகழ் பெற்ற கவிஞர்.'' ஜினதாஸவின்கண்கள் பதிந் திருந்த படத்தைக் குறிகாட்டி அக்பர் விளக்கமளித்தான்.

அதையடுத்து பத்திரிகை நறுக்கு கூட்டுப்படமொன்று ஃபிரேம் பண்ணி வைக்கப்பட்டிருத்தது. அதன் நடுவிலி ருந்து உருவைக்காட்டி 'இது சித்திலெப்பைதானே', என்று கேட்டான் ஜினதாஸ.

''ஆம்.'' என்று தலையாட்டினான் காதர்.

அப்பொழுதுதான் அவர்கள் தாகசாந்திக்கு தோடம் பழச்சாறு வந்து சேர்ந்தது.

''சா... டைமுக்கேக்ரு சாமன்தான்'' அக்பரே வியந்தான். தனக்கும் தெரியாமல் தோடம்பழம் எப்படி வந்து சேர்ந்ததென்றோ என்னவோ!

''நல்லோர்க்குப் பெய்யும் மழை எல்லோர்க்கும் இல்லயா நஸீமா.''? கண்சாடையால் லாஃபிரைக் காட்டிவிட்டு நஸீமாவிடம் சொன்னான் காதர். அதைப் புரிந்துகொண்ட ஸரீனா கதவோரத்திலிருந்து மின்னலாய் மறைந்தாள்.

எல்லோரும் ஒருபாட்டம் சிரிந்து ஓய்ந்தனர். ஸரினா— லாஃபிர் கல்யாணப் பேச்சுக்கள் ஒருவருக்கும் தெரியாத விஷயமா என்ன?

''சரி டைம்போகுது... இந்த விஷயத்த நாங்க கொஞ்சம் ஸீரியஸா யோசிக்கோணும். சோட போத்தலப் போல இருக்கப்படாது.'' அன்றை விடயத்துக்கான முன்னுரையை நிகழ்த்தினான் நியாஸ்.

''சும்மா கருத்துப் போராட்டமல்ல இது. ஒரு ஸ்தாபனத்தோட மோதப்போறது... இதால தாருக்கும் கஷ்டம் வராமீக்கோணும்... செலநேரம் ஒத்தரொத்தரடேம் வாழ்க்கய நிர்ணயிக்கியதாகவுமீக்கும்'' காதரின் கருத்து இது.

''இதில நீங்க ரெண்டுபேருந்தான் உஷாராநிக்கோணும். நாங்க எவளவு ஸபோட்டென்டாலும் உள்ளுக்கு வாரத்துக்கு எங்களுக்கு எந்தவிதமான உரிமேம் இல்ல. எந்நேரத்திலேம் தைரியத்த உடப்படாது.'' யதார்த்த நிலையை லாஃபிர் பிரஸ்தாபித்தான்.

''கடசிவரக்கும் ஒத்துமயக் கைவுடப்படாது. எங்கட ஒத்துமய இல்லாமாக்கியத்துக்கு எத்தினயோ வழி

யளிக்கி... வெளங்கியா ஜினதாஸ.'' நியாஸ்தான் கேட்டான்.

அவன் அவ்வாறு கேட்ட உள்ளர்த்தத்தைப் புரிந்து கொண்டமையயை ஜினதாஸ வெளிக்காட்டினான்.

''இந்தப் பொம்புளயல் மிச்சம் பலவீனமானவங்க... இவங்களலேசா பயங்காட்டேலும்... அதச்சொட்டும் எந்த நேரமும் தைரியமூட்டிக்கொண்டீக்கோணும்.'' பெண்கள் பக்கத்தைப் பார்த்தபடி நியாஸ் சொன்னான்.

''இங்க நீங்க நெனக்கிய மாதிரி பொம்புளயல்ல நாங்க... எல்லாத்துக்கும் ரெடியானவங்க.'' நஸீமா பளிச் பளிச்சென்று சொல்லடிகளை எறிந்தாள்.

''ஆக மிஞ்சினா ரெண்டேரெண்டு பேருதான் எங்களுக்கு மாத்தமா நிப்பாங்க... இப்பிடி ரெண்டொண்டு எங்கேம் ஈக்கிதானே.'' தயாவதியின் பிரஸ்தாபம்.

''ஒண்டு பொடிஹாமி. மத்தது...?'' ஜினதாஸ வியப்போடு விழித்தான்.

''மத்தது அந்தப் ஃபாத்திமா... சின்ன பொஸ்ஸுக்கும் அவளுக்கும் எடேல மிச்சம் நெருக்கம்...''

''ஆ... அப்பிடியா?''

''அவள் கொஞ்சம்...'' நியாஸ் ஜினதாஸவுக்கு விளக்கம் கொடுத்தான்.

''யாரயும் நாங்க தள்ளப்படாது. நாங்க தொடங்கீக்கிய விஷயம் எங்களுக்கு மட்டுமல்ல அவங்களுக்கும் சேந்தித்தான்... இத அவங்களுக்கும் வெளங்க வெக்கோணும்.'' பரந்த நோக்கோடு ஜினதாஸ சொன்னான்

''இப்ப எங்களுக்கு ரெண்டு விஷயம் முக்கியம். ஒன்டு சம்பளம்... மத்தது குறிப்பிட்ட நேரத்துக்கு வேல... இதச் சரியான மொறக்கி நாங்க எடுத்துக்காட்டோணும்.'' நியாஸ் நீட்டி நிறுத்தினான்.

''சும்மா எடுத்துக் காட்டேல. ஒத்துமயா ஒரு சங்கமாத்தான் செய்யோணும்.'' ஒரு குரல்.

''ஓ சங்கமொன்டு அமக்கியதானே'' நஸீமா சொன்னாள்.

''ஆ... அதுசரி சும்ம ஊருக்குள்ள ஒரு சங்கம் அமக்கியென்டா அது எங்களுக்குத் தெரிஞ்ச விஷயம்... இதேம் அதுபோல நெனச்சுப்படாது. அதனால இந்த விஷயங்களைப்பத்தி தெரிந்தவங்களோடு கலந்து பேசித்தான் செய்யோணும்.'' காதர் தெளிவான ஒரு கருத்தை முன்வைத்தான்.

''அது நானும் நியாஸூம் கவனிக்கிய... சொணக் கேல இன்னம் ஒரு கெழமேக்குள்ள சட்டப்படி நாங்க சங்கத்தத் தொடங்கோம்.'' ஜினதாஸ சொன்னான்.

எல்லோரும் சம்மதந் தலையாட்டல் செய்தனர்.

''எல்லம் சரி இனி வாங்க போம்'' என்றவாறே வாஃபிர் எழும்ப, அடுத்தவர்கள் அமர்ந்துகொண்டா இருக்கப்போகிறார்கள். □

# 7

ஃபெக்டரியில் ஒரே பரபரப்பாக இருந்தது. கொழும்பிலிருந்து வேன் வந்திருந்ததும் அதில் உற்பத்திப் பொருள்கள் ஏற்றப்படுவதுமாக...

மாதத்தில் ஒரு நாளோ இரண்டு நாளோ இப்படியான சூழ்நிலை ஏற்படுவதுண்டுதான்.

நியாஸுக்கும் ஜினதாஸாவுக்கும் தலை—கால்புரியாத வேலை. அவர்களையும், அங்கு சாரிக்கட்டுகளையும் புளௌஸ் பெட்டிகளையும் ஏற்றுவோரையும் மேற் பார்வைசெய்துகொண்டிருந்த சின்னபொஸ்ஸின்முகத்தில் களையிருக்கவில்லை. இந்தக் கொஞ்ச நாட்களாக முகம் இருண்ட வானம்தான். இந்தப் பெரியதொழிற்சாலையின் உரிமையாளராக எதிர்காலத்தில் வர இருப்பவரல்லவா? அவரது எண்ணக் கோட்டையின் அடித்தளத்தில் அதிர் வெடிகள்விழ ஆரம்பித்துள்ளன அல்லவா?

சின்ன பொஸ்ஸால் ஜினதாஸவிடமோ நியாஸிடமோ வாய்திறந்து எதையுமே கேட்கமுடியாத சங்கடம். வேலைகளை மிகப் பொறுப்பாகாவும் திறமையாகவும் செய்து முடிக்கும் அவர்களிருவரும் அவரின் நல்லபிமானத் துக்குரியவர்கள். 'என்ன இருந்தாலும் அதிரப்போகும் எரி மலைக்கு முன்னணியில் நிற்பவர்களும் அவர்களல்லவா? சிலநேரங்களில்அவர்களை அழைத்து விசாரிக்கநினைக்கும் அவர்மனம் மறுகணம் தேவையில்லையென்ற முடிவுக்கு வரும். இப்படியாக சின்னபொஸ் தவித்துக் கொண்டிருக் கின்றமை அவர்களுக்கு விளங்கியும்தான் என்ன?

உற்பத்திகளைச் சுமந்துகொண்டு வேன் வெளிக்கிடத் தயாராகையில் பகல்பன்னிரண்டு மணியை அண்மித்து விட்டது. அதில் பொறுப்பாக வந்திருந்தவர்களிடம் சின்னபொஸ் ஏதோவெல்லாம் இரகசியமாகக்கதைத்ததில் யாரும் தலையிடாதிருந்த போதிலும், இங்குள்ள நிலைப் பாட்டைத் தெரியப்படுத்துகிறார் என்பது நியாஸுக்குப் புரிந்துவிட்டது. யாருக்கு அறிவித்துத்தான் என்ன? தூசுப் படலங்கள் துப்பாக்கிகளாகிவிட்டால் அதன் வேகத்தை எவரால்தான் கட்டுப்படுத்த முடியும்?

பகலுணவுக்காக மணியடிப்பதற்கும் வேன் கேற்றைத் தாண்டிச் செல்வதற்கும் சரியாகவிருந்தது.

''பாத்தாஎங்கட ரெத்தத்தத் தூக்கிக்கொணுபோற.'' அங்கு கூடிநின்றோர் மத்தியில் நஸீமா சொன்னாள்.

''அதுக்குததான் எந்தநாளும் முட்டேம் ஈரலும் தின்னியத்துக்கு கைநெறயச்த சம்பளம்தார'' கூட்டத்துக்குள் யாரோ ஒருத்தி இப்படிச் சொன்னாள்.

''ஓ...கழுகவாகும்'' இன்னொருத்தி.

வெடிச் சிரிப்பொலி எங்கும் எதிரொலித்தது.

''நஸீமா ஒனக்குப் பெய்த்தியமா புடிச்சீக்கிய... மத்தவங்க நிக்கிய மாதிரி ஒனக்கும் நிண்டிட்டுப் பொகேலவா... இன்டக்கி நேத்து வந்துகொண்டு ஃபெக்டரிய பெரட்டப்போற''

ரஃபீக்கா உதட்டை நெளித்து வளைத்து சொல்லும் பாணியே தனியழகு. அவள் நஸீமாவுக்குத்தானா இதைச் சொன்னாள்? அப்படியென்றால் எல்லோரும் ஏன் ஒரேயடியாகப் பொடிஹாமியைப் பார்க்க வேண்டும்? ஆமாம், ஒருமுறை பொடிஹாமி நஸிமாவுக்கு ஏசியதன் மறு ஒலிபரப்புத்தான் அது என்பது பொடிஹாமிக்கு கூடப் புரிந்துவிட்டது. இல்லாவிட்டால் அலைகளைக் கிழித்துக்கொண்டு போகும் இயந்திரப் படகுபோல அவளேன் விரையவேண்டும்?

''எனத்தியன்டீ சிரிச்சிக்கோ நிக்கிய? நான்செல்லியது வெளங்கல்லியா? அப்பிடி ஒனக்கு நிக்கேலாட்டி இனுமொரு வேலீக்கி செல்லவா?''

''செல்லுடீ செல்லு. ரஃபீக்காவை பேசவைப்பதில் யாருக்குத் தான் ஆசையில்லை? அவள் பேச ஆரம்பித்து விட்டால் அடுத்தவர்கள் வயிற்றைப் பிடித்துக்கொண்டு சிரிக்கத் தயாராக வேண்டியதுதான். அப்படியொரு ஆற்றல் அவளுக்கு!

''அடியேய் கடேல வெள்ளத்தீந்த விக்க வெச்சீக்கி... அதால ஒன்ட வாங்கி நல்லா மொகத்தில பூசிக்கோ... அப்ப வேல செய்யத் தேவில்ல... சும்ம கதச்சிக் கதச்சீந்திட்டு சம்பளமெடுக்கேலும்.''

ஃபாத்திமாவால் கீழே பார்த்துக்கொள்வதைத்தவிர வேறொன்றும் செய்ய இயலவில்லை. அடுத்தவர்களைப் பற்றிச் சொல்லவா வேண்டும்! நஸீமா தயாவதியைக் கட்டிப் பிடித்துக்கொண்டு சிரித்தாள்.

''அடி போதும் போதும். ஏன்ட பொகுத்துக் கொடல்ல சீவனில்ல வாயப்பொத்து.'' யாரோ ஒருத்தி சத்தமிட்டாள்.

''சும்மா ஒவ்வொத்தருக்கு கத செல்லாம இரீங்கொடி. ரெண்டொரு மாஸத்தில எங்கட பிரச்சினயெல்லம் தீரிய'' ஸரீனா எதையோ சொல்ல முனைந்தாள்.

''எப்படியன் ஸரீனா எப்பிடியன்?'' ஏக காலத்தில் பல குரல்கள்.

''எங்கட சம்பளத்த கூட்டப்போறாமென்டு கதக்கியாங்க.''

''நானும் சாடபோல கேள்விப்பட்ட மெய்யா''

''வீவிங் பொக்கத்திலயென்டா எல்லாரும் செல்லி யாங்க.''

''ஸோமா ஸோமா இங்கவா.'' சாப்பிடுவதற்கு தண்ணீர்ப் போத்தலோடு போய்க்கொண்டிருந்தவளை கூப்பிட்டாள் ஒருத்தி.

''எனத்தியன்?'' என்று கேட்டவாறு வந்தாள் அவள்.

''புதிய செய்தியள்...''

''நூறு நூறு ரூவக்கூட்டப்போறாம்.''

எல்லோரது விழிகளும் வியப்பால் விரிந்தன. இன்றுள்ள செலவுக்கு இது பெரிய சம்பள உயர்ச்சிதான்.

''ம் சும்ம போங்கடி கெடக்குமென்டுதான் பயம்'' நஸீமா ஓரே வெட்டாக வெட்டினாள்.

''ஒனக்குத் தேவில்லாட்டிச் சும்மிரீ... சம்பளம் கூட்டாட்டி நாங்களென்டா இனி வேல செய்தல்ல.''

தாறுமாறாகப் பலதிக்கிலும் ஒலித்த குரல்களின் கூட்டுமொத்தம் இதுதான். நஸீமாவுக்கு நல்ல சிரிப்பு.

பகல் இடைவேளையின்போது சாப்பிட்டு வயிற்றை நிரப்பிக் கொள்வதுதான் இவ்வளவு காலமும் எல்லோருக்கும் வேலையாக இருந்தது. இப்பொழுதெல்லாம் இப்படியான அபிப்பிராயங்களைப் பரிமாறிக்கொள்வதிலேயே அந்த நேரத்தைப் பயன்படுத்தினர்.

''ஒங்களுக்கெல்லம் சம்பளம் கூட்டப்போறாம்.... எங்களப்பத்தி ஒரு கதேமில்ல.''

ஜினதாஸவின் குரலைக் கேட்டு சாப்பிட்டுக்கொண்டிருந்தவர்களெல்லாம் தலையைக் கிளப்பினர்.

''நீங்க பயப்புடவான... நாங்க ஆளுக்கு அஞ்சஞ்சி போட்டு ஒங்குளுக்குத்தார.'' திடீரென்று இப்படி ரஃபீக்காவின் குரல் ஒலித்தால் இனிக் கேட்கவா வேண்டும்.

''அப்ப எனத்தியன் நான் நிம்மதியாக நிப்பன்.'' என்றவாறு ஜேம் மரத்தடிக்குச்சென்றான் ஜினதாஸ.

நஸீமாவும் தயாவதியும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துவிட்டு கொஞ்சம் அவசரமாக காரியத்தில் கவனம் செலுத்தினார்கள். அன்று அந்நேரம் சந்திப்பதற்கான ஏற்பாடு அவர்களுக்குள் இருந்ததல்லவா?

எப்பிடியன் எங்கட டிக்ஸ் வேல செஞ்சிக் கொண்டீக்கி''

நஸீமா இப்படிச் சொல்ல, நியாஸின் முகம் 'என்ன?' என்று வினாக் குறியாய் வளைந்து நின்றது.

''ஹி... ஹி... நூறுருவச் செய்தியா.'' ஜினதாஸ கேட்டான்.

''அது எனத்த?'' நியாஸ் புரிந்துணர்வோடு கேள்வி கேட்டான்.

''அது நாங்க ரெண்டு பேருந்தான் உண்டாக்கின... வந்தொடன மெதுவா அவுத்துட்டோம்... எங்கட நல்ல காலத்துக்கு கொழும்பிலீந்து வேனும் வந்திட்டு... அங்கீந்து வந்த செய்தியெண்டுதான் எல்லாரும் நம்பிக்கோ நிக்கிய''

தயாவதி விளக்கமளித்தபோது, ஜினதாஸவும் நியாஸும் இந்த உத்தியை எண்ணி மகிழ்ந்தனர்.

''பொறகு?''

''அந்த உணர்ச்சி இப்ப எல்லாருக்கும் வந்திட்டு... எப்பிடிச்சரி எடுத்துச்காட்டியாம்.'' நஸீமா வெற்றிக் கம்பத்தை எட்டிப் பிடித்துவிட்ட பூரிப்புடன் சொன்னாள்.

''ஹ்ம்... எல்லாரடேம் நாடியப் புடிச்சிப் பாத்திட்டேங்க... இப்ப இந்தச் செய்தி சின்ன பொஸ்ட நெஞ்சில படார் படாரெண்டு படுகியாயீக்கும்!'' ஜினதாஸ சொன்னான்.

''சரி வாங்க வந்த விஷயம்.'' நியாஸ் ஆரம்பித்தான்

''யோசிக்கியத்துக்கு ஒண்டுமில்ல... நாங்க கொஞ்சம் பேசோணும் டைம் தாங்கோண்டு கேப்பம்.'' நஸீமா தனது அபிப்பிராயத்தை முன் வைத்தாள்.

''அதப்பாக்க, நாங்கெல்லாரும் கூடிப்பேசப்போற பேமிஷன் தாங்கோண்டு கேப்பம்.'' இது ஜினதாஸ.

''சரி இப்பதாரன் சின்ன பொஸ்ஸுக்கிட்டப் போற?'' நஸீமாவின் கேள்வி.

''நீங்க ரெண்டு பேரும் எங்களோட வாரதுதான் சரி.'' ஜினதாஸவின் வேண்டுகோள்.

''எனக்கேலோவ்... அவருக்கென்னக் காட்டேல. நீங்க ரெண்டுபேருமே போங்கொ.''

''சரிசரி அப்ப நாங்களே போம்.''

நால்வரும் ஓஃபீஸ் பக்கமாக நடந்தனர். அவர்களின் காலடியோசைக் கேட்டோ என்னவோ, உள்ளேயிருந்து அவள் வெளியே வந்தாள். சும்மாவல்ல ஒரு மாதிரியான பார்வையோடுதான் திமிர் நடை நடந்தாள்.

''டேப் போகுது'' நஸீமா தயாவதியைக் கிள்ளி... மெல்லக் காதுக்குள் சொன்னாள். □

# 8

வரவுப்பதிவேட்டில் கையெழுத்திட்டவுடன் யாரும் வேலைத்தலத்துக்குச் செல்வதில்லை. எட்டுமணி வரை கதையளப்புதான். கதைசொல்பவர்களைவிட கதை கேட்பவர்களே அங்கு அதிகம் அதிலும் நஸீமா இல்லா விட்டால் கலகலப்புக்கு பஞ்சம்தான்.

''டாங்... டாங்...''

எல்லோரும் தத்தமது வேலைகளை ஆரம்பிக்க முனைந்தபோது ஸரீனாவைச் சோர்வு தழுவிக்கொண் டது. அப்போது 'சரஸ் சரஸ்' ஸென்ற செருப்பொலி யைக் கேட்டுத் திரும்பியபோது... வியர்வை அரும்பி நின்ற முகத்தைக் கைக்குட்டையால் ஒற்றியபடி நஸீமா வந்து புகுந்தாள். அத்தனைபேரதும் சோர்வும் அக்கணமே பறந்து விட்டது.

''எனத்தியன்டீ இண்டக்கி லேட்? நீ இல்லாட்டி மையத்தூடு மாதிரிதான்'' அவள் வந்து சேர்ந்ததால் ஏற்பட்ட களிப்பில் ஸரீனா இப்படிச் சொன்னாள்.

''எனக்கு வரக்கெடக்குமோ தெரீயாண்டு பயந்துக் கோநின்ட, நல்ல காலம் உம்ம பொகச் செல்லீட்டா''

''அப்ப நீ எந்தநாளும் உம்ம செல்லியமாதிரிதான் கேக்கியபோல.''

''இல்ல ஸரீனா ராவேலீந்து வாப்பக்கு காச்சல்... அல்லாட கிருபயால இப்ப கொஞ்சம் கொணம்... கஞ்சி கொஞ்சம் காச்சிக்குடுக்க நின்டத்தில சொணங்கீட்டு.''

''ஆ... அப்ப தாருக்கட்டயன் மருந்தெடுத்த.''

''எங்கட இஸ்ஸதீன் தொஸ்தருக்கட்டத்தான். மருந்து வாயில பட்டொடன கொணம்.'' நஸீமா சொல்லி வாயெடுப்பதற்குள் ...

''எனத்தியன் இங்க குடும்பக் கத கதக்கியத்துக்கா வார... வேல எப்பிடி போனாலும் வாய்மட்டும் நீள்ப்பம் ... ஒழுங்கா வேல செய்தேமில்ல... செய்தவங்களுக்கு செய்யுடு கியேமில்ல.'' ஒருவருமே அந்நேரத்தில் அங்கே சின்ன பொஸ்ஸை எதிர்பார்க்கவில்லை. யாருமே எதிர் பார்க்காத முறையில்தான் வந்துமிருந்தார்.

''பொம்பள... அதும் எளம் வயஸுப் பொம்புள யெண்டா ஒரு அடக்கம்... ஒழுங்கு ஈக்கோணும்... எல்லொத்தேங் காத்தில பறக்குட்டிட்டு கூத்துப்போடிய... வந்தா வந்த வேலயப் பாக்கியதானே..., எங்கட புள்ளய லென்டு பேசாம பேசாம நின்டா வெள்ளம் தலக்கி மேலால போகுது... நாங்களும் ஒன்டும் தெரியாம இதச் செய்யல்ல... அன்ன அத நல்லா மனசில வெச்சிக் கோங்கொ... இப்ப மத்தவங்களுக்கு குத்துவாத்த செல் லேம் தொடங்கீக்கி...''

சின்னபொஸ் பெயர் குறிப்பிடாமல் தனது மனக் குமைச்சலைக் கொட்டிவிட்டுச் சென்றபோதும், அது யாருக்கென்பதைப் புரிந்துகொள்ள எவருக்குமே அதிக நேரமெடுக்கவில்லை.

எத்தனையோ அனுதாப விழிகள் நஸீமாவைமொய்த் தன. அவள் சிரித்துக்கொண்டே எவ்வித சலனமுமில்லா மலிருந்துவிட்டாள். இதை மட்டுமல்ல இன்னும் எதை யெதையோவெல்லாம் எதிர்பார்த்து, அவற்றையெல்லாம் தாங்கிக்கொள்ளத்தக்க மனத்திராணியையும் ஏற்படுத்திக் கொண்டிருப்பவளல்லவா அவள்.

சின்னபொஸ்ஸின் அழைப்பையிட்டு ஜினதாஸவும் நியாஸூம் ஒஃபீஸூக்குள் நுழைந்தபோது, வழமையான முகபாவனையிலிருந்து முற்றிலும் மாறிய நிலையில் அவர் அமர்ந்து கொண்டிருந்தார்.

''உங்களால எனக்கு இதுவரைக்கும் ஒரு பிரச்சினே மில்ல... இப்ப கொஞ்சநாளா நடக்கியதெல்லம் நான் செல்லத் தேவில்ல... நான் எல்லாரோடேம் மரியாதயா நடக்கியவன். ஏன்ட நிருவாகத்தில இபபடியெல்லம் நடக்கியது எனக்கு மிச்சம் மனவருத்தம்... இப்ப நீங்களெல்லம் சேந்து சங்கம் அமக்கிய யோசின போலீக்கி... அது ஒங்கட உரிம... அதுக்கு நாங்க ஒன்டும் செய்யேல... ஆனா சம்பளம் கூட்டியென்டியது நடக்காத விசயம்... இன்கம் டெக்ஸ்... பிஸ்னஸ் டெக்ஸ் இப்படி எத்தினயோ கரச்சல் எங்களுக்கு... மறுபொக்கத்தால நூல் சாமனியளுக்கு தட்டுப்பாடு.'' அவர் நியாயம் பேச வெளிக்கிட்டார்.

''பொஸ் சம்பளம் கூட்ட ஏலாண்டு நீங்க எத்தினயோ காரணம் காட்டினதுபோல, சம்பளம் கூட்டோணுமென்டு நாங்களும் எத்தினயோ காரணம் காட்டேலும்... நீங்க காட்டின காரணங்களால ஒங்கட

நயம் கொறஞ்சீக்கேலும் ஆனா நஷ்டமென்டுசெல்லேல.'' ஜினதாஸ அமைதியாக விளக்கத்தை முன்வைத்தான்.

இந்தப் பேச்சொன்றே இனிமேல் உரையாடலைத் தொடர்வதில் எவ்விதக் கருத்துமில்லை என்பதை அவருக்கு உணர்த்தியிருக்க வேண்டும்.

''என்டாலும் செல ஒழுங்குகள இனி நான் கையாளப் போறன்.''

''அது கட்டாயம் தேவதான். எங்கட கஷ்டங்கள நாங்க செல்லுவோம்... உரிமகள கேப்போம். ஆனா ஒழுங்குகள மீறியது எங்கட நோக்கமல்ல. நாங்க பாவத்தாளியாகேம் புரியமில்ல.'' நியாஸுூம் எடுத்துச் சொன்னான்.

''தயவு செஞ்சி வேல டைமில கதச்சி நேரத்தப் போக்கவாணம். ஒத்தருக்கொத்தர் ஹின்ட் அடிச்சிக் கொளேம் தேவில்ல... இதியளால பெரிய பிரச்சினயள் வந்து ஃபெக்டரிக்கே கெட்டபேரு வரும்.''

''சரி பொஸ் இத நாங்க ஏத்துக்கொள்ளிய. இப்பிடி நாங்க முந்தி நடக்கேமில்ல. இனி நடக்கியேமில்ல.'' இருவருமே ஒன்றாக வாக்களித்தனர்.

''வேறொன்டும் நான் சொல்லியத்துக்கில்ல.''

இருவரும் வெளியே வந்தபோது அது தேனீர் இடைவேளையாகவிருந்தது.

நஸீமாவுக்கு சின்னபொஸ் ஏசிய கதைதான் அன்றைய சப்ஜெக்ட். அவ்வளவு காரசாரமாக நஸீமாவைத் திட்டுவதென்றால், அவளது ஒவ்வொரு பேச்சும் அவரைப் போயடைந்திருக்கிறதென்பதில் சந்தேகமில்லை.

சின்னபொஸ்ஸின் மட்டரகமான திட்டலைக் கேள்விப்பட்ட நியாஸுூக்கு ஆத்திரமாக வந்தது.

''ஆனா இதப்பத்தி அவளுக்கொரு கணக்குமில்ல... அவள் எல்லாத்துக்கும் துணிஞ்சவள்தானே.'' தயாவதி அழுத்தமாகச் சொன்னாள்.

''தயவு செஞ்சி நீங்கதாரும் தேவில்லாத பிரச்சினயள எடுத்துப்போட்டுக் கொள்ள வாண... நாங்க தொடங்கியது நேர்மையான விஷயம்... அது கொலஞ்சிபொகாமப் பாத்துக்கொளோணும்.'' நியாஸ் விளக்கிச் சொன்னான்.

''அப்ப எங்கட கூட்டம் எப்பேக்கன்?''

''மூந்திச் சென்னமாதிரி வெள்ளிக்கெழம அந்திக்கி... இன்டக்கி சென்னா செலவங்க அன்டக்கிப் பாத்து லீவு போட்டிடுவாங்க... அதச்சொட்டீம் வெள்ளிக்கெழம வெளணக்கே செல்லோம்... அப்ப நிக்காமப் போறவங்களப் பாத்துக்கொளேலும்.''

''ஓ ஓ அதுதான் நல்லம்''

விடைபெற்றுக்கொண்டு தயாவதி போகும்போது அங்கே ஃபாத்திமா தலையைக் கவிழ்த்தபடி விக்கி விக்கி அழுதுகொண்டிருந்தாள்.

''தயவுசெஞ்சி நீங்கதாரும் தேவில்லாத பிரச்சினயள எடுத்துப்போட்டுக் கொள்ள வாண.''

ஃபாத்திமா அழுவதைக் கண்டதும் சிறிது நேரத்துக்குமுன் நியாஸ் சொன்னது அவளது காதுகளில் எதிரொலித்தது.

''ஃபாத்திமா எனத்துக்கன் அழுகிய?'' தயாவதி முதுகைத் தடவிக் கேட்டாள்.

பதில் வரவில்லை; மேலும் அழுகை சற்று அதிகரித்தது.

''எல்லாருமே 'டேப் டேப்' என்டியாம்.'' அனுதாபக் குரலொன்று.

''இதுக்கெல்லம் அழுகியா... எத்தினபேர் எத்தின ஜாதியச் செல்லியன்.'' ஆறுதல் பகர்ந்தபடி அவள் தனது கடமையை ஆரம்பித்தாள்.

# 9

வெள்ளிக்கிழமை:

எல்லோரும் ஆவலோடு எதிர்பார்த்திருந்த பொன் நாள். எல்லா முகங்களிலும் அலாதியானதொரு உணர்ச்சித் துடிப்பு.

தொழிலாளர் சங்கம் ஏன் அமைக்கப்பட வேண்டும்? என்ற கேள்விக்கு இடமில்லை. அதன் அவசியத்தையும் தேவையையும் அனைவருமே உணர்ந்து ஒன்றுகூடி நின்றனர்.

நஸீமா, தயாவதி போன்றவர்கள் மும்முரமாக இயங்கத் தவறவில்லை.

'செல்லல்ல' என்ற குறையை வைக்கக்கூடாது என்பதற்காகத்தான், நிச்சயம் வரமாட்டார்களென்று தெரிந்த போதிலும் பொடிஹாமி... ஃபாத்திமா ஆகியோரிடமும் சொல்வதென்ற முடிவுக்கு வந்தார்கள்.

ஆனால் எதிர்பார்க்காத போதும் தானும் கூட்டத்துக்கு வருவதாக பொடிஹாமி ஒப்புக்கொண்டது, அவர்களின் மகிழ்ச்சியை ஒருபடி உயர்த்தியது. அந்தக் களிப்புடன்தான் ஃபாத்திமாவை நெருங்கத் துணிந்தார்கள்.

''ஃபாத்திமா ஒங்களுக்குத் தெரீமென்டு நெனக்கிய...'' நஸீமாதான் ஆரம்பித்து வைத்தாள்.

''எனத்தியன்?'' அவள் கேட்டாள்.

''இன்டக்கி சங்கமொன்டு அமக்கப்போற... அதுக்கு எல்லாரும் வாரென்டீக்கி... நீங்களும் வரோணும்.''

''எனக்கு இன்டக்கி அவசரமாப் போகோணும்.'' விருப்பமின்மையை ஃபாத்திமா வெளிக்காட்டினாள்.

''மிச்சநேரம் சொணங்கியல்லதானே... ஆறுமணிக்கு முந்தி பொகேலும்.'' தயாவதியும் அவளை எப்படியாவது வளைத்தெடுக்க முயன்றாள்.

''எனக்கு நேரமில்ல.'' முகத்திலடித்ததுபோல் சொன்னாள் அவள்.,

இருவருக்கும் மனம் பொறுக்கவில்லை. வந்த புதிதில் பயம்... அடக்கம் கொண்டவளாக இருந்தவள். இப்பொழுது இப்படி மாறியிருப்பதை யார்தான் வியக்காமலிருப்பர். வெளித்தோற்ற சுபாவத்தைக் கொண்டு எந்த ஒருவரது உள்ளக் கிடக்கையையும் மட்டிட முடியாதென்பதற்கு அவளைத்தவிர வேறு உதாரணம் தேடியலைய வேண்டியதில்லை.

''பாத்தா அவள்ட ஆங்காரத்த'' நஸீமாவால் சகிக்க முடியவில்லை.

''அவள் வராமீக்கியது நல்லம். அப்பதான் அவளப்பத்தி மத்தவங்களுக்கும் வெளங்கிய.'' தயாவதி நஸீமாவைச் சமாதானப் படுத்தினாள்.

அன்று மகிழ்ச்சிகரமான மாலைப் பொழுதை எதிர்பார்த்திருந்த அனைவருக்கும் பகற்பொழுது சற்று அதிர்ச்சியையே கொடுத்தது.

காலையிலிருந்தே ஒஃபீஸுக்குப் பக்கத்தறை தூசி துடைத்து ஒழுங்குபடுத்தப்பட்டுக்கொண்டிருந்தது. ஒரு ஸ்டோர் ரூம் போல இவ்வளவு நாளும் அது இயங்கி வந்தது.

உதவியாளர்களாகக் கடமையாற்றும் ஜினதாஸவும் நியாஸூம் ஒவ்வொருவரதும் தயாரிப்புக்களை வேலை முடியுந்தோறும் பதிந்துகொண்டு அதிலே பத்திரப் படுத்திவிடுவார்கள்.

அன்று 'ஸ்டோர் ரூம்' என்ற ஆங்கிலப் பெயர்ப் பலகை வாயிலிலே பொருத்தப்பட்டதோடு ராக்கைகளும் பழுதுபார்க்கப்பட்டு ஒழுங்காகப் பொருத்தப்பட்டன. புதிய மேசை கதிரைகளும் இடம்பிடித்திருந்தன. ஸ்டோர் கீப்பராக அந்த இடத்தை அலங்கரிக்கப்போவது ஃபாத்திமாதான் என்பதில் எவருக்குமே சந்தேகமிருக்க வில்லை.

அவளைவிட அனுபவத்திலும் கல்வித் தகைமையிலும் கூடிய பலர் இருக்கத்தான் செய்தார்கள். இருந்தாலும் அது நிர்வாகத்தின் விருப்பத்தேர்வென்பதால் எவருமே அலட்டிக் கொள்ளவில்லை.

''அவங்க ரெண்டுபேரேம் நம்பிக்கில்லாமத்தான் இப்படிச் செஞ்சீக்கிய.''

''இல்லடீ நாய்க்குட்டிக்கி எர போட்டாத்தானே வாலாட்டிய.''

பலதரப்பட்ட கருந்துக்கள் வெளிப்பட்டன.

நாளாந்தம் வேலைமுடியும் நேரம் வீவிங் பக்கம் ஜினதாஸவும் புளௌஸ் பக்கம் நியாஸூம் போய் ஒவ்வொருவரதும் வேலைகளைப் பதிவுசெய்துகொண்டு தயாரிப்புகளை அங்கே அனுப்பிவைக்கும் வழமையில் எவ்வித மாற்றமும் நிகழப் போவதில்லையென்றுதான் பலரும் எதிர்பார்த்தார்கள்.

ஆனால் புதிய அறிவிப்பைத் தொடர்ந்து ஸ்டோர் ரூம் பக்கம் பரபரப்பாக இருந்தது. போதாக்குறைக்கு சின்ன பொஸ்ஸின் மேற்பார்வை வேறு!

''ஒழுங்கா கியூவில வரத்தெரியவா?'' அவரின் இடிக் குரல் எல்லோரையும் ஒரு கலக்குக் கலக்கியது.

ஃபாத்திமா பதிவு செய்துகொண்டு ஒவ்வொருவராக அனுப்ப, உள்ளே தயாரிப்புக்கள் முறையாக அடுக்கப் பட்டன. அந்த வரிசையில் இனி எல்லோருமே போய்த் தான் ஆகவேண்டும். அதிகாரத் தோரணையில் அனை வருமே தலைசாய்க்க வேண்டுமென்பதை நிலைநாட்டத் தான் இந்த ஏற்பாடோ?

''ஆறு மணிக்கு கேற் மூடமுந்தி கூட்டத்த முடிக் கோணும்.'' நியாஸுக்கு பியோன் மூலமாகத் தகவல் அனுப்பப்பட்டிருந்தது.

ஐந்து மணிக்கு அன்று வேலை முடிந்தபோதும் யாரும் வெளியேறியதாகத் தெரியவில்லை.

''ஃபாத்திமா இன்னம் பொகல்லியா.'' எல்லோரது புலன்களதும் எதிர்பார்ப்பு இது!

அந்தப் புலன்களுக்கு ஒஃபீஸைப் பூட்டிக்கொண். சின்னபொஸ் வெளியேறும் காட்சிதான் தெரிந்தது இதை யாரும் எதிர்பார்க்கவில்லைதான். சிறிது நேரத்தில் ஃபாத்திமாவும் வெளிக்கிட்டபோது அனைவருக்கும் அவள் பொது எதிரியாகவே தெரிந்தாள்.

நஸீமா அங்கோடுவதும் இங்கோடுவதுமாக இருந் தாள். இவ்வளவு நாளும் எடுத்த முயற்சி ஒப்பேறும் வேளையல்லவா? கூட்டத்தை எங்கே வைப்பதென்ற பிரச்சினைதான் போலும்!

''நாங்க பெரிய மகாநாடா வெக்கப்போறது... இந்த மரத்தடல எல்லாரும் இரிப்போம்.'' இது ரஃபீக்காவின் குரல் என்பதில் என்னதான் சந்தேகம்.

அது ஒரு வகையில் பொருத்தமாகவும்தான் இருந்தது

''சரிசரி வாங்கொ'' நஸீமா எல்லோரையும் அழைத் தாள்.

புற்றரையைக் கம்பள விரிப்பாக எண்ணி எல்லோரும் அமர்ந்துகொண்டனர்.

நஸீமா கேட்டுக்கொண்டபடி தயாவதி எழுந்துபேச ஆரம்பித்தபோது எல்லோரது மகிழ்ச்சியும் கரகோஷ மாக பரிணாமம் பெற்றது. அந்த உணர்வுக்கோலத்தில் ஒன்று கலந்துவிட்ட அவளுக்கு சற்றுநேரம் என்ன பேசுவ தென்றே புரியவில்லை.

''பொது நன்மைக்காகத்தான் நாங்கெல்லாரும் இங்க ஒண்டுகூடீக்கோம்... இதிலே தாருக்குமே சொந்த நன்மயள் இல்ல... தனிப்பட்டி நன்மய வழிபாக்கியவங்க தான் இங்க வராமமீக்கியாங்க...''

''தெரீம் தெரீம் டேப்''

இடையிடையே சிலகுரல்கள்... அவற்றைச் சிரித்துச் சமாளித்துக்கொண்டு...

''எங்களுக்கு எத்தினயோ அந்நீதியள் நடந்து கொண்டீக்கி... அத நாங்க நாங்க பேசிக்கொளுகியத்தால ஒரு பொரோசனமுமில்ல... எங்களுக்கென்டொரு சங்க மீந்தா அது மூலமா எதேம் தாரோடேம் பேசேலும்.'' என்றவாறு அமர்ந்தாள்.

அதைத் தொடர்ந்து எழுந்த ஜினதாஸ ''இப்பிடி யொரு சங்கம் அமக்கியது சம்பந்தமா நானும் நியாஸும் இன்னம் செலரும் சேந்து எத்தினயோ பேரச் சந்தித்துக் கதச்சோம்... அவங்க தந்த யோசினப்படி எல்லம் தயாரித் தீக்கி... லேபர் ஒஃபீஸோட நாங்க தொடர்புகொள் ளோணும்...சட்டபூர்வமா எங்கட உரிமகளப் பெத்துக் கொள்ள முயற்சிக்கோணும். இதுக்கு ஒங்க எல்லாரடேம் ஒதவி ஒத்தொழப்பு இருக்கோணும்.'' என்றார்.

தொழிலாளர் ஐக்கியம் என்பதும் அதன் வலிமையும் சாதாரணமானதல்ல என்பதை ஜினதாஸ தெளிவாக உணர்த்தி வைத்தான்.

பேனையும் தாளுமாக எழுந்துநின்ற நியாஸ் உடனடித் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினைகளை பலரது அபிப்பிராயங்கள் மூலம் ஒன்றுதிரட்டிக் கொண்டான்.

சம்பளம்—வேலை நேரம்—தொழில் உறுதிப்பாடு—இப்படிப் பல விடயங்கள் அங்கே அலைமோதின.

கூட்ட இறுதியில் ஜினதாஸ தலைவராகவும் நியாஸ் செயலாளராகவும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப் பட்டனர்.

மாலைச் சூரியன் அஸ்தமிக்கும் அந்த வேளையில் 'வேஜி தொழிலாளர் சங்கம்' ஆரவாரமாக உதய மாகியது.

## 10

நஸீமா உழைப்புக்கு வெளிக்கிட்டு ஓராண்டுக்கும் மேலாகியது. அவள் தைரியமாக ஃபெக்டரிக்குச் சென்ற போது ஊரெல்லாம் ஒருவித பேச்சு அடிபட்டதை எவரும் மறந்திருக்க முடியாது. அதற்காக அவள் பயந்து வீட்டுக்குள் பதுங்கிவிடவில்லை. அதன் பிரதிபலிப்பாக இன்று நாற்பதுக்கு மேற்பட்ட உள்ளூர்ச் சகோதரிகள் அங்கே செல்கின்றனர். பிரவகித்துவரும் ஆற்றை அவ்வளவு இலகுவாகத் தடுத்து நிறுத்திவிடக் கனவு காண்பது எவ்வளவு மடமை!

அவளுக்குப் பின்னணியில் நின்று இந்தப் பெரு மாற்றத்துக்கு வழிவகுத்தது நியாஸ் மாத்திரமல்ல; அவனது நண்பர்களும்கூடத்தான். இன்றவள் ஃபெக்டரி யில் எவராலுமே மறக்கமுடியாத ஒரு பாத்திரம்.

நஸீமா உழைக்கப் போவதை அவளது வாப்பா விரும்பாதபோதும், அவள் திறமையும் சமார்த்தியமும் பொருத்தியவள் என்பதை நன்கு தெரிந்து வைத்திருந்ததால் அவ்வளவாக அவர் அந்த விடயத்தில் குறுக்கே நிற்கவுமில்லை.

பெருத்த வசதிகள்கொண்ட குடும்பமாக அது இல்லாதபோதும், நாட்களை நகர்த்தக்கூடிய அளவுக்கு வருவாய்ப் பலவீனம்கொண்ட குடும்பமும் அல்ல. அவள் தனது சொற்ப வருவாயை வீணாக்காமல் நல்ல முறையில் நெறிப்படுத்தி வருகிறாள் என்பதற்கு அங்கே அத்தாட்சிகள் காணக்கிடைத்தன. ஆறு சாய்கதிரைகள் கொண்ட ஸெட்... அலுமாரி... இவைகள் போதாதா என்ன? அதுபோக மக்கள் வங்கியில் கணக்கும் ஆரம்பித்திருந்தாள்.

''உம்மா அந்த பேஸனத் தாங்கொ''

சமையலறைக்கு வந்த உம்மாவிற்கு உதவத் தொடங்கினாள் அவள். இப்பொழுதெல்லாம் உம்மாவுக்கு அவ்வளவாக உதவிசெய்யக் கிடைக்காததால், கிடைக்கும் சிறுவாய்ப்பை தவறவிடமாட்டாள்.

''நஸீமா நான் செய்தன்... நீ பெய்த்து ஹாலாறு. வெளணேலீந்து கஷ்டப்பட்டிட்டுவந்து இங்கேம் ஏலுமா... சென்னாக் கேக்கோணேன்.''

''எனக்கொரு கஷ்டமுமில்லும்மா... இந்த வயஸில ஒங்களுக்கேலுமென்டா எனக்கேலவா'' தாய் — சேய் பாசம், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கவில்லை.

''மஃரிபுக்கு பாங்கு செல்லிய நேரமாகீட்டே மகள்''

''ஓ உம்மா நான் லைட்டேத்தீட்டு வாரன்'' அவள் எழுந்தாள்.

பெற்றோல்மெக்ஸை கொழுத்தித் தூக்கும்போதே மஃரிபுக்கான பாங்கொலித்தது...

''அல்லாஹு அக்பர்...''

பாங்கு சொல்லி முடிந்ததும் ஏந்திய கைகளை முகத்திலே தடவிக்கொண்டு வுளூ செய்வதற்காக கிணற்றடிக்குச் சென்றாள் நஸீமா.

வுளூ செய்துகொண்டு எழும்பும்போது அடிவானில் தெரிந்த இளம்பிறை அவளைப் பார்த்துப் புன்னகை பூத்தது. இன்னும் இரண்டு மாதத்தில் தோன்ற விருக்கும் ரமழான் பிறை சட்டென்று அவளுக்கு ஞாபகம் வந்தது.

தொழுது துஆ செய்யும்போது ஃபெக்டரி பிரச்சினைகள் சுமுகமாகத் தீரவேண்டுமென்பதற்காகவும் அவள் பிரார்த்திக்க மறக்கவில்லை.

பாயைச் சுருட்டிவைத்து எழுந்தபோது முன் வாசலுக்கு அவளது வாப்பா வந்து சேர்ந்தார். காலை முதல் கஷ்டப்பட்டுச் சோர்ந்துவரும் அவருக்கு மனைவி மக்களின் அன்பு கலந்த பணிவிடைகள்தான் இழந்த சக்தியை மீண்டும் இழுத்து வந்து சேர்க்கும்.

''கொஞ்சம் நில்லுங்கொ கோப்பி கொணுவாரன்''

அவள் குசினிக்குள் செல்லும்போது அங்கே கோப்பி தயாராகிக்கொண்டிருந்தது. மகளுக்கு வாப்பா மீதுள்ள பற்றைவிட, மனைவிக்கு கணவன் மீதுள்ள பற்று எப்படிக் குறைந்துபோகும்!

கோப்பியைக் கொண்டுவந்து கொடுத்தபோது, அவர் தனக்கேயுரிய 'சாய்ப்புட்டுவத்தில்' அமர்ந்து பருக ஆரம் பித்தார்.

ஏழரையாகும்போது சமையல் வேலைகளை முடித்து விட்டு நஸீமாவின் உம்மா முன்னே வந்துவிட்டாள்.

இனி மூவரும் சேர்ந்து கதைத்துச் சந்தோஷிப்பது இன்று நேற்றைய பழக்கமல்ல; காண்பவர்கள் இவ்வளவு குதூகலக் குடும்பமா என்று நிச்சயம் வியப்பார்கள்தான்

''எனத்தியன் புள்ள ஃபெக்டரீல ஒரே கொழப்ப மெண்டு கதக்கியாங்க?'' சுருட்டுப் புகையை சுருள் சுருளாக ஊதியவாறு கேட்டார் அவர்.

''அங்க எங்கட புள்ளயள் பொகத்தொடங்கின நாளேலீந்து ஒரே கரச்சலாம்.'' நஸீமாவின் உம்மாவும் அதற்கு ஒத்தடம் கொடுத்தாள்.

''பொய் வாப்பா... அங்க அப்பிடியொரு கொழப்பமு மில்ல... அவங்க செய்த அநீதியள இப்ப எல்லாரும் எடுத்துக் காட்டிய... அதத்தான் கொழப்பமென்டு செல்லிய.'. நஸீமா விளக்கம் கொடுத்தாள்.

''நீ எனத்தியன்புள்ள செல்லிய. அந்த மனிசன் முஸ்தஃபா ஹாஜியார் தங்கமான மனிசன். அவரட பரம்பரேலே குத்தம்கொறயில்ல... அவங்களா அநியாயம் செய்யப்போற? ஊருச்சனத்துக்கு நோம்பில குடுக்கிய தொன்டே போதும். மிச்சமெனத்துக்கன். போன வருஷம் ஆளுக்கு இருவத்தஞ்சுருவ ரெண்டுகொத்தரிசி... இனி கணக்குப் பாருங்கொ.'' ஒரே மூச்சில் புகழ்பாடி ஓய்ந்தார்.

''அதுசரி வாப்பா நாங்க இல்லயென்டல்ல... ஆனா ஃபெக்டரீக்குள்ள நடக்கியது ஒங்களுக்கு வெளங்கியல் லேயே... செய்தவேலக் கேத்த கூலிதாரல்ல... மாடுமாதிரி வேல செய்யோணும்... இதெல்லாம் ஞாயமா வாப்ப.''

''நீ எனத்தியன்புள்ள வெளப்பமில்லாத பேச்சிப் பேசிய... ஊட்டுக்குள்ள சும்ம நின்ட கொமரியளுக்கு போதவா இப்ப குடுக்கியது... தொழிலொன்ட பழகியது போதாத்துக்கு அதுகளுக்கு கரச்சலும் குடுக்கிய.'' கொஞ்சம் கோபத்தோடுதான் இரைந்தார்.

அவர் மாத்திரமல்ல, அவரைப்போன்ற மனோபாவம் கொண்ட அத்தனைபேரும் இதைத்தான் வாய்ப்பாடாகச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அதனை அவ்வளவு

இலேசாக மாற்றிவிட முடியாதென்பதும் அவளுக்கு நன்றாகத் தெரிந்த விடயந்தான்.

''ஒங்களுக்கு வெளங்கியல்ல வாப்பா... நாங்க சண்ட புடிக்கல்ல... ஞாயமாத்தான் கேக்கிய.''

''ஒனக்கெனதுக்கன் மகள் இதியள்? எல்லாரும் ஈக்கியமாதிரி ஈந்திட்டு வந்தா முடிஞ்சேன்.'' இது உம்மா வின் ஆலோசனை.

''ஒன்டுமில்ல எல்லம் எங்கட நியாஸட வேலதான். அவன் எங்க போனாலும் சும்மீக்காம ஒரொரு கொழப் பத்த எடுத்துப்போடுவான்... எல்லாத்தேம்போல அல்லா உண்டுமெண்டு சும்மா ஊட்டிலீக்கியதுதான் நல்லம் போல எனேப்படுகிது'' சுற்றி வளைத்து விடயத்துக்கு வந்தார் அவர்.

''அது மட்டும் செல்லவான வாப்பா... இந்த ஃபெக்ட ரிக்கு எங்கடூரிலீந்து மொதலாவது போன பொம்புள நான். நானே நின்டா மத்தவங்களும் மெதுமெதுவாக நின்டிடுவாங்க... அப்ப அந்த பாவத்த நான்தானே சொமக்கோணும்.''

''நீ தின்ன வழில்லாமலயா அங்கபோன மத்தவங் களப்பத்தியெல்லாம் எங்களுக்கு யோசிக்கேல புள்ள... நாளேப்பின்னுக்கு ஊருலகத்தில நீ வாழப்போறவள்... சும்மா அநியாயமா கதகேட்டுக்கொண்டா அதட பாரதூரம் எங்களுக்குத்தான் தெரீம்.'' நீள்பார்வைத் தரிசனத்துடன் கதைப்பது போன்ற எண்ணம் அவருக்கு!

வாப்பாவுக்கு நல்லதொரு இஞ்செக்ஷன் பட்டிருப்பது அவளுக்கு நன்றாகவே விளங்கிவிட்டது.

அவள் மாத்திரம் ஃபெக்டரிக்குப் போவதற்கு முற்றுப் புள்ளியிட்டால், அங்குள்ள தொழிற்சங்க நடவடிக்கை களெல்லாம் 'கடாகப்பலாய்ப்' போவது நிச்சயமல்லவா? அவள்தானே எல்லோரையும் இழுக்கும் இயக்கவிசை.

''வாப்பா நான் ஒங்களுக்கு ஒரு கஷ்டமும் வெக்க மாட்டன்... தாரோ ஒங்களுக்கிட்ட கோள் செல்லீக்கி... நாங்க அங்க நூத்துக்குமேல நிக்கிய... எனத்தியாலும் நடந்தா எல்லோருக்கும்தான்... நீங்க எனத்த சொன்னா லும் செய்தன். ஆனா ஃபெக்டரிக்கு மட்டும் பொக வாணாண்டு செல்லவாண.'' அவளது கண்கள் கசிந்து குரல் கரகரத்தது.

''நீ எனத்துக்கன் புள்ள அழுகிய... வாப்ப புத்தி தானே செல்லிய.'' உம்மாவின் சமாளிப்பு.

''சரி புள்ளந் நீ நெனக்கிய மாதிரி செய்... ஆனா அந்த நியாஸோட எதுக்கும் கணக்கா நடந்துக்கோ.'' எதிர் பார்க்காத இடியொன்றைப் போட்டுவிட்டு அவர் எழுந்து சென்றார்.

அவளுக்கு ஒரு மகிழ்ச்சி... ஒரு அதிர்ச்சி... அவள் மனம் பிரலாபித்தது...!

'நியாஸ்'

# 11

தொழிற்சாலை நிர்வாகத்திற்கு இப்பொழுது ஒரே தலையிடி. எந்த நோக்கத்திற்காக கிராமத்துள் அதனை அமைத்து... அதில் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத் தார்களோ அதெல்லாம் தலைகீழாகிப்போய்... நிலைமை வரவர மோசமடைந்து கொண்டிருந்தது. தொழிலாளர் சங்கம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் எடுத்துள்ள முதல் நடவடிக்கையே பெரும் பிரச்சினையை உருவாக்கிவிடும் என்பதற்கு அறிகுறிகள் தெளிவாகத் தெரிந்தன.

ஏனென்றால் சங்கக் கோரிக்கைகள் அடங்கிய பிரதிகள், தொழிற்கந்தோர் உட்பட இன்னும் பல முக்கிய இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தமைதான்.

சின்ன பொஸ்ஸூம் சும்மா விடுவாரா? சங்கம் உதயமான அடுத்தநாளே குறுக்கு வழிகளை நிச்சயம் கையாண்டிருப்பார். ஃபெக்டரியும் வீடுமாக மாறிமாறி நடமாடியவர் இப்பொழுது ஊருக்குள்ளும் கொஞ்சம் தொடர்புகளை வளர்த்திருந்தார்.

அது மாத்திரமா... அவரது காரில் அவரும் நாலைந்து பொடியன்களும் அவ்வப்போது போய்வருவதையும்கூட பலரும் அவதானித்திருந்தனர். காரணங்கள் இல்லாமல் இப்படிக் காரியங்கள் நடக்குமா என்ன?

அன்று சின்னபொஸ் ஃபெக்டரிக்கு வரும்பொழுது ஒன்பதரையாகிவிட்டது. வழக்கமாக, எப்படியும் எட்டு மணிக்கே வந்துசேர்ந்துவிடுவார். அதுவும் எங்கிருந்தோ அவசர அவசரமாக வந்திருக்கிறார் என்பதை பதட்டமும் சிதைந்துபோயிருந்த தலைமுடியும் எடுத்துக்காட்டின.

''இன்டக்கெனா இவளவு சொணங்கின?'' இப்படி யாரும் அதிகார தோரணையில் கேட்கமுடியாதுதான். அன்புத் தோரணையில்தான் ஃபாத்திமா கேட்டிருக்க வேண்டும்.

''முந்தியப்போலயா இப்ப.'' இப்பொழுது பல விடயங்களுக்கும் மூளையைச் செலுத்த வேண்டியிருப்பதை வெளிக்காட்டினார் போலும்!

''பாவம்... இப்ப ஒங்களுக்கு நிம்மதியே இல்ல.'' அனுதாபத்தோடு சொன்னாள்.

''நல்ல காலம் ஒங்களப்போல ஒத்தராவது ஈக்கியத்தில இப்பிடி... இல்லாட்டிப் பெய்த்தியம்தான் புடிச்சீக்கும்.''

அவளால் சிரிப்பை அடக்கமுடியவில்லை.

''ஓ... நாங்க் கஷ்டப்படுகியத்தப் பாத்து ஒங்களுக்குச் சிரிப்பு...''

''அதுக்குச் சிரிக்கல்ல... நீங்க ஒரேயடியா மாறிப்பெய்த்திட்டீங்க... அதப்பாகத்தான் சிரிப்பு வருகிது.'' ஃபாத்திமா சிரித்துச் சிரித்தே சொன்னாள். அந்தச் சிரிப்பில் இழையோடிய நளினங்களை யாரால்தான் ரசிக்காதிருக்க முடியும்?

''நீங்களும் ஒரு பொக்கத்தால என்ன மாத்திப், போட்டீங்க...'' அவரது உள்ளத்துணர்வுகளை வெளிக், காட்ட இதை நல்ல சந்தர்ப்பமாகக் பயன்படுத்திக் கொண்டார்.

''ஓ இவங்கட கூத்தெல்லாம் எந்த நாளும் ஈக்கியல்ல. ஒங்களுக்கு ஆண்டவன் பணத்தத், தந்தீக்கான்... சும்ம ஒன்டுமில்லாம அவங்க கூத்தாடி யாங்க.'' சாய்ந்துகொண்டிருக்கும் மரத்துக்கு முட்டுக் கொடுப்பது போலிருந்தது அவள் பேச்சு.

''சரி நாங்களும் ஒருகை பாப்பம். கொழும்பு ஃபெக்டரிலேம் இதவிடப் பெரிய கூத்தெல்லாம் செஞ்சாங்க. நாங்க பாடம்குடுத்த பாடம்... இவங்க இப்பதான் பாடமாக்கத்தொடங்கியாங்க.'' எல்லா வற்றையும் சமாளிக்கும் தைரியமுண்டென்பதை வெளிக் காட்டினார்.

கதைத்துக்கொண்டிருந்தவர் கோலிங் பெல்லை அழுத்தியபோது பியோன் ஓடிவந்து நின்றான்.

''அந்த நஸீமாவைக் கொஞ்சம் வரச்செல்லு.''

கொஞ்சம் கடுகடுப்போடு, அதிகாரக் குரலுடன் சொன்னமை ஃபாத்திமாவுக்கு விளங்கிவிட்டது. ஏதோ ஏச்சு விழப்போகின்றதென்பதையும் புரிந்து கொண்

டாள். அதற்கும் தன்னைத்தான் நினைப்பாள் என்றெண்ணி அதற்கிடையில் வெளிவரப் பார்த்தபோது..

''இப்ப ஸ்டொக் எப்பிடி?'' என்று கேட்டார் அவர்.

''சாரியென்டா முன்னூறுக்கு மேலீக்கி... புளௌஸ் கொறயத்தான்''

''கொறயவென்டா... எத்தினமட்டு?''

''ஒரு இருநூறு''

''அப்ப இன்னும் ரெண்டு நாளேல வேன் வரச் சொன்னாச் சரி.''

''ஒ நூலும் முடிஞ்சி... ரெண்டு நாளக்கி மட்டுத்தானீக்கி.''

''அதுதான் நியாஸ அனுப்பீக்கி.''

''ஆளக் காணல்லதான்.''

வெளியே நஸீமாவின் நடையொலி அதிகரித்துக் கொண்டு வந்தது. தானும் அங்கே நிற்பது பொருத்த மில்லை என்று அவள் நினைத்தாளோ என்னவோ!

''நான் வாறன்''

''சும்ம நில்லுங்கொ.'' அவளையும் இருத்திக்கொள்ள முனைந்தார் சின்னபொஸ்.

''இல்ல நான் போற.'' மெதுவாக முன்பக்கமாகப் பார்த்தபடி சொன்னாள்.

''அவளவு பயம் போல'' அவரது குத்தல் ஃபாத்திமாவுக்கு கேட்காமலில்லை.

நஸீமா ஃபாத்திமாவின் முகத்தைத் நிமிர்ந்து பார்த்து இலேசாகப் புன்னகைத்தாள். அவளும் புன்னகைத்த வாறே மெல்ல நடந்தாள்.

''எப்பிடி ஒங்கட சங்கமெல்லம்'' ஒஃபீஸுக்குள் கால்வைத்த அவளிடம் முதல் கேள்வியே இதுதான்.

இப்படியொரு கேள்வியை அவள் எதிர்பார்த்திருக்க மாட்டாள்தான். இதற்குமுன்புகூட சங்கத்தைப் பற்றி அவர் அவளிடம் அப்படி எதுவும் கேட்டதில்லையே! அவளுக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை, பதில் எதிர்பார்த்துக் கேட்கப்பட்ட கேள்வியும் அல்லவே!

''இங்க சங்கம் மட்டுமல்ல... எத்தினயோ அசிங்கங்களும் நடக்கியபோல''

அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவர் முகத்தில் கோபமும் வேறு கொப்பளித்து நின்றது.

''நீங்க எத நடத்தினாலும் எங்களுக்கு காரியமில்ல... ஆனா ஃபெக்டரீல இந்த மாதிரி நாய் வேலகய வெச்சிக்கொள்ளப்படாது...''

'எனத்தியனிது' என்று அவள் மூளை குழம்பிப் போய்விட்டது. எதைத்தான் குறிப்பிடுகிறார் என்றுகூட அவளுக்குப் பிடிபடவில்லை. விபரமாகக் கேட்கவும் வார்த்தைகள் வர மறுத்தன.

''இங்க இன்னமெத்தினயோ பொம்புளப் புள்ளயளீக்கி...... கடசீல அவங்கட பேரும் அசடாப்பொகும்.''

இனிமேல் எப்படிச் சகிப்பதென்றே அவளுக்கு தெரியவில்லை. இதயத்துக்குள் உலைபொங்கி வெடிக்கப் போவது போன்ற அழுத்தம். ஏதோவொரு அபாண்டத்தை தன்மீது சுமத்தப்போகிறார் என்பது மட்டும் அவளுக்கு வெளிச்சம்.

''நீங்க... நீங்க எனத்தியன் செல்லிய?'' அவள் படப்படப்போடு கேட்டாள்.

''எனத்தியனா? ஒன்டும் தெரிய... பால் குடிக்கிய சின்ன பொபா''

''நீங்க சுத்திவளக்கத் தேவில்ல... எதுசரி குத்தமீந்தா செல்லுங்கொ''

''சங்கம் சங்கமெண்ட பேரில நீயும் நியாஸூம் கூத்துப்போடியொன்டு மென்டு நான் நம்பல்ல.''

அவளுக்கு 'திக்' கென்றது. என்னவென்றாலும் ஒரு பெண்ணல்லவா? 'செல்லியத்துக்கு ஒன்டுமில்லாத்துக்கு இதா இவங்களுக்கு கெடச்ச' என்று அவள் மனம் ஏங்கித் தவித்தது. கண்கள் பனித்தன.

''சும்ம அழுது எங்கள ஏமாத்தத் தேவில்ல... எத்தினயோ பேரு கேட்டாப்பொறகுதான் நானும் யோசிச்ச.''

''இங்க வரமுந்தியே எனக்கு நியாஸத் தெரீம்... அவரெங்கட சொந்தக்காரன். நீங்க நெனக்கியமாதிரி ஒண்டும் நடக்கல்ல.'' அவளையும் மீறிக்கொண்டு இயல்பான தன்மை வெளிப்பட்டு நின்றது.

அவர் சடக்கென்று கதிரையிலிருந்து எழுந்தார்.

''அப்ப இதப்பாரு'' என்றவாறு ஒரு கடிதத்தை எடுத்து நீட்டினார்.

அவள் கைகள் நடுநடுங்கின. கடிதத்தைப் படிக்க முடியாமல் கண்கள் கலங்கி நின்றன.

பொஸ் அவர்களுக்கு...

உங்கள் ஃபெக்டரியில் கீழ்த்தரமான நிகழ்ச்சிகள் நடைபெறுவதாக அறிந்து மிகவும் வேதனைப் படுகிறோம்.

நஸீமா—நியாஸ் கொஞ்சுதல் கூத்துக்களெல்லாம் வேலை முடிந்தபின்பும் நீடிப்பதாகத் தெரிகிறது.

இவைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இல்லா விட்டால் இந்த விஷயத்தை அம்பலமாக்கவேண்டி நேரிடும் என்பதை அறிவித்துக்கொள்கிறோம்.

இப்படிக்கு

பொது நலம் விரும்பிகள்

''அல்லாவே இப்பிடியா என்னச் சோதிக்கியாய்'' அவளை அறியாமலே இந்த வார்த்தைகள் வந்து விழுந்தன.

''இது பொய்க்கடிதமா ஈக்கேமேலும். என்டாலும் நெருப்பிலாம் பொக வாரல்லயென்டு செல்லுவாங்க... அதச்சொட்டீம் இனிமேலே கவனமா நடந்துகொ ளோணும்''

அவள் நடைப்பிணமாக கவலையை அங்கமெல்லாம் அப்பிக்கொண்டு வெளி வந்தாள். அன்று வீட்டில் வாப்பா வேண்டிக்கொண்டதையும்... இந்நிகழ்ச்சியையும் ஒன்றாகப் பின்னி... பின்னணியில் நடந்து கொண்டி ருக்கும் பெரியதொரு சதியை அவள் ஊர்ஜிதம் செய்து கொண்டாள். இதற்கெல்லாம் மனம் தளர்ந்து ஒதுங்கி விடும் நிலையில் நஸீமா இல்லை.

இதை நியாஸிடம் சொல்வதா என்று யோசித்தவள் 'வேண்டாம்' என்றே முடிவெடுத்துக் கொண்டாள். நல்ல காலம் நியாஸ் ஃபெக்டரியில் இருக்கவில்லை. நஸீமாவின் முகத்தில் தெரிந்த மாறுதல், எல்லாருக்கும் ஏதோ சம்பவித்திருப்பதை உணர்த்திவிட்டது.

''எனத்தியன் நஸீமா?'' என்றவாறு அவளை எல்லோரும் சூழ்ந்து கொண்டனர்.

# 12

டக்... டக்... டக்''

கண்விழித்ததும் தூக்க மயக்கம் தெளியாமல் கட்டிலில் புரண்டு கொண்டிருந்த நியாஸின் காதுகளில் யாரோ கதவில் தட்டும் சத்தம் கேட்பது போலிருந்தது.

''நியாஸ்... டக்... டக்''

யாரோ தன்னைத் தேடிவந்திருக்கிறார்களென்பது ஊர்ஜிதமாகி விட்டது. இந்த சுபஹுக்குள் யாரென்று விளங்காமல், கண்களை கசக்கியபடி வந்து கதவைத் திறந்தான்.

தலையில் தொப்பியோடு அங்கே நின்றான் லாஃபிர். இந்த நேர வரவு ஏதோ முக்கிய விஷயந்தான் என்பதை அவனுக்குணர்த்தியது.

''எனத்தியன் மசான் இந்த ஸொபஹில?'' வியப்புடன்தான் கேட்டான்.

''ஆறு மணியாகப் போகுது... ஸொபஹு கழாவாக முந்தி தொழுதிட்டுவா.''

''மெய்தான் கொஞ்சம் இரீ.'' என்றவாறு உள்ளே சென்றான்.

ஜன்னலைத் திறந்துவிட்ட லாஃபிர் கையிலே சுருட்டிக்கொண்டுவந்து கிழிந்த பேப்பர் துண்டுகளை பொருத்தமாக இணைத்து வாசித்துப் பார்த்தபோது அவனுடைய மெய் பூரித்தது. இப்படி இன்னும் எத்தனையெத்தனை எங்கெங்கு ஒட்டப்பட்டிருக்கின்றதோ....

ஆவி பறக்கப் பறக்க கோப்பிக் கோப்பையுடன் வந்த நியாஸின் கண்கள் கட்டிலில் விரிக்கப்பட்டிருந்த சுவரொட்டியில் நிலைகுத்தின.

'குட்டிகளோடு கும்மாளம்' என்று தொடங்கி அதற்குப்பின் வாய்விட்டு வாசிக்கமுடியாதபடி... பெயர் களையும் சம்பந்தப்படுத்தி வெகு அசிங்கமாய்...

''தொழுதிட்டு வரச்செல்ல தாஹிர் நானடகடேச் சொஹறில ஒட்டீந்தது ஏன்ட கண்ணில பட்ட... கழட்டப் பாத்த ஏலாப்பெய்த்து... துண்டுதுண்டாக் கிழிச்சிச் சுருட்டிக்கொண்டு வந்திட்டன்.'' லாஃபிர் விளக்கினான்.

''இது தாரட எழுத்தாயீக்கும்?''

''தைரியமீக்கியவன் இப்பிடிச் செய்தா?'' உள்ளம யென்டா ஒளிச்சி நின்டா கல்லடிக்கோணும்? பத்துப் பதிநஞ்ச கைல குடுத்தா எதச்செய்யேம் இன்டக்கி ஆளிக்கி.''

''என்டாலும் மசான்... ஆள்கள கண்டுபிடிச்சா ஒரு கண் வெச்சிக் கொளேலும்''

''அது மெய்தான்...நாங்க அந்த வேலேல இப்ப எறங்கினா... அது அப்பிடியே பெய்த்துக்கொண்டீக்கும்... இப்ப செஞ்சிக்கொண்டீக்கியது அப்பிடியே டிம்மாக்கீம்... கோஞ்சநாளேல அவங்க வெட்டக்கி வருவாங்க. லாஃபிரின் கூற்று சற்றே உணர்ச்சிவசப்பட்ட நியாஸை நிதானப்படுத்தியது.

''சரி கோப்பிய குடீ''

பீஸில் ஊற்றிக் கொடுத்துவிட்டு கோப்பையில் அவன் பருகினான்.

''அப்ப நான் போறன்... குளிச்சிட்டு வா.''

''சரி மசான்,''

நியாஸுக்கு இருப்புக் கொள்ளவில்லை. ஊரெல்லாம் இப்பொழுது அவனைத் தொடர்ந்த கதையாகத்தானே பரவிக்கொண்டிருக்கும்! எவ்வளவு கீழ்த்தரமான முயற்சி.

மனச்சாட்சி உள்ளவர்களாக... நேர்மையை நேசிப்பவர்களாக இந்த உலகில் யாரால் வாழமுடியும்? எவ்வளவோ அநியாயங்களையும் அட்டூழியங்களையும் செய்பவர்கள்தானே எவ்வளவோ இலகுவாக சமூகத் தலைமைகளாக அங்கீகாரம் பெற்றுவிடுகிறார்கள்.

நியாஸ் இதற்கெல்லாம் அஞ்சி ஒதுங்கிப்போய்விடவில்லை. அப்படி ஒதுங்குபவனுமல்ல! அதே நேரத்தில் பாவம் அவள்...! அதற்காகத்தான் சற்று கலங்கினான்.

காலை உணவுக்குப்பின் அக்பரின் வீட்டை நோக்கி நடந்தான் அவன். ஸாவியாவைத் தாண்டிச் செல்கையில்... அந்த இடிபாடான சுவரில் ஒட்டியிருந்த சுவரொட்டியொன்று கிழித்துப் போடப்பட்டிருந்தது அவன் கண்களில் பட்டது. சுவரொட்டிகளைக் கண்டாலே கிழித்து விளையாடும் சிறுவர்களின் பழக்கம் நிச்சயமாக நியாஸுக்குச் சாதகமாகத்தான் அமைந்திருக்கவேண்டும்.

''மகேன் கொஞ்சம் நில்லுங்கொ''. சில்லறைக் கடையிலிருந்து ஓடிவந்தார் அம்ஜாத்நானா.

''ஆ... எனத்தியன்?''

''உட்டுக் குடுக்கப்படாது... இது ரஸ்தியாதுகாரனியளட வேல... இவனியள்ட கைய ஒடச்சிப்போடோணும்''. ஃபெக்டரியில் வேலைசெய்யும் ஜெமீலாவின் வாப்பதான் அவர்.

''ஒ நீங்கலியள் ஒதவியா நின்டா நான் எப்பிடீம் உடுகியல்ல.''

''சும்முட்டா நாளேப்பின்னுக்கு இன்னம் கரச்சல்''

அவரது உணர்ச்சிக்கு உந்துதல் கொடுத்து, அவரது கருத்தைச் சீரணித்தது போல் காட்டிக்கொண்டு, பள்ளி

வாசல் ஒழுங்கையால் திரும்பி, மேலே நடந்து கொண்டிருந்தான் நியாஸ்.

பாமர மக்கள் எப்பொழுதும் நியாயத்தின் பக்கமே மனச்சார்புடையவர்கள். ஆனால் அங்கே ஏதோ வகையில் இடம்பிடித்த சமூகத் தலைமைகள் வந்து குறுக்கிடும்போது, தவிர்க்க முடியாமல் அப்பக்கமாகச் சார்ந்துவிடுகிறார்கள். சில்லறைத் தேவைகளையும் உதவிகளையும் நிறைவு செய்பவர்களல்லவா அவர்கள். இந்நிலையில் இவர்களின் ஒத்தாசைகளை இரண்டாம் பட்சமாக வைத்துக்கொண்டே, உண்மையின் பக்கம் மார்பைக்காட்டவேண்டுமென்பதை நியாஸ் கோஷ்டியினர் பல சந்தர்ப்பங்களில் அனுபவவாயிலாக உணர்ந்துதான் வைத்திருந்தார்கள்.

''நியாஸ் நானா''. கைதட்டலைத் தொடர்ந்து ஒரு குரல்.

நின்று திரும்பிப் பார்த்தான் அவன்.

''ஒங்களக் கொஞ்சம் வரட்டாம்!''

நியாஸ் அப்பக்கமாக நடந்தான். சின்னஞ்சிறிய ஓலைக் குடிசை... இரண்டு ஆடுகள் பலா இலைக் கொத்தொன்றைக் கடித்தவாறு நின்றன. உள்ளேயிருந்து முக்காட்டுச் சிரிப்புடன் ஒரு தாய். அது யாரென்று அவனுக்கு அவ்வளவாகப் பிடிபடவில்லை.

''ஆ வாங்கொ நேத்து ராவே ஒங்களக் கூப்பிட்டனுப்பாத்த,'' உள்ளேயிருந்து ஒலித்த மென்குரல்.

''ஓ எங்கட ஸுராயாவா?'' என்றவாறு குனிந்து உள்ளே சென்றான்.

அங்கேயிருந்த 'பங்குப் புட்டுவம்' அவனுக்கு இருக்கையானது.

''நல்ல காலம் வாப்பாம் இல்லாத டைம்... நேத்து ராவு ரெணு மூணுபேர் இங்கவந்தீந்த'' அவள் கதையைத் தொடங்கினாள்.

''ஆ... என்னத்துக்கன்?'' அவன் காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டான்.

''ஊரெல்லம் நாத்தமாயீக்காம்... ஃபெக்டரீல எத்தினயோ கொழப்பமாம்... புள்ளயள அனுப்பாமீந்த மட்டுக்கு நல்லமாம்... எங்கட வாப்பாம் ஓ ஓ வென்டு தலயாட்டிக்கொண்டீந்தாரு... கொழப்பம் செய்தவங்கள வெலக்கப்போறாம்... இப்பிடி ஒரு கொடக் கத... நான் நெனச்ச அதோட போறெறான்டுமென்டு...''

''இனியினி...'' நியாஸுக்கு அறிந்துகொள்ளும் ஆவல்.

''இங்கிலிஸால எழுதின பெரிய காயிதமொன்டு, அதில ஸைன் வெச்சித்தரட்டாம்... மத்தவங்களுக்கிட்ட கேக்காம எனக்கு ஸைன் வெக்கேலான்டிட்டன்... சின்ன பொஸ்தானே செல்லி அனுப்பக்கிய பயப்படாம வெக் கட்டாமென்டு வாப்ப செல்லியாறு... நான் ஏலான்டே சென்ன''. வெளியே போயிருக்கும் வாப்பா வந்துவிடுவாரோ என்ற பதட்டத்தோடு அவசர அவசரமாகச் சொல்லி முடித்தாள்.

''இப்பிடி இன்னம் எத்தின எடத்துக்குப் போனோ தெரிய... ஒவ்வொரு புலானப்போட்டு ஏமாத்தப் பாக்கியானியள்.'' சிரித்த பாணியில் சொன்னான் நியாஸ்.

''பாருங்கொ மகன் இவள்ட வாப்பாக்கும் ஒன்டும் வெளங்கியல்ல,'' என்றாள் ஸுராயாவின் உம்மா.

''ம்... அப்பிடி வெளங்காதவங்களத்தானே இவனியளால ஏமாத்தேலும்... பொகுத்தத் தூக்கிக்கொண்டு போஸ்கெடி குத்தூஸும் அவன்ட ஆள்களும் வந்தீப்

பானியள்... எல்லம் பகஊவுக்கு வேல செய்தவனியள்... சாக்குநெறயிதெண்டா உம்மட கழுத்தேம் அறுப்பானியள்... நல்லகாலம் நீங்க கூப்புட்டுச் சென்னு.'' சுணக்கத்தைக் காட்டிக்கொண்டு படபடப்போடு விடை பெற்றான் நியாஸ்.

பொய்க் குழப்பநிலையை சிருஷ்டித்து பலரைப் போகாமல் தடுப்பதற்கும், இன்னும் சிலரை மானபங்கப் படுத்தவும் துரிதமாகப் பின்னணி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்களென்பது இப்பொழுது நியாஸுக்கு உறுதியாகிவிட்டது. அதோடு ஏன் கையொப்பம் கேட்டார்களென்பது மட்டும் அவனது சிந்தனையோட்டத்தில் பிடிபடவில்லை.

அக்பரின் அறை வழமையான ஆரவாரத்தோடு கலகலத்தது.

''ஆ மசான் சீக்கிரம் வா... சங்கம் தேவில்லயெண்டு எல்லாருக்கிட்டேம் ஸைன் எடுத்துத்திரீதாம்''. காதர் முந்திக்கொண்டு கத்தினான்.

நியாஸுக்கு விஷயம் பளிச்சிட்டது.

''ஆ அப்பிடியா?'' என்று கேட்டவாறு அமர்ந்து கொண்டான்.

# 13

அன்று ஏழரை மணிக்கே ஃபெக்டரி பரபரப்பாக இருந்தது. முதல் நாள் ஊரில் நிலவிய பதட்டத்தைப் பகிர்துகொள்வதே அத்தனை பேரதும் ஆர்வத்துடிப்பு.

''சீ நெனக்கச்செல்லே வெக்கமாயீக்கி... பொம்புளச் சகோதரம் இல்லாதவனியள்தான் கைகூசாம இப்படி எழுதிய.''

''அவனியளுக் கெனத்தியன் அவளவு கெக்கும' அவனியள்ட தாத்த தங்கச்சிமாரு இங்கீந்தா இப்பிடிச் செய்வானியளா?''

''வேற தாருமென்டா ரோட்டெறங்கிவாரல்ல நாளென்டா சத்தியமா ஃபெக்டரிக்கி வாரத்தே நிப்பாட்டிய... அவள் எல்லாத்துக்கும் துணிஞ்சவளச் சொட்டேம் குத்தமில்ல.''

பலரகமான அபிப்பிராயங்கள் கருத்துக்களத்திலே தளும்பின.

அப்பொழுதுதான் நஸீமா அங்கு வந்து சேர்ந் தாள். அவளில் எவ்வித மாறுதலுமே தெரியவில்லை. வழமையான சிரிப்பும் கலகலப்புமாக இருந்த அவளைக் சூழ்ந்து கதை கேட்கத் தயாராகினர் அனைவரும்!

''அடியேய் நீங்களியலாவது ஒழுங்கா இரீங்கொ, இல் லாட்டி சொகருகள்ள தான் நிக்கவாகும்.'' நஸீமா என்ன கூறுகிறாள் என்பது எல்லோருக்கும் விளங்கி விட்டது.

''ஒ...நீ பேசாம நேத்தெல்லம் ஊட்டுக்குள்ள பூந்துக் கொண்டீந்திட்டு இப்ப வந்து வாயடிக்கிய. எங்களுக்கு மட்டும் எழுதீந்தா அவனியள இழுத்துக்கொணு வந்து நடுச்சந்தில வெச்சு.'' ரஃபீக்கா சொல்லி முடிக்க முன்னரே இடைவெளியை நிரப்பிக்கொண்டு சிரிக்கத் தொடங்கிவிட்டனர்.

''சரி ஒன்னப்பத்தி நான் இன்டக்கி எழுது ஒட்டியன்... ஒன்ட கெட்டித்தனத்தப் பாக்க''. இதி நஸீமா.

''ஒன்ன அப்பிடிச் செஞ்சி வேலில்ல... நீ எங்களப்போல பொம்புள தானே.'' அடுத்த சிரிப்பு!

''கேட்டா செய்தி... இன்டக்கி நான் வாப்போட சண்ட புடிச்சிக் கொண்டுதான் வந்த.'' வீவிங் பக்கம் போகவேண்டிய அமரா, புதிய செய்தியோடு வந்தாள்.

அவள் வந்து சேர்ந்ததும் நஸீமாவின் மார்கெட் ஒரேயடியாகச் சரிந்தது. எல்லோரும் அவளையே மொய்த்துக்கொண்டனர்.

''ஒனக்கெனத்தியன் அந்தமட்டு அவசரம்... வாப்போட சண்ட புடிக்கப்போன... அவங்க பாத்துக் கேட்டு செஞ்சிவெக்கியொண்டும்தானே.'' கழுத்தை நீட்டியபடி ரஃபீக்கா அதற்குள்ளும் வந்து புகுந்துகொண்டாள்.

அமராவுக்கு வெட்கம் வெட்கமாய் போய்விட்டது.

''அடி ஒனக்குத்தான் இப்ப தேவப்பட்டீக்கி... அதுதான் நீ ஒத்தரொத்தருக்காச் செல்லிய...''

இக்கட்டான சந்தர்ப்பத்தில் நேரத்தை வீணாக்காதே யென்று ஸரீனா சொன்னதும் மெல்ல அவள் ஓரம்போய்விட்டாள்.

''எங்கட வாப்பவ நல்லா தாரோ ஊசேத்தீக்கி... ஃபெக்டரீல கரச்சலென்டு பொகவாணவாம்... போற வங்கள வெலக்கியாம். இன்டக்கி படிச்சவங்களே ஜொப்பில்லாம ஈக்கச்செல்ல அவரட மொகத்துக்காம் எனக்கு ஜொப் தந்த... அந்த மதிப்ப வெக்காம நான் ஜினதாஸோட சேந்துக்கோ நிக்கியாம்... சும்ம அநியாயமா நல்ல மனிசர பகச்சிக்கொளவாணமாம்.'' தொகுப்புரையை நிகழ்த்தி ஓய்ந்தாள் அமரா.

''அப்ப எத்தினயோ மாதிரி வேல நடக்கிய போல.'' அதிசயத்தோடு சொன்னாள் ஒருத்தி.

''ம்... எங்கட வாப்பாக்கெட்டேம் ஆளனுப்பீந்த... நான் நல்லா குடுத்தனுப்பின.'' ஸுராயாவும் அழுத்தம் கொடுத்தாள்.

''ஆ அன்ன ரெண்டுபேரும் வாராங்க.'' சினிமாவில் காதல்ஜோடி வரும்போது கலரி ரசிகர்களின் ஆரவாரம் அப்போது ஜினதாஸவுக்கும் நியாஸுக்கும் கிடைத்தது.

''எனத்தியன் எல்லாரும் இங்க கூடிக்கொண்டு நிக்கிய... ஃபெக்டரிச் சட்டம் தெரியவா?'' ஜினதாஸ இப்படிக் கேட்டுக்கொண்டே வந்தான்.

''ஓ ஃபெக்டரிச் சட்டம் தொடங்க இன்னம் பத்து நிமிஷமீக்கி.'' யாரோ ஒரு துடிதுடிப்பின் பதிலடி இது.

தங்களுக்குள் கதைத்தபடியே ஜேம் மரப் பக்கமாக எல்லோரும் போய்ச் சேர்ந்தனர். முன்னறிவிப்பில்லாத கூட்டம்போல அது அமைந்தது. பாவம்; முன்பெல்லாம் எல்லோரும் திட்டித்தீர்த்த பொடிஹாமிகூட இப்பொழுது எல்லோரதும் அனுதாபத்துக்கும் உரியவளாக சங்கமித்திருந்தாள்.

''இப்ப எத்தினயோ விஷயங்களப்பத்தி ஒங்களியளுக்கு செல்லோணும். நேரமென்டா இல்லதான். அதச்சொட்டீம் சிரிச்சிக்கொண்டீக்காம விஷயத்தக் கேளுங்கொ.'' என்று ரஃபீக்காவைப் பார்த்தவண்ணமே நியாஸ் சொன்னான். அவள்தான் இடையில் வேறொரு பக்கமாக கவனத்தைத் திருப்புபவளாயிற்றே.

''நேத்து எத்தினயோ கூத்து... நோட்டீஸ் ஒட்டினாங்க... அதிலீந்து வசனங்கள இவடத்தில செல்லேல... என்னேம் நஸீமாவேம் பத்தி மிச்சம் மோசமா எழுதீந்தாங்க... நாங்க எவளவு மோசமாணவங்களென்டு ஒங்களுக்கு தெரீந்தானே...'' நியாஸின் கருத்து வெளிப்பாட்டுத் திறமையை எல்லோரும் ஒரு முறை மெச்சிக்கொண்டனர்.

''இதனால நீங்களெல்லம் மோசமாப் பெய்த்திடுவீங்களாம்... அப்பிடி நீங்க தாராவது எங்களால கெட்டுப்பெய்த்தீந்தா இனிமேலக்காவது திருந்திக்

கோங்கொ... செல புள்ளயள்ட வாப்பமார ஆள்போட்டுப் பயங்காட்டீக்காங்க... சல்லி தாரெண்டு ஸைன் கேட்டீக்காங்க...

''இப்பிடியெல்லம் நடவடிக்க எடுத்து வாராங்க... இதெல்லம் எங்கட ஒத்துமயக் கண்டபொறகுதான் நடக்கிய. நாங்க நெனச்ச இண்டக்கி அரவாசிப் பேருதான் வருவாங்களென்டு... இங்க பாத்தா தப்பாம எல்லாருமே வந்தீக்கி...''

''அதோட இனுமொன்ட மனசில வெச்சிக்கொளோணும். இதிலயெல்லம் தோத்துப்போனென்டு அவங்க பேசாமீக்கப் போறல்ல... சல்லிக்காரனுக்கு ஆயிரம் மொகமென்டு செல்லுவாங்க... இப்பவே இன்னம் எத்தினயோ திட்டம் போட்டு வெச்சீப்பானியள்... ம்... மிச்சம் கவனமா இரீங்கொ. ஒத்தரும் பயப்படப்படாது... ஒத்துமயக் கையுடேம் படாது.'' அவன் பேசி முடிக்கவில்லை. அதற்கிடையில்...

''டாண்... டாண்''

''ஆ நேரமாகீட்டு எல்லாரும் போங்கொ.' ஜினதாஸ அவசரப்படுத்தினான்.

அப்பொழுதுதான் அங்கு வந்தார் சின்னபொஸ் அது அன்றாடம் நடக்கும் சங்கதிதான். ஆனால் அவருக்குப் பக்கத்தில் நின்ற 'தடியன்' யாரோ?

'அவனுக்கு இங்கெனத்தியன் வேல?' என்று யாரும் கேட்கவில்லைதான், எனினும் ஒவ்வொருவரது மனதிலும் இக்கேள்வி கம்பீரமாக எழுந்து நின்றது.

# 14

ஃபெக்டரியிலிருந்து வந்தால் தேநீர் அருந்திவிட்டு தோட்டத்துக்குள் கொஞ்சநேரம் உலாவுகையில் இரவாகிவிடும். ஆறுமணிச் செய்தியைக் கேட்டுக்

கொண்டே விளக்கை ஏற்றிவிட்டு வெளிவேலைகளில் ஈடு படுவது கடந்த இரண்டு வருடங்களாக ஜினதாஸவுக்கு பழக்கமாகிப் போய்விட்டது.

ஆனால் இன்று... நாளை காலையிலேயே தபால் செய்யவேண்டிய பல கடிதப் பிரதிகள் எழுதவேண்டியிருந் ததால் விளக்கேற்றும் படலம் முடிந்ததும் மேசையின் முன்போய் அமர்ந்தான்.

ஒரு காரியத்தில் மனம்வைத்து முன்சென்றால் இறுதி வரை பின்வாங்காமல் செயற்பட வேண்டுமல்லவா? தியாகக் கற்களால் கட்டியெழுப்பப்படுவதுதானே சாதனைக் கோபுரங்கள்! இந்தக் கொஞ்சகாலமாக அவன் எவ்வளவோ சொந்த லாபங்களை இழந்துள்ளான். அதே நேரத்தில் ஆத்மார்த்த ரீதியாக எவ்வளவோ உறவுகளைச் சம்பாதித்துள்ளான்.

''சீ நேர்மையான வேண்டுகோள்கள் புறக்கணிக்க எவ்வளவு கீழ்த்தரமான வேலகளச் செய்தாங்க!'' அவன் மனம் இந்நாட்களின் நிகழ்ச்சிப் பின்னல்களை மனதுள் நெளியவிட்டு வேதனைப்பட்டுக்கொண்டது.

'இந்தங் சின்ன ஃபெக்டரீலே இப்பிடியெல்லம் நடக்கியென்டா பெரிய பெரிய எடங்கள்ல எப்பிடி ஏமாத்து நடக்கும்... அப்பிடியெல்லம் செஞ்சாத்தானே லேசா முன்னேறன்ட'

''டங்... டங்''

சுவர்க்கடிகாரம் ஏழுமுறை ஒலித்தபோதுதான் இவ்வளவு நேரமும் எதுவுமே எழுதாமல் சும்மா யோசிப்ப திலேயே நேரத்தைக் கடத்தியுள்ள உண்மை ஜினதாஸ வுக்குப் புரிந்தது. கூடவே இப்பொழுதே எழுதி நியா ஸிடம் கொண்டுபோக வேண்டுமென்ற நினைவும் எழ... பேனாவைத் திறந்து எழுத முனைந்தான்.

''எனத்தியன் மகன் இன்டக்கி எழுதிய?'' அவனது உம்மா அதிசயத்தோடு கேட்டாள்.

''ஃபெக்டரி வேலதான் உம்மா... நாளக்கி அவசரமா தேவப்படுகிய காயிதமியள்.''

''மகன் நிக்கியசெய்தி தெரியவேன்... தெரிஞ்சிந்தாக ஹட்ட கொஞ்சம் கொணுவாரேன்... இப்பாம் அடுப்பில தண்ணீக்கும்'' என்றவாறு உள்ளே சென்றாள் அவள்.

ஜினதாஸ எழுதிமுடித்த கடிதங்களை மீண்டும் ஒரு முறை வாசித்துப் பார்த்தான். அவனை அறியாமலேயே ஒருவித ஆத்திரம் மனதை ஆக்கிரமித்தது. அப்பொழுது எட்டுமணி பிந்திவிடவில்லையாதலால் நியாஸ் வீட்டுக்கு இப்பொழுதே போவது நல்லதென்று பட்டது அவனுக்கு!

''ஆ இந்தாங்க'' ஒரு கையில் கஹட்டக் கோப்பையும் மறுகையில் வீட்டில் தயாரித்த கருப்பட்டிக் கருகலுமாக அவனது உம்மா வந்தாள்.

அந்தவேளையில் அப்பானம் அவனுக்கு மிகுந்த தெம்பளித்தது. கடிதங்களை நீண்ட உறையொன்றில் போட்டுக்கொண்டிருக்கையில் வெளியே வேலியோரத்தில் நாய் குரைக்கும் சத்தம் கேட்டது. இந்த வேளையில் யார் வரப்போகிறார்கள்? ஜினதாஸ நினைத்துப் பார்த்தான்.

''தாரோ வார போலீக்கி'' அவனது உம்மா எட்டிப் பார்த்துவிட்டுச் சொன்னாள்.

இரண்டு உருவங்கள் முன்னோக்கி வருவதைக் கண்ட அவன் விளக்கின் வெளிச்சத்தைச் சற்றே கூட்டிவிட்டான். அவனது உம்மா கதிரைகளைத் தட்டித் தயார்படுத்தினாள்.

''மிச்சம் நாளேப் பொறகு தம்பிரான் வார.'' இனம் கண்டுகொண்ட மகிழ்ச்சியால் அவள் குதூகலித்தாள்.

''ஆ... சின்னமாமா வாங்கொ.'' அவனும் சிரித்தபடியே வரவேற்றான். கூடவே வந்தவர் யாரென்று இருவருக்குமே தெரியாதபொழுதும் அவனுக்கென்றால் எங்கோ பார்த்ததுபோன்ற ஞாபகம்... எங்கே? எப்போது? என்பது மாத்திரம் பிடிபடவில்லை.

''இவரு தாரன்? எனக்குத் திட்டமில்லே.'' தனது தம்பியிடம் கேட்டாள் அவள்.

''இவரு ஏன்ட கூட்டாளி தாத்தா... மருமகனக் கொஞ்சம் பாக்கோணுமென்டு வந்துசென்ன... நான் அப்பிடியே இங்கல கூட்டிக்கொணுவந்த...''

''ஆ... அப்பிடியா நல்லகாலம் மகன் நின்டுபட்ட. வேறநாளக்கென்டா இந்த டைமுக்கு ஆளில்ல.'' மகனை வீடுதேடி வந்திருக்கிறார்களேயென்ற பெருமையில் தாய்க்காரி சொன்னாள்.

''நீங்க எந்தப் பொக்கம்?'' புதியவரை விசாரித்தான் ஜினதாஸ.

'வெல்லக்கரமாடின் என்டா எல்லாருக்கும் தெரீம்... நல்ல பொர சுத்தமான மனிசன்.'' சின்னமாமா முந்திக் கொண்டு அறிமுகம் செய்துவைத்தார்.

''ஆ அப்பிடியா நல்லம் நல்லம்''.

தலையாட்டிச் சிரித்துக்கொண்டான் ஜினதாஸ. அந்தப் பெயரை அவனும் பலமுறைகேட்ட ஞாபகங்களை இரைமீட்டிப்பார்த்தான். முகத்தில் படர்ந்திருந்த பெரிய மீசையே முரட்டுச் சுபாவத்தை வெளிக்காட்டிக் கொண்டிருந்ததால், கேள்விப்பட்ட சம்பவங்களில் உண்மை இல்லாமல் போகாது என்ற முடிவுக்கே வரவேண்டியிருந்தது.

''ஜினதாஸ இப்பேய் அந்த ஃபெக்டரீலயா வேல,'' சின்னமாமா சாடையாக நூலிழுத்தார்.

''ஓ ஓ...'' வரவின் நோக்கம் புரிந்துவிட்டது ஜினதாஸவுக்கு.

''எனத்தியன் அங்க வேல?''

''கணக்கு வழக்கு எழுத்து வேலயள்தான்.''

''அங்க ஆம்பிளயள் மிச்சம்பேர் வேல செய்தா?''

''எல்லம் நாலஞ்சிபேர்தான் ஆம்பிளயள்... மத்த தெல்லம் பொம்பிளயள். நூறுபேர் மட்டீக்கி.'' அவன் புள்ளி விபரங்களை ஒரேயடியாக முன்வைத்தான்.

''அதில... எங்கட ஜாதி எத்தினபேரன்?'' கரகரத்த குரலுடன் மாடின் கேட்ட கேள்வி இது.

அந்தக் கேள்வியே ஜினதாஸவுக்குப் பிடிக்கவில்லை. அதனால்தான் ''எங்கட ஜாதியென்டால்...'' என்று இழுத்தான்.

''அதுதான் சிங்களாக்கள்.''

''அரவாசிக்கிமேல.'' அலட்சியமாகப் பதில் சொன்னான்.

''சம்பளங்கள் எப்படி?''

இவர் எதற்கு சுற்றி வளைக்கிறார் என்பது ஜினதாஸவுக்கு புரிந்துவிட்டது. இடையில் உணர்ச்சிவசப்படாமல் அவரது உள்ளக் கிடக்கையை அள்ளியெடுக்க வேண்டுமென்ற உபாயத்தில்... கேள்விக்கேற்ப நிதானமாகப் பதில் சொல்லிக் கொண்டிருந்தான்.

''சம்பளம் தாராங்கதான்... ஆனா மிச்சம் கொறவு அதச்சொட்டீம் எல்லாரும் சேந்து முயற்சி பண்ணிக் கொண்டிக்கியோம்.''

''அப்பிடியா... அதில முன்னுக்குப் போறது அவளவு சரில்ல... எதுக்கும் கவனமா நடந்துகொளோனும்.'' அவர் புத்திமதி வேறு புகன்றார்.

''அதெனா அப்பிடிச் செல்லிய...''?

''நாங்க அன்னியஜாதி... அவங்களுக்கெட்டப் பெய்த்து வேல செய்தென்டா நம்பிக்கயா ஈக்கோணும்... ஒத்தராவது மாத்தமா நடந்தா... எல்லார்டமேலேம். கண் வெச்சிருவாங்க... எனத்துக்கும்நாங்க பின்னுக்கா கி நிக்கியது நல்லந்தானே.''

''இந்தக் காலத்தில அப்பிடியொண்டும் செய்யேல... நெனச்சமாதிரி நடத்தின காலம் பெய்த்து... இப்ப புதிய புதிய சட்டமெல்லம் வந்தீக்கி... அதெல்லம் நாங்களும் கணக்கா தேடிவெச்சீக்கி...''

''நான் செல்லியது நலவுக்கு. நீங்களும் இதியள்ல, முன்னுக்கு நிக்கியாமெண்டுதான் கேள்விப்பட்ட ''

''மெய்தான்... நாங்கெல்லாம் ஒத்துமயாத்தான் வேலசெய்த... அதச்சொட் டீம் பயப்புட ஒண்டுமில்ல.''

''... மொதலாளியென்டா... எங்களுக்கு மிச்சம் தேவயான மனிசன். வேற ஜாதியா ஈந்தாலும் எங்கட வேலவெட்டியளுக்கு மிச்சம் ஒதவி செஞ்சீக்கி... ம்... அப்பிடியொரு மனிசன்ட மனச நாங்க வெந்து கொளோணும்.''

ஏதோவொன்றுக்காக வந்துகொண்டு சும்மா முன் பின் முரண்பாடாகவும் விஷயத்தெளிவில்லாமலும் கதை யளப்பது ஜினதாஸவுக்கு அலுப்பைக் கொடுத்தது. மூன்றாம் நபராகச் சின்னமாமா நிற்பது இன்னொரு சிக்கல்!

''தாத்த எங்களுக்கும் சேத்தி சோறாக்கிய போல...'' என்றவாறே சின்ன மாமா எழுந்து உள்ளே சென்றார். இருவரதும் சங்கடம் விளங்கியோ என்னவோ!

கதிரையிலிருந்து எழுந்து நெருங்கிவந்த மாடின் ஏதோ ரகசியம் கதைக்கத் தயாரானார்.

''நேத்து ஒங்கட பொஸ் என்ன ஃபெக்டரிக்கி கூப்பிட்டனுப்பீந்த.'' என்று தொடங்கியபோதே, ''எங்கியோ கண்ட மொகம் அங்குதான் என்பது ஊர்ஜிதமாகிவிட்டது.

''ஒங்களப்பத்தி மிச்சநேரம் கதச்ச... விஷயம் இது தான் ரகசியமா வெச்சிக்கொளோணும். சம்பளமல்லாம ஒங்களுக்கு மாஸம் மாஸம் ஒரு கணக்குத்தாராம்... அது எவளவென்டு நாங்க பேசி முடிச்சிக்கொளேலும்... இந்தக் காலத்தில தாரன் அப்பிடித்தரப்போற... பேசாம எடுத்துக்கொண்டு ஒதுங்கு நிக்கியதானே...'' பெரிய தொரு அதிர்ஷ்டத்தை கையோடு கொண்டுவந்து சேர்த்து விட்ட பூரிப்பு அவருக்கு!

''நீங்க செல்லியது சரிதான்... ஆனா எனக்கு இதுக்கு புரியப்படேல... என்ன நம்பி நிக்கியவங்கள நான் எப்பிடியன் ஏமாத்திய.''

ஜினதாஸ இப்படிச் சொல்வாரென்று மாடின் எதிர் பார்க்கவில்லைபோலும்! அவரது முகம் ஒரே நொடியில் கவிழ்ந்து போய்விட்டது.

''கதச்சி முடிஞ்சிபோல... போமா'' உள்ளேயிருந்து வந்தார் சின்னமாமா.

''சரி போம்... இன்னம் கொஞ்சம் யோசின பண்ணிச் செல்லுங்கொ ஜினதாஸ''. என்று முதுகில் தட்டிவிட்டு இருவரும் இறங்கி நடந்தனர்.

நியாஸ் வீட்டுக்கு கடிதங்களை எடுத்துச் செல்வதற் காக ஜினதாஸ சைக்கிள் திறப்பை தேடினான்.

# 15

**வா**னில் பவனிவந்த வட்டநிலா வெள்ளொலி முலாமை வையமெல்லாம் அள்ளிப் பூசியது. அந்த எழில்

மயக்கத்தில் எங்கும் அமைதியின் அரவணைப்பு. போதாக் குறைக்கு இளம் காற்றின் மெல்லிய தழுவல். தென்னோலைகளும் மரத்தளிர்களும் இடைக்கிடை அமைதி இசை மீட்டி தங்களது மகிழ்ச்சியை வாரிவழங்க மறக்க வில்லை.

இடியப்பமும் விரால் மீன் குழம்பும் உண்டு வயிர் நிரம்பிய நியாஸின் வாப்பாவுக்கு அந்த நிலவுக் கல்யாணத்தில் கொஞ்சநேரம் கலந்து லயிக்க அவரது மனம் உந்தித் தள்ளியது.

''நல்ல நெலவாயீக்கு... அந்தப் பாயக் கொணந்து போடுங்கொ''

''ம்... ஒங்களுக்கு இன்டக்கி ஒரே சந்தோஷம் போலீக்கி''. பாயைத் திண்ணையில் விரித்தபடியே அவரது மனையாள் கேட்டாள்.

''மகன் இன்னம் வரல்லதானே... வரங்காட்டீம் இப்பிடி ஈப்போம்''. போதாக்குறைக்கு மனைவியையும் அல்லவா பக்கத்தில் வந்தமரச் சொன்னார்.

விடுவாளா அவள்? வயது தட்டிப் போயிருந்தாலும் கணவனும் மனைவியும் அல்லவா? இளம் புதுமணத் தம்பதிபோன்ற இருவரும் அருகருகே அமர்ந்து கொண்டனர்.

காதுக்கிடையில் சொருகியிருந்த பீடித் துண்டை எடுத்து, இரண்டொரு 'தம்' இழுத்தூதினார். இவ்வளவு ஆர்வமாக திடீரென்று இந்த ஒழுங்கை மேற்கொண்டவர் என்ன சொல்லப் போகின்றாரோ என்று எதிர் பார்த்திருந்தாள் ரஹ்மாத்தா.

''ஹ்ம்... முப்பது வருஷத்துக்கு முந்தி நாங்க எப்பிடி ஈந்தீப்போம்'' சிறிது நேர மௌனச் சிந்தைத்குப்பின் ரஹ்மாவைப் பார்த்துக் கேட்டார் அவர்.

அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது. முப்பது வருடத்துக்கு முன்பென்றால் புதுமணத் தம்பதியாக இன்பலாகிரியில் திளைத்தவர்களாகத்தானே இருந்திருக்க வேண்டும்?

''எனத்தியன் பேசாம நிக்கிய?'' மீண்டும் அவரேதான் கேட்டார்.

''முப்பது வருஷத்துக்கு முந்தியென்டா நாங்க இப்பிடி எட வெளியுட்டு ஈக்கியல்ல'' அவள் கச்சிதமாகச் சொன்னாள்.

அவரால் சிரிப்பை அடக்கமுடியவில்லை. அவரோடு அவளும் கூடவே சிரித்தாள்.

''இப்பேம் அதுக்கு ஒத்தரும் தடில்ல'' அவரும் விட்டுக்கொடுக்கவில்லை. அவர் இன்னும் உள்ளத்தால் இளமை வாய்ந்தவர்தான் என்பதை வெளிக்காட்டினார்.

''தடில்லதான்... கலியாணம் புடிக்கிய வயஸு எளந்தாரிய வெச்சிக்கொண்டு நாங்களும் கலியாணக் கூத்துப் போட்டா நல்லயீக்கும்''. அவளும் இதுதான் சந்தர்ப்பமென்று பார்த்து மகனின் கல்யாணப் பேச்சை அங்கே முன்வைத்தாள்.

நியாஸ் அவர்களின் ஒரேமகன். கல்யாணம் கட்டி ஐந்து வருடங்களின் பின்புதான் அவன் பிறந்தான். அதற்குப் பின்பு பிள்ளைப் பாக்கியமே இல்லை. அதனால் அவர்களின் சந்தோஷமெல்லாம் அவன்மேல்தான். ஆசைக்கும் ஆஸ்திக்கும் என்று சொல்வார்களே... அந்த மண்வீடும் அதைச் சூழ்ந்து கொஞ்ச நிலமும்தான்!

''நான் வாணான்டா செல்லியன்... நல்லொரு எடத்தப்பாத்து, ஒரு விஷயத்த ஒழுங்காக்கியதானே''. அவர் அதற்குத் தடையல்ல என்பதை வேறெப்படி எடுத்துச் சொல்ல இயலும்.

''எனக்கட்டேம் எத்தினயோ எடத்தால வந்துவந்து கேக்கியாங்க... நானும் அதஇத செல்லி செல்லீக்கிய''.

''அந்த மம ரெளஃபட மகளிடசெய்தியா?''

''அது மட்டுமல்ல... அதூப்பொறகுதானே மீயல்லே ராலஹாமீட தங்கச்சப் பேசின... ஆரத்தூட்டு ஐசும்மட மகளுக்கும் பேசக்கருத்தீக்கி''.

''இப்பிடித்தான் ஒரு மாப்பிளீந்தா ஒம்பதெடத்தால பேசிவார... ஒரு பொண்ணீந்தா ஒம்பதெடத்துக்கு பேசிப் போற... கடசீல நஸீபுள்ள எடத்தில நடக்கிய'' நீட்டி இழுத்தார் அவர்.

''ஆனா ஒன்டேமே கேக்க மாதிரில்ல... அவன் மனசீல வேறொன்டயேன் வெச்சிக்கோ நிக்கிய''.

''தாரயன்... அவன்ட மதினிக்காரியயா?''

''ஓ அவள் நஸீமவத்தான்''.

''அப்ப இனி எனத்துக்கன் பாத்துக்கோ நிக்கிய... அத ஒழுங்காக்கியதானே... எனா தங்கச்சிமாரெண்டு பாக்கியா... இல்லாட்டி அவளுக்கு தாத்தமரெண்டு நிக்கியா?''

''அப்பிடி நீங்க செல்லியமாதிரி ஏலுமன்... ஏத்துக் கும் ஒரு மொற ஈக்கியெலியன்... அவங்க இன்ட வரக்கும் ஒரு வாய்ப்பேச்சிக்காலும் வரல்லயே...''

''குட்டீட புரியமெப்பிடியன்?''

''அவளா... அவள் உசிருமாதிரி''.

''அப்ப நாங்க பெய்த்துக் கேட்டுப் பாக்கோம்'' அவங்களுக்குப் புரியக்கொறவென்டா வேறொன்டச் செய்ததானே... ஊட்டுக்குள்ள வெச்சிக் கொண்டீக் கேலுமா? ஆம்பிளக் கொமரென்டாலும் கொமரு

தானே... வார மாஸ்தக்கி நோம்பு... அது முடிஞ்சி நோப் பெருநாள் மாஸ்தேல செஞ்சிபோடேலும்.

''எப்பிடியென்டாலும் மாப்பிருட்டுக் காரருக்கு அது பஸந்தில்லேன். நாளக்கி ஊரு மனிசர் கதகாரணம் செல்லுவாங்க... அன்ன அதச்சொட்டீந்தான் நானும் பாத்துப் பாத்து நிக்கிய...''

''இதில கதகாரணம் செல்லியத்துக்கு எனத்தியனீக் கிய? ஊரு பொறுத்திய... ஒன்டுக்குள்ளொன்டுதானே... பொடியனுக்கிட்டேம் செல்லி ஒழுங்காக்கப் பாக் கோம்...''

''என்ட யோசினேட மாதிரிக்கி நானப்புள்ளயாரு வேற தாரயாலும் கருத்தில வெச்சிக்கொண்டீக்கியோ தெரீய.''

''எனத்தீந்தாலும் நாங்க பெய்த்துக் கேட்டா வெட்டக்கிவாரதானே.''

அவர்களது உரையாடல் முடிந்ததோ இல்லையோ... கண்டிப்பாக முடித்தாகவேண்டிய நிலையை ஏற்படுத்து மாப்போல், அங்கே நியாஸ் வந்துகொண்டிருந்தான்.

''தாரன் நியாஸா வார'' அவனது உம்மாதான் கேட்டாள்.

''ஓ... உம்ம இன்னேம் படுக்கல்லயா... நான் நெணச்ச படுத்தீக்கு மென்டு!''

''இல்லின்னம். நல்ல நெலவெலியன் ஒங்க வாப்பக்கு கொஞ்சம் ஈந்துக்கோ நிக்க நெனச்சீக்கி.''

''அப்பிடியா''

''இவளவு நேரம் எங்கியன் சொணங்கின?''

''அங்க கடயடீலதான்... ஜினதாஸ வந்து கதச் சிக்கோ நின்டத்தில சொணங்கீட்டு.'' என்றவாறு வந்து படிக்கட்டில் அமர்ந்துகொண்டான்.

''அது தாரன்?'' அவனது வாப்பாவின் கேள்வி.

''ஃபெக்டரீல என்னோட வேலசெய்தாள்... அதுசரி வாப்பவ எங்கட பெரிய மொதலாளி வரச்செல்லீந்தா மென்டு உம்ம சென்ன மெய்யா?''

''ஓ மிச்சநேரம் கதச்சிக்கோநின்ட... மகனுக்கிட்டேம் செல செய்தியள் செல்லச் சென்ன.''

''ஆ அப்பிடியா... முந்தீம் ஒங்கள இப்பிடி கூப்பிட் டனுப்பி கதச்சிக்கோ நிக்கியா?''

''இன்டக்கி நேத்தல்ல முந்தீலீந்தே என்னோட மிச்சம் முஹப்பத்.''

''இனி எனத்தியன் சென்ன?''

''இல்ல அவரு மேலுக்கு சொகம் போதான்டு கொழும் பிலீந்து வந்தீக்கி.''

'அப்ப லேபர் ஒஃபீஸால விசாரணைக்கிவாரது தெரிய போல' அவன் மனதுக்குள்ளால் சொல்லிக் கொண்டான்.

''கொஞ்சம் நாளக்கி நிப்பாருபோல தெரீது... வழமயா நோம்புக்கு ஊருக்கு வார மனிசன்தான்... நல்ல குடுமானம் குடுக்கிய... இந்தப் பைணம் கூடக் குடுக்கிய யோசினீக்கி... போனவருஷமே இருவதுருவாம் ரெண்டு கொத்தரிசீம் குடுத்ததானே... அல்லா அந்த மனிசனுக்கு குடுத்தீக்கிய பரக்கத்து.''

''ஓ நூத்துக் கணக்கான வங்கட வேருவ. அவங்களப் பசீல போட்டிட்டு... இந்த ஏமாத்து வேல''. அவனது வாய் துடிதுடித்தது.

''ஆனா அவருக்குக் கொஞ்சம் மனவருத்தம் போலீக்கி... இவளவு செய்தென்டு ஊருமனிசரு நன்டி வெக்கியல்லேன்.''

''நன்டி வெக்கியல்லயென்டா?'' நியாஸ் மேலதிக விளக்கம் வேண்டி நின்றான்...

''அதுதானே ஊருப் புள்ளயளுக்குதொழில் தொறவு காட்டோணுமென்டு இங்க ஒரு ஃபெக்டரிங் போட்டீக்கி இப்ப நூறு பேருமட்டு வேல செய்தாம், அவங் கெல்லாம் சேந்துக்கொண்டு கரச்சல் குடுக்கியாம்... மெய்பா மகன்'' உண்மையில் இந்த விஷயங்கள் எதை யுமே விளங்கிக்கொள்ள முடியாத குழந்தைதான் அவர்.

''அப்பிடியொன்டுமில்ல'' வாப்பாவுக்கேற்றவாறு பதில் சொன்னான்; இன்னும் எதிர்பார்த்தபடி!

''ஃபெக்டரி கரச்சலியளேம் ஒழுங்காகிட்டுப் போற எண்ணமீக்கி... எங்கட மகன் ஒங்களுக்கு வேண்டிய ஒதவிய செய்தொண்டுமென்ட நான்.''

மகனின் கதை தெரிந்துதான் வாப்பாவுக்கு வலைவீசி யிருக்கின்றமை, அப்பாவி அவருக்கு எங்கே விளங்கப் போகின்றது.

''நியாஸ் நீ அவங்கயோட நம்பிக்கயா நடந்து கொண்டா ஒன்ன ஃபெக்டரீக்கே பெரியவனாக்கினாலும் ஆக்கும்... ஓ... தமாஸக்கல்ல அவரட பேச்சீலீந்து எனக்கு வெளங்கின'' சின்னக் குழந்தையொன்று கண்ட காட்சியை அப்படியே ஒப்புவிப்பதுபோல் சொல்லித் தீர்த்தார் அவர்!

''அப்ப எவளவு நல்லம்'' போதாக்குறைக்கு உம்மா வின் குதூகலம் வேறு!

''எதுக்கும் சும்ம நிக்கிய நேத்தக்கி ஊட்டுக்குப் பெய்த்து ஹாஜியாரக் கொஞ்சம் பாத்திட்டு வாரது நல்லம்'' வாப்பாவின் ஆலோசனை இது!

''சரி பொகேலேன்'' என்றவாறு உள்ளே எழுந்து சென்றான் நியாஸ்.

நிலவுக்கு விடை கொடுத்துவிட்டு இருவரும் பாயைச் சுருட்டினர்.

## 16

ஃபெக்டரிக்குத் திரும்பும் வளைவு மதிலில் எழுதப் பட்டிருந்த சில வசனங்கள் தொழிலாளர்களையெல்லாம் அங்கேயே கூடிநிற்கச் செய்தது. அந்த வசனங்களில் ஒன்று யாருக்காக எழுதப்பட்டிருந்ததோ, அந்நபர் வரும் வரையில்... அதை அவருக்கு உணர்த்திவிட்டு உள்ளே செல்லவேண்டுமென்பதே பலரதும் எண்ணம்.

பலவித முறைப்பாடுகளையிட்டு விசாரிக்க வருவதாக தொழிற்கந்தோரிலிருந்து கடிதம் வந்திததிலிருந்து அங்கு வேலை பார்க்கும் எல்லோருக்குமே ஒரே மகிழ்ச்சி. சிலருக்கு மாத்திரம் வேதனைதான்... என்ன செய்வது,

எல்லோரும் திரும்பத் திரும்ப அந்த வசனங்களை உருப்போட்டவண்ணமே இருந்தனர். புதிதாக ஒவ்வொரு வர் வரவர அதுபற்றிய கருத்துக்களும் அபிப்பிராயங் களும் இன்னுமின்னும் விரிவடைந்தன.

'தொழிலாளர்களைப் பிரிக்காதீர்'

'மெனேஜர் வேலை எமக்கு வேண்டாம்'

'நூறு ரூபாய்க்கு தலைபணிய மாட்டோம்'

'காட்டிக் கொடுப்போரே கவனம்'

அப்போதுதான் அங்குவந்த தயாவதிக்கு, ஒவ்வொரு வசனமாக வாசித்து... தெளிவுரை... விளக்கவுரை வழங்கிக்கொண்டிருந்தாள் நஸீமா. ஒவ்வொரு வசனமும் ஒவ்வொரு வரலாற்றை உள்ளடக்கியிருந்தது.

நாளை நடைபெறவிருக்கும் விசாரணையை முறியடிக்க மேற்கொள்ளப்பட்ட அத்தனை நடவடிக்கைகளையும் நாங்கள் முறியடித்துவிட்டோம் என்ற பாணியில் அமைந்திருந்தன அந்த வசனங்கள்.

அங்கே... ஃபாத்திமா வந்துகொண்டிருந்தாள். என்றுமில்லாதபடி இன்று முன்பக்கமாக எல்லோரும் கூடியிருந்தது அவளுக்கு அதிசயமாக இருக்காவிட்டாலும் எல்லோரும் அவளையே எதிர்பார்த்திருந்த பார்வை நிச்சயம் யோசனையைத் தட்டிவிட்டிருக்கும்.

''காட்டிக் கொடுப்போரே கவனம்.'' தொண்டையைச் செருமியபடி யாரோ வாசித்தாள்.

''கவனமா பேசுங்கொ... எல்லம் டேப்ல புழும்.'' இது இன்னொரு கிறுக்கி.

பாவம்; எதுவுமே பேசாமல் அவள் உள்ளே போய் விட்டாள்.

அதைத் தொடர்ந்து ஜினதாஸவின் வரவும் எல்லோருக்குமே குதூகலத்தை ஏற்படுத்திவிட்டது.

''நானொரு சீட்டுப் புடிக்கப் போறன்... மாஸம் அம்பதுருவத்தாரா... இப்ப ஒங்களுக்கு ஸ்ப்பெஷல் சம்பளம் கெடக்கியதானே.''

ரஃபீக்கா எதைச் சொல்கிறாளென்று ஜினதாஸவுக்கு மட்டுமல்ல எல்லோருக்குமே விளங்கிவிட்டது.

''கெடக்கியென்டா எனக்கு மட்டுமில்ல... எல்லாருக்கும்தான் கெடக்கும்.'' ஒற்றுமைக்கு ஒருபடி அழுத்தம் கொடுத்தான் அவன்.

''எனத்தியன் நியாஸ் தொர... மிச்சம் கஷ்டம் போலீக்கி... டீயொன்டு கொணுவரவா.'' இதுவும் ரஃபீக்காவேதான்.

''அதெனத்த திடீரெண்டு இப்பிடி கவனிக்கப்போற... எவளவு கவனிச்சாலும் இனிவேலில்ல''. அவன் நஸீமா வின் பக்கம் பார்த்துக்கொண்டு வித்தியாசமான தொனி யில் சொன்னான்...

இது ரஃபீக்கா எதிர்பார்க்காத ஒரு கோணம்.

''அதுக்கல்ல... ஒங்களுக்கு மெனேஜர் வேல கெடக்கப் போகுது... கொஞ்சம் வால் புடிச்சிக்கொண்டாத்தானே நல்லம்.''

'மெனேஜர்' கதையும் இவ்வளவு வேகமாகப் பரவி யுள்ளதை அவன் தெரிந்துகொண்டான். ஒவ்வொரு நாளும், புதுப்புதுச் செய்திகளை எதிர்பார்க்கும் மனநிலையோடல்லவா எல்லோருமே கூடுகிறார்கள்.

எல்லோரையும் இடைவெட்டிக்கொண்டு சின்ன பொஸ்ஸைச் சுமந்துவந்த கார் ஃபெக்டரி வளவுக்குள் நுழைந்தது. எல்லோரும் ஏன் அங்கு கூடிநின்றார் களென்பது 'டேப்' வேலை செய்தபின்புதான் அவருக்குப் புரியும்போலும்!

''சரி சரி இன்னம் அஞ்சி நிமிஷம் தானீக்கி...எல் லாரும் வாங்குள்ளுக்கு.'' என்றவாறு, இரட்டையர்கள் உள்ளே சென்றடைந்ததைத் தொடர்ந்து மற்றவர்களும் அவ்வழி தொடர்ந்தனர்.

அன்று சம்பள நாளாதலால் நியாஸுக்கு ஏராளமான கணக்கு வேலைகள். நாளை எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்ற விளக்கத்தை நஸீமாவிடமும் தயாவதி யிடமும் ஏற்கெனவே சொல்லிவைத்திருப்பதால் அவனுக் குச் சற்றே ஆறுதல்.

இம்முறை பலவர்ண நூல்கள் புளௌஸ் பிடவை களும் ஏராளமாக கொண்டுவந்து குவித்தார்கள். நோன்புப் பெருநாள் எதிர்நோக்குகிறதல்லவா? சென்ற

தடவை இரவில்கூட தங்கிநின்று வேலைசெய்ததை எவருமே மறந்திருக்கமாட்டார்கள்.

''நாளாக்கி தாருக்கட்டயோ தெரிய விசாரிக்கிய.'' அடுத்த தறியில் வேலை செய்துகொண்டிருந்த அமரா, தயாவதியிடம் கேட்டாள்.

''தாருசரி. நாலஞ்சி பேருக்கட்ட விசாரிப்பாங்க.''

''எனத்த கேக்கியொண்டுமோ தெரிய.''

''எனத்த கேட்டாலும் மெய்யச் சொன்னாச் சரி... பொய் செல்லியென்டாத்தானே யோசிக்கோணும்.''

''எங்கட நியாஸூம் ஜினதாஸாம் இல்லாட்டி இந்த மட்டுக்கு வாரா... எனத்தியென்டாலும் நாங்க பொம்புளயளேன்...''

''ஆ நஸீமவேம் மறக்கேல... அவள்தானே எல்லோரேம் உசாராக்கிய'' தயாவதி நஸீமாவின் துவத்தைப் பிரஸ்தாபித்தாள்.

அன்று சம்பள நாளும்கூட! அவ்வாறான நாட்களில் கொஞ்சம் நேரகாலத்தோடேயே வேலைகளை நிறுத்தி விடுவதுண்டு. அடுத்த நாள் புத்தகங்களை முடித்து வைக்கவேண்டிய நிர்ப்பந்தம் இருந்ததாலோ என்னவோ அன்று நான்கு மணிக்கே 'பெல்' ஒலித்தது.

ஒஃபீஸூக்குள் சின்ன பொஸ்ஸின் முன்னிலையில் சம்பளக் கவர்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவற்றைச் சும்மா கொடுக்கும் பாங்கிலே ஒவ்வொரு வருக்கும் எடுத்து நீட்ட அவர் தயாராக இருந்தார். மேசையின் மறுகரையில் நியாஸூம் ஜினதாஸவும் எழுத்துப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். அண்மைக் காலமாக சம்பளநாள் கதாநாயகியாக அங்கே ஃபாத்தி மாவும் காட்சியளிக்கிறாள்... அடுத்தவர்களைவிட அவள் த சம்பளம் பெறுபவள் அல்லவா?

''இதுதான் ஏன்ட கடசிச் சம்பளம்.'' என்றவாறு வெளியே வந்தாள் ஸரீனா. அவள் அப்படிச் சொல்வதற்குக் காரணம் இல்லாமலில்லை.

''ஓ இன்னம் ஒரு கெழமேல நீ வராமீந்திருவாய்.'' இன்னொருத்தி சொன்னாள்.

ஸரீனாவுக்கு இன்னும் ஒரு வாரத்தில் கல்யாணம். அதன் பிற்பாடு ஃபெக்டரிக்கு வரும் எண்ணம் அவளுக்கில்லை. நாளை விசாரணை இருக்கின்ற காரணத்தால்தான் தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறாள். வீட்டில் நிகழும் தயாரிப்பு வேலைகளைவிட தோழமை உணர்வு உயர்ந்ததல்லவா?

''டைமுக்கு வரநிக்காம... எல்லாரும் நேரத்தோட வந்து வேலவெட்டி செய்யோணும்.'' வாய்த்த வேளையில் விசேட அழைப்பொன்றை விடுத்தாள்.

''ஓ கழத்தில சவடிகெட்டங்காட்டீந்தான் ஒனக்கு எங்கள நெனவீக்கிய... அதூப்பொறகு எங்கள மட்டுமல்ல ஆகிரம் துணியாவேம் மறந்து பெய்த்திருவாய்.'' இந்தப் பாணியில் ரஃபீக்காவைத் தவிர வேறு யாரால்தான் பேசமுடியும்!

''ம் நீ மட்டும் அந்தப் பொக்கத்துக்கும் வந்திராதே.'' ஸரீனா சிரித்துக்கொண்டே சொன்னாள்.

''நஸீமா நல்லா எண்ணிப்பாரு... ஒனக்கு 'பகா'வும் சேத்திகூட வெச்சீப்பாரு... நாளே விஷயத்த 'கொடஉட' யாக்க'' ஸரீனாவை விட்டுவிட்டு சம்பளத்தோடுவந்த நஸீமாவைப் பிடித்துக்கொண்டாள் ரஃபீக்கா.

''நஸீமா எல்லம் சரிதானே... செல்லவேண்டியத்தியள எல்லாருக்கும் செல்லீக்கிதானே.'' தயாவதி குறுக்கிட்டாள்.

''எல்லாருக்கும் செல்லீக்கி... மத்தக்கத நாளக்கித் தான்... நாங்க உறக்கத்தானே செல்லப்போற... சரி இன்டைக்காவது கொஞ்சம் நேரத்தோட ஊட்டுக்குப் போம்.'' நஸீமா தயாவதியையும் இழுத்துக்கொண்டு சென்றாள்.

''சரி வெளணேம குளிச்சிட்ட வா...''

ரஃபீக்கா சொன்னதன் அர்த்தம்... அவள் திரும்பி ஏதோ சொன்னதைக்கூட விளங்கிக்கொள்ள இயலாதபடி வெடிச் சிரிப்பாகக் கிளர்ந்தது.

# 17

ஃபெக்டரியில் மிகச் சுறுசுறுப்பாக வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. வேலைகளைச் செய்து கொண்டே இடைக்கிடை கதைத்துக்கொள்வது தவிர்க்க முடியாததுதானே! அப்படிக் கதைத்துக்கொண்டு செய்யத்தக்க வேலைகள்தான் அவை. ஆனால் அன்று அமைதியே அங்கு உறைந்துபோயிருந்தது. அப்படி மனதை ஓர்மைப்படுத்தி எல்லோரும் நடந்து கொண்டதற்கு நியாயம் உண்டுதான். அது மாத்திரமல்ல; இன்னும் பல கட்டுப்பாடுகளையும் அவர்களுக்குள் ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

தறிகளிலும் தையல் மெஷின்களிலும் சில்லறை வேலைகளிலும் ஈடுபட்டிருந்தபோதிலும் தொழிற் கந்தோரிலிருந்து எப்போதுதான் வருவார்களோ என்ற எதிர்பார்ப்பே அத்தனைபேரது நெஞ்சங்களிலும் நிரம்பியிருந்தது.

காலை ஒன்பது மணிக்குப்போல் கேற்றுக்குள் காரொன்று வந்து புகுந்தது. கார்ச் சத்தத்தைக் கேட்டு, தொழிற் கந்தோரிலிருந்துதான் வந்திருக்கிறார்களென்று

பலரும் எண்ணிக்கொண்டனர். ஆனால் யாருமே வந்து எட்டிக்கூடப் பார்க்கவில்லை.

காரில் வந்தது வேறுயாருமல்ல, பெரிய பொஸ். கொஞ்ச நாட்களாக 'சுகமில்லாமல்' வந்து நின்றவர் அல்லவா? அன்று நடைபெறவிருந்த சிகிச்சைக்காகத் தான் அங்கு வந்து சேர்ந்தாரோ?

அவர் தனியே வரவில்லை. கூடவே இரண்டு 'மெய்க்காப்பாளர்கள்' வந்திருந்தார்கள். வேறுயார்தான் குத்தூஸ் நானாவும் அவரது சகபாடியும்தான்! எதையும் வாயினால் சாதிப்பதில் வல்லவர்கள் அவர்கள்.

முன்னே தள்ளிநிற்கும் வயிற்றைத் தடவியபடி ஒஃபீஸுக்குள் போடப்பட்டிருந்த கதிரையில் அமர்ந்து கொண்டார். அவரது 'நடப்பு'களைப் பார்த்தால், லேபர் ஒஃபீஸாக்களைத் தனக்குத் தெரியுமென்று கதை விட்டு இப்பொழுதே முதலாளியிடம் 'நாலைந்து' கறந் திருப்பார் போலிருந்தது. என்ன இருந்தாலும் முன்பின் தெரியாதவர்களைகூட சிரித்துப்பேசி... தடவியெடுத்து... கொஞ்ச நேரத்துக்குள் பழக்கம் பிடித்துக்கொள்வது அவரது உழைப்புக் கலையின் இரகசியம்!

ஜினதாஸவும் நியாஸும் தங்களுக்குரிய வேலைகளில் லயித்திருந்தனர். ஃபாத்திமாவுக்கு அப்போதைக்கு எந்தப் பொறுப்பும் இருக்கவில்லை. என்றாலும் ஏதோ ஒழுங்குபடுத்திக்கொண்டிருந்தாள். சின்னபொஸ் தேவைப் படும் தஸ்தாவேஜுகளையெல்லாம் தேடியெடுத்து கருத் தூன்றிப் படித்துக்கொண்டிருந்தார்.

பெரிய முதலாளிக்கு நிர்வாகரீதியான நடவடிக் கைகள் எதுவுமே தெரியா விட்டாலும்கூட, ஆடைகோடைக்கு அந்தப் பக்கம்வந்து 'நான்தான் இதற் கெல்லாம் இரட்சகன்' என்று ஞாபக மூட்டிவிட்டுச் செல்வார்.

கொஞ்சநேரம் ரெஸ்ட் எடுத்த பெரிய முதலாளி, குத்தூஸ்நானா பரிவாரத்தோடு உள்நோக்கி ஒரு நடை!

நியாஸைக் கண்டதும் சிரித்தபடியே பொஸ்ஸுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார், குத்தூஸ்நானா. கூட்டுறவுச் சங்க நிர்வாக கமிட்டி தெரிவில், அவரைப் படுதோல்வி யடையச் செய்தபின்... தனது முகத்தைப் பார்ப்பார் என்றுகூட நியாஸ் எதிர்பார்க்கவில்லை. ஆனால் குத்தூஸ்நானா பிழைக்கத் தெரிந்த பேர்வழியாயிற்ற.

வேலைச் சாலைப் பக்கமாக மூவரும் மெதுமெதுவாக நடந்து சென்றனர்... குத்தூஸ்நானாவைக் கண்டதும் அத்தனை பேருக்குமே ஒரு சிரிப்பு. ரஃபீக்கா எப்படித் தான் பொறுமையாக இருந்தாளோ...!

பின்பக்கத் தோட்டத்துக்குள்ளால் இறங்கி. கிணற்றுப் பக்கமாக நகர்ந்து... மீண்டும் முன்பக்கமாக வந்து சேர்கையில் பத்துமணியாகிவிட்டது.

''இன்னேம் ஆள்களக் காணல்ல.'' ஏதோ எத்தனையோ வேலைகள் உள்ளவர்போல் குத்தூஸ்நானா கேட்டார்.

''இப்பிடித்தான் இந்த உத்தியோககாரனியள்.'' முதலாளி முணுமுணுத்தார்.

''ஆ... அதுதான் வார... இங்கதான் வாரபோல.'' வரவேற்கத் தயாரானார் குத்தூஸ் நானா.

இருவரும் போட்டைப் பார்த்துவிட்டு உள்ளே வந்தனர்.

''வாங்கொ தொர...'' தலையை வளைத்து மரியாதை செய்து வரவேற்றார் குத்தூஸ் நானா.

கதிரைகளைப் இழுந்துப் போட்டு... ஒஃபீஸுக்குள் ராஜ உபசாரம். சோடா போத்தல்கள் சிகரட் பெட்டி

கள் பரிமாறப்பட்டன. குத்தூஸ்நானா வளைந்து வளைந்து இடைக்கிடை அவர்களோடு எதையெதையோ சொல்லிச் சொல்லிச் சிரித்தார்.

''அப்ப எங்கட விசாரணையைத் தொடங்கோம்.'' வந்த அதிகாரிகளின் பணிப்பு.

சின்ன பொஸ் தலையாட்டினார்.

''நீங்கதானா இங்க மெனேஜர்?''

''ஓ...''

''அப்ப பேரேடு... சம்பளப் பதிவு...'' இப்படியாக ஒரு பட்டியலைச் சொல்லி... சம்பந்தப்பட்ட ஃபைல்களை வேண்டினார்.

எதையெல்லாம் கேட்பார்களென்று தெரிந்துதான் போலும் ஏற்கனவே அவற்றைத் தொகுத்து வைத்திருந்தார்.

''அவரா ஓனர்.'' பெரிய பொஸ்ஸைப் பார்த்துக் கேட்டார்.

''ஓ...''

''அப்ப ரெண்டுபேரும் நில்லுங்கொ.''

அடுத்த இருவரும் தானாகவே வெளியே வந்துவிட்டனர்.

''சங்கத் தலைவரேம் காரியதரிசியேம் கூப்பிடுங்கொ.''

பியோன் மூலமாக அவர்கள் இருவரும் அழைக்கப்பட்டார்கள். இப்பொழுது ஓஃபிஸுக்குள் எல்லாமாக

அறுவர். அதிகாரிகள் ஃபைல்கள்... பதிவேடுகளைப் புரட்டிப் பல விடயங்களைக் பதிந்துகொண்டிருந்தார்கள்.

''இப்ப ஒங்கட குற்றச்சாட்டுகளைப் பத்தி நாங்க சிலரிட்ட விசாரித்துத்தான் பாக்கோணும்.'' நாலு பேரையும் மாறிமாறிப் பார்த்துச் சொல்லிவிட்டு...

பெயர் பதிவேட்டைப் புரட்டி இடையிடையே இருந்து கருணா... உஸைமா... அமரா... அஸீஸா இப்படிச் சிலரை அழைக்கச் சொன்னார்.

சொற்ப நேரத்தில் கருணா வந்தாள். அவளுக்குப் போடப்பட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்துகொண்டாள்.

''நீங்க இங்க சேந்து எவளவு காலம்?'' அதிகாரி கேட்டார்.

''ஒரு வருஷமும் எட்டு மாதம்.'' அவள் சொன்னாள்.

''நீங்க வரும்போது இங்க எத்தின பேரு வேல செஞ்சாங்க...''

''ஒரு இருவத்தஞ்சி பேர்மட்டும் ஈந்தாங்க.''

''அந்த நாளேல ஃபெக்டரி எத்தின மணிக்கு தொடங்கி முடீதன்?''

''எட்டு மணிக்கு தொடங்கி... அஞ்சிமணி ஆறுமணி யாகிய... செலகாலத்துக்கு ராவேலேம் வேல செய்த.''

''ஒரு நாளக்கி இவளவுதான் செய்யோணுமெண்டு ஒரு ஒழுங்கு...''

''அப்பிடில்ல...தார வேலய செஞ்சி முடிக்கோணும்.''

கேள்வி—பதில் தொடர்ந்து கொண்டிருக்கையில் பெரிய பொஸ்ஸினதும் சின்ன பொஸ்ஸினதும் முகங்களில் எந்த உணர்ச்சி பிரதிபலித்ததோ, அதற்கெதிரான உணர்ச்சிகளே ஜினதாஸவினதும் நியாஸினதும் முகங்

களில் இழையோடின. அத்தனை வாக்குமூலங்களையும் உதவி அதிகாரி படபடவென்று பதிந்துகொண்டிருந்தார்.

''ஞாயீத்துக் கிழம லீவுதானே...?''

''வரச் சொன்னா வருவோம்.''

''புத்தகத்தில ஸைன் வெக்கியா?''

''ஸைன் வெக்க ஒருதாள் தருவாங்க.''

''போயா லீவுக்கு...''

''இந்த வருஷத்திலீந்துதான் லீவு தார''

''சரி நீங்க போய் உஸைமாவ வரச்செல்லுங்க...''

முக்காட்டோடு அவள் வந்து நின்றாள். தொடர்ந்து அடுத்த இருவரையும் விசாரித்து முடிக்க பகல் பன்னிரண்டு மணியாகிவிட்டது.

''தொழிலாளர் சங்க குற்றச்சாட்டுகளில பெரும்பாலும் உண்மையிருக்கு... சம்பள விஷயம் ரொம்ப வீக்... பிரவிடன் ஃபன்ட் விஷயமா ஒன்னுமில்லை... ம்... தொளிலாளிங்கட கொறபாடுகளை விசாரிக்கியது எங்கட கடம... அதத்தான் நாங்க செஞ்சோம்...''

அதிகாரிகளின் தொகுப்புரை இவ்வாறு அமைந்த போது சின்ன பொஸ்ஸின் முகம் சுருங்கிப் போய்விட்டது. ஜினதாஸவுக்குள்ளே ஒரு புதுத்தெம்பு சுடர்விட்டது.

அதிகாரிகள் விடை பெற்றபோதும் ஃபெக்டரியில் அமைதியே ஆட்சி செய்தது.

''மொதலாளி வாங்கொ வாங்கொ.''

இந்த எதையுமே கணக்கில் எடுத்துக்கொள்ளாதவர் போல பெரிய முதலாளியையும் ஏற்றிக்கொண்டு குத்தூஸ் நானா 'எங்கோ' புறப்பட்டார்.

# 18

ஒருநாள் மாளிகையாக அக்பரின் வீடு அலங்காரத்தை அள்ளிப் பொழிந்தது.

எங்கும் மின்விளக்குகளின் ஒளிப்பிரவாகம். முன்னே பலவர்ணச் சுடர்கள். முற்றத்தில் மூங்கில் மரங்கள் நாட்டப்பட்டு அவற்றிலே சின்னஞ்சிறு மின்விளக்குகள். கல்யாணவீட்டுக்கேயுரிய கலகலப்பு. இவற்றையெல்லாம் பார்த்து ரசித்து இன்பத் தடாகத்தில் நீந்தி விளையாடும் இளஞ்சிட்டுகள்.

பின்பக்கமாக பிரமாதமான சாப்பாட்டு ஏற்பாடுகள். மரவை வைப்பதற்கு இலகுவான முறையில் பின்பக்க அமைப்பு. அதிலே உணவுப் பகிர்வுகள் வரிசையாக வைக்கப்பட்டிருந்த அழகே தனி.

''ஏழு மணியாக்கீட்டு. இன்னம் அர மணித்தியாலத்திலே சனம் வாரொன்டும்... எல்லம் ரெடியாக்கி வைங்கொ... தண்ணிக் கோப்பயள் சரியா...'' உணவுப் பகுதிக்குப் பொறுப்பாளர் ஒருவரின் அவசரம் இது!

''எங்கட ஐட்டமெல்லாம் சரி... இன்னம் புடின் போட்டு முடியல்ல...'' மரவை தயாரிப்பாளர் ஒருவரின் குரல்.

''ஆ இன்ன தண்ணிக் கோப்ப... தண்ணிக் கோப்ப.''

''எச்சிப் பிங்கான் கழுவ ஆள் சரியா?''

''ஓ.. அதெல்லாம் சரி... திண்டு முடியச்செல்ல முடியச்செல்ல பிங்கான்... கோப்பயள பாஸ் பண்ணுங்கொ.''

தடபுடலான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்த அங்கு அக்பரின் இறுக்கமான நண்பர்களான நியாஸ்... காதர்... ஜினதாஸ முதலியோரும் 'கால்போட்டு'

வேலை செய்து கொண்டிருந்தார்கள். அக்பருக்காக மட்டுமல்ல, மணப்பெண் ஸரீனாவுக்காகவும்தான். அங்கே மாப்பிள்ளையாக வந்து சேரப்போவது லாஃபிர் தானே. எல்லாவற்றையும்விட நியாஸ் கோஷடியி னரின் உத்தியோக பூர்வமற்ற வாசஸ்தலமல்லவா அது.

உள்ளே மணப்பெண் அலங்காரப் படலம்...! மான் குட்டிபோல் துள்ளியாடிக் கலகலக்கும் அவள், எதுவுமே பேசாமல் மௌனத்தில் ஆழ்ந்து போயிருந்த தோற்றம் பார்க்கவே பரிதாபம். ஒரு புதிய காவியத் தலைவாசல் அல்லவா? அங்கே காலடி வைக்கும் எவருக்கும் ஏற்படும் இயல்பான மகிழ்ச்சிப் பயம் அது!

ஏலவே வந்து சேர்ந்த நஸீமாவும் ரஃபீக்காவும் இவ்வளவு நேரமாக வெவ்வேறு கருமங்களில் ஈடுபட் டிருந்துவிட்டு ‘பொண் உடுப்பாட்டும்’ நேரமாகப் பார்த்து அங்கு வந்து சேர்ந்தார்கள். ஸரீனாவின் நிலை யைப் பார்த்தபோது, ரஃபீக்காவுக்கு தனது வழமையான குறும்புகளை முடிச்சவிழ்க்க முடியவில்லை.

விருந்தினர்கள் வந்து சேரச்சேர சாப்பாடு பரிமாறல் துரிதமடைந்தது. இன்னும் சிறிது நேரத்தில் மாப்பிள்ளை ஊர்வலம் வந்து சேர்ந்துவிடும் என்பதை நேர நகர்வு உணர்த்தியது.

சோடனை மேடைக்கு மணப்பெண்ணை அழைத்து வந்து அமரச் செய்து விட்டார்கள். பார்வையாளர் களுக்காகப் போடப்பட்டிருந்த கதிரைகள் நிரம்பி வழிந்தன. இயற்கையின் அழகுக் கோலத்துக்கு அப்பால்... செயற்கையான அப்புதல் அங்கு அரங்கேறியிருந்தது.

திட்டப்படி ஃபரீனா வீட்டில் ஒன்றுகூடிய ஃபெக் டரித் தோழிகள் அனைவரும், மாப்பிள்ளை வரும் நேரத் துக்கு முன்கூட்டியே போய்ச்சேரும் இலக்கில்... அங்கிருந்து புறப்பட்டு திருமண வீட்டை அடைகையில், அங்கே அவர்களை வரவேற்றது, நஸீமாவும் ரஃபீக்காவும்தான்.

இனிக் கேட்கவா வேண்டும்? கூடவே அவர்கள் அனைவரும் சேர்ந்து வாங்கிய பரிசுப்பொதியும் வந்து சேர்ந்தது. பாவம்; இவர்களுக்கு மத்தியில் ஒருத்தி மாத்திரம்...!

வெளியே பட்டாசு வெடிகள் ஒலித்தன. மாப்பிள்ளை ஊர்வலம் நெருங்கி வருகின்றதென்பதற்கு அத்தாட்சி தானே அது. அவ்வேளை... மணக்கோலத்தில் இருப்பவர்களின் உணர்வுகள்... இருந்து பார்த்தால்தான் புரியும்.

காவின் முடிந்து மாப்பிள்ளையை அங்கே அழைத்து வந்துபோது, அத்திருக்காட்சியைக் கண்டுகளிக்க எத்தனை இமைகொட்டாக் கண்கள். லாஃபிர் மிகவும் கம்பீரமாக நின்றான். பதற்றம் எதுவுமே இன்றி வழமையான புன்னகை முகத்திலே தவழ... தன் இல்லத்தரசிக்கு சவடி கட்டிய காட்சி... ஆஹா... எவ்வளவு இன்பமயமானது.

மீண்டும் பழைய கலகலப்புத்தான். அப்போதுதான் பின்பக்க ஆசனமொன்றில் மௌனமாக அமர்ந்திருந்த ஃபாத்திமா ஒவ்வொருவரது கண்களிலும் பட்டாள். அவள் தானாகவே பொறியில் சிக்கிக்கொண்ட எலியைப் போல...

''எனக்கிட்ட விசாரிச்சா அவங்கட பொக்கத்துக்குத் தான் பேசுவன்''. தெரிந்தோ தெரியாமலோ இப்படி வாய்விட்டுச் சொல்லிவிட்டாள் அவள். இதன்பின்பு யாருமே அவளுக்கு முகம் கொடுப்பதில்லை.

''ஃபெக்டரி புள்ளயலெல்லம் வாங்கொ''. ஓர் விசேட அழைப்புக் குரல்!

வெளியாருக்கான விருந்துபசாரம் முடிவடைந்தபின் இவர்களுக்காக பிரத்தியேக ஏற்பாடு. ஒரு பக்கமாக

நீள்வாக்கில் மேசைகள் ஒன்றிணைத்துப் போடப்பட டிருந்தன.

எல்லோரும் வரிசையாக முகத்துக்கு முகம் பார்த்து அமர்ந்துகொண்டனர். இனிக் கதைக்கா பஞ்சம்?

''லேபரால வந்தாப்பொறகு எல்லாரும் சேர்ந்து அந்தச் சந்தோஷத்த கொண்டாடிய...'' ஒருத்தி ஆரம் பித்தாள்.

''அதுக்குத்தான் சீக்கிரமா ஸரீனாட கலியாணத்த எடுத்த'' இது இன்னொருத்தி.

''அடி உஸைமா ஒனக்கிட்ட எனத்தியன் கேட்ட'' தயாவதியின் கேள்வி.

''எத்தின பைணம் சென்னன். செல்லச்செல்ல ஒனக்கு புரியாணிமாதிரி ஈக்கியபோல'' இது உஸைமா.

''அப்பிடித்தான் சந்தோஷமான செய்தியள எத்தின மொற கேட்டாலும் அலுக்கியல்ல''.

''ஆ. கோழி எறச்சி கவனமா தின்னோணும் கொளுக்கலியள் புடிச்சா எங்களுக்குத் தெரிய... நஸிமா மிச்சமா தின்டிராதே'' நேரம் பார்த்து ரஃபீக்கா தன் பேச்சுப் பெட்டியைத் திறந்தாள்.

''நீ எனத்துக்கன்டி இத்தின பேருமிக்கச்செல்ல எனக்குச் செல்லிய?'' நஸீமா திருப்பிக் கேட்டாள்.

''அடுத்த கலியாணம் ஒன்டதானே... அதச்சொட் டீந்தான்''.

''இப்ப ஒனக்குத்தான் அவசரம்போலீக்கி''.

''இல்லடீ ஒனக்குமுந்தி இனுமொரு கலியாணமீக்கி... ஆனா அந்தக் கலியாணத்துக்கென்டா எங்களுக்குச் செல்லிப்படாது... பெரிய எடத்துக் கலியாணமெலியன்''. கண்களால் ஃபாத்திமாவைக் காட்டியபடி ரஃபீக்கா சொன்னாள்.

''ஒ நடக்கியத்த நாங்களும் பாக்கத்தான் நிக்கிய''. இன்னுமோர் அடி கொடுத்தாள் றிஸானா.

ஃபாத்திமா எல்லாம் கேட்டுக்கொண்டு எதுவுமே பேசாமல் நின்றாள். யாருமே அவளுடன் கதைப்ப தில்லையே; இப்படிப்பட்டதொரு வைபவத்தில் எல்லோ ராலுமே புறக்கணிக்சப்பட்ட நிலையில், அதுவும் அவர் களுக்கு மத்தியில் இருப்பதை விட வராமலே இருந்திருக்க லாம்போல் தோன்றியது அவளுக்கு. கடைசி நேரத்திலா வது அவள் எல்லோருடனும் சேர்ந்திருக்கலாம்தான். 'எல்லம் நாங்க சமாளிச்சிப்போடிய' என்ற சின்ன் பொஸ்ஸின் பேச்சைக்கேட்டு ஏமாற்றமடைந்ததுதான் மீதி.

''ஆ... எனத்தியன் பாத்துக்கோரிக்கிய. தின்னுங்கொ தின்னுங்கொ...''

''எறச்சால போடுங்கொ... பிச்சித்தரவா...''

உதவியாளர்கள் 'வெளும்பி'க் கொண்டிருந்தார்கள்.

ஃபாத்திமாவுக்கு சாப்பிடவே முடியவில்லை. சாப் பிடாமல் போகவும் முடியாத நிலையில்தான் வந்தமர்ந் தாள். ஏதோ சாட்டுக்கு இரண்டொரு பிடிகளை வாயிலே போட்டாள். அடுத்தவர்கள் விட்டுவைத்தால் தானே... சொல்லம்புகள் சுளீர் சுளீரென்று அவளது இதயத்தையல்லவா கூர்பார்த்தன.

''அடி கருணா கலியாணூடு எவளவு வெளிச்ச மென்டீ...ஆனா செலவங்கட மொகம்'' ரஃபீக்காவின் அடுத்த அம்பு.

''மெய்தான்... ஏழாந்தெய் தீலீந்து இருட்டுத்தான்.'' அன்றுதான் விசாரணை நடந்ததென்பதை கருணா சொல்லாமல் சொன்னாள்.

''ஆ புடின் தின்னுங்கொ.''

சிலருக்கு இப்படியான கல்யாணச் சாப்பாடு புதிய அனுபவம் என்று தெரிந்ததால்தான் போலும் ஒவ்வொன்றாகச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

''ஆ இந்தங்கொ தண்ணி.''

அப்பாடா எல்லோரும் ஒருவாறாகச் சாப்பிட்டு முடித்தார்கள். விடுவாார்களா... ஸரீனாவுடன் கதைப்பதற்காக ஓடோடிச் சென்றார்கள். அவர்களுக்குள் முந்தியடித்துக்கொண்டு ரஃபீக்கா பாய்ந்தாளென்றால் என்னென்ன சொல்லிக் குழப்பவோ...!

ஃபாத்திமாவின் சிந்தனை மட்டும் அந்த எல்லைகளைத்தாண்டி புதியதொரு முடிவை நோக்கிச் சிறகடித்துக்கொண்டிருந்தது.

# 19

''மகள் ஃபெக்டரிக்குப் பொகல்லியா?''

''இல்லும்மா.''

''எனத்தியன் முந்தநாத்து தலக்குத்தெண்டு பொகல்ல நேத்தும் பொகல்ல... இன்டக்கும் பொகாமீந்தா... எனத்தியன் இதட வெளப்பம்?''

''எனேப் பொகப் புரியமில்ல.''

''நின்டவாக்கில எனம்பன் புரியமில்லாப்போன? ஊட்டில சும்மீக்கியத்தப் பாக்கபோனா அசடா?''

''அங்கெல்லம் இப்ப கரச்சல்வா.''

''இனி எங்களுக்கெனா... நாங்க எங்கட வேலயப் பாத்திட்டு வாரதான் உள்ளது.''

''அப்பிடியேலுமன்... எப்பிடீம் எங்கடமேலேம் பூசிப் படுகியேன்.''

''எனக்குத் தெரீமன்... அப்ப வாயெத்தொறந்து செல்லோனேன்... மத்தப் புள்ளயலும் அப்பிடிப் பொகாம நிக்கியா.''

''என்னோட மத்தவங்க கோவம்.''

''அதெனம்பன் அப்பிடி? போற வார எடத்தியல்ல எல்லாரோடேம் ஒத்துமயா ஈக்கோணும்.''

''அப்ப உம்மாம் ஏண்டமேல்லயா குத்தத்தப் போடிய.''

''இங்கீக்யிவளுக்கு எப்பிடியன் அதியள் தெரீம்... அப்ப நான் பெய்த்து எனத்தியென்டு கேக்கவா?''

''வாணவாண நீங்க ஒங்கட வேலயப் பாத்துக் கொண்டு நில்லுங்கொ.''

''சும்ம அநியாயமா நாலு பணம் கெடக்கியத்த எடுக் கேலாம எனத்தியன் புடிச்சீக்கிய? தொழில் தொறவில்லாமல மனிசர் படுகிய கஷ்டத்த தெரியவா?''

''நீங்க ஃபெக்டரிக்குப் பொகத் தேவில்ல. நியாஸ் நானாக்கிட்டப் போனாச் சரி.''

''தாருக்கட்டப் பெய்த்துச் சரி சும்ம நிக்காம ஃபெக்டரிக்கு போ.''

''அப்ப மஃரிபு தொழுதிட்டுப் போம்.''

மஃரிபு வேளை நெருங்கும்போது காலையில் உம்மாவோடு நடந்தவாதம்கலந்த உரையாடல் அவள் நெஞ்சில் விரிந்தது. இன்னும் சொற்ப நேரத்தில் உம்மா வந்து கூப்பிடப்போவதை, அவள் எதிர்பார்த்திருந்தாள்.

பேச்சு எவ்வளவு பெறுமதியானது என்பதை இப்பொழுதுதான் அவள் அனுபவபூர்வமாக உணர்ந்திருந்தாள். அது உதட்டைப் பிளந்துகொண்டு வெளிவந்து விட்டாலோ... சில வேளைகளில் வாழ்நாளெல்லாம் அதை நினைத்தே சாகவேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்படலாம் தான்.

'எனக்கிட்டக் கேட்டா நான் மத்தப் பொகத்துக்குத் தான் பேசுவன், அவள் நினைத்து நினைத்து வெதும்பும் இந்த வார்த்தைகள் தொழிற் கந்தோரால் விசாரணைக்கு வர முதல்நாள் அதுவும் பலர் முன்னிலையில் அவள் சொன்னதுதான்.

இச் சொற்களின் மறுதலை 'எல்லாத் தொழிலாளர் களையும் காட்டிக்குடுப்பன்' என்பதுதானே?

இப்படியெல்லாம் சொல்வதற்கு அவள் துணியக் காரணம் சின்னபொஸ்தான். அப்படி ஃபாத்திமா மூலம் சொல்லவைப்பதால் ஏனையவர்களைப் பலவீனமடையச் செய்யலாம் என்று எண்ணியிருப்பார் போலும்! அத்தோடு பணப் பலத்தின் மூலம் எல்லாவிடயங்களையும் மூடி மறைத்துவிடலாம் என்ற நம்பிக்கையும் இருந்திருக் கலாம்.

சின்ன பொஸ்ஸின் தொடர்பு உண்மையில் எவ்வித நன்மையையும் அவளுக்களித்துவிடவில்லை. மாறாக பல இழப்புகளையே ஏற்படுத்தி வருகின்றதென்பதை, இப்பொழுது ஃபாத்திமா நன்றாக உணர்கிறாள்.

அவளது கல்வித் தகைமையும் ஆற்றலுந்தான் அவளுக்கு கொஞ்ச காலத்திலேயே ஓர் உயர்வை ஏற்படுத்தியதென்று சொல்வதற்கில்லை. அவளது அழகுக்கும் பேச்சுச் சுகத்துக்கும் உள்விவகாரங்களை அறிந்துகொள்ளவுமே, அந்த ஏற்பாடு என்பதை கொஞ்ச நாட்களிலேயே அவள் புரிந்து கொண்டபோதும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருந்துவிட்டாள்.

இறுதியில் கூட்டுமொத்தமான விளைவை ஸரீனாவின் கல்யான வீட்டில்தான் அணுவணுவாக அனுபவிக்க முடிந்தது. ஒருதொடர்பும் ஒருசில ரூபாக்களின் உயர்ச்சியுமா? அல்லது ஒரு தோழமைக் குழுவின் புறக்கணிப்பா? என்பதற்கு விடை காண்பதிலேயே கடந்த இரண்டு மூன்று நாட்களையும் அவள் கழிக்க வேண்டியிருந்தது. இப்பொழுது அவளுக்கு விடை கிடைத்துவிட்டது.

''வா புள்ள பாங்கு செல்லிக் கொஞ்சம் நேரமாகுது போமோ?''

''நில்லுங்கொ உடுப்ப மாத்திக்கொணுவாரன்.''

பத்தே நிமிடத்துக்குள் அவள் தயாராகிவிட்டாள். இருவரும் நியாஸ் வீட்டை நோக்கிப் புறப்பட்டனர்.

நியாஸ் எவ்வளவு நேர்மைத் துணிவு மிக்கவன்! யாரையுமே பகைத்துக்கொள்ளாத போக்கு ஃபெக்டரியில் சேருமுன்பே அவள் நியாஸைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறாள். 'கொழப்பக்காரன்' என்ற அடிப் படையில்தான். 'நியாயத்துக்காகப் போராடுபவன்' என்பதுதான் அதன் சரியான அர்த்தமென்பது இப் பொழுது அவளுக்குப் புரிகிறது.

நியாஸின் வீட்டை நெருங்கியபோது, இனந்தெரியாததொரு வெட்கம் அவளை அரவணைத்தது.

''இதுதானே அவங்கட ஊடு.''

''ஓ உம்மா இதுதான்.''

'கடவலை'த்தாண்டி இருவரும் உள்ளே சென்றனர். நியாஸ் இருப்பாரோ இல்லையோ என்ற சந்தேகம் அவளுக்கு ஏற்படத்தான் செய்தது.

''ரஹ்மாத்தோவ்.''

''தாரன் வாங்கொ'' அவர்களை வரவேற்றது நியாஸ்தான்.

ஃபாத்திமாவுக்கோ சொல்லமுடியாத வெட்கமும் கூச்சமும்!

உம்மாவைத் தொடர்ந்து அவள் உள்நுழைந்த போதுதான் அவன் யாரென்பதை இனம் கண்டான்.

''ஆ... ஃபாத்திமா இரீங்கொ...'' நியாஸ்.

''மிச்சம் நாளக்கிப் பொறகு இங்கல வர நெனச்சீக்கி.'' ரஹ்மாத்தா இப்படிக் கேட்டபடியே வந்தாள்.

''எங்கட மகளும் ஃபெக்டரிக்குப் போறேன். அதப் பத்தி மமநியாஸோட எனத்தியோ பேசோணுமெண்டு என்னக் கூட்டிக்கொணுவந்த.''

''அப்பிடியா... அவங்கட கதயள் எங்களுக்கு வெளங்கினாத்தானே.''

கிழவிகள் இருவரும் எதையெதையோ கதைக்கத் தொடங்கியது அவர்கள் இருவருக்கும் வசதியாக அமைந்துவிட்டது.

''எனத்தியன் மூணு நாளா ஃபெக்டரிக்கு வரல்ல.'' நியாஸே ஆரம்பித்து வைத்தான்.

ஒரு குற்றவாளி, நீதிபதியின் முன் நிற்பதுபோல கூனிக்குறுகி நின்றாள் ஃபாத்திமா.

''ம்... பேசாமீந்து சரிவாரா?'' மீண்டும் நியாஸே கேட்டான்.

''எனக்கிப்ப ஃபெக்டரிக்கு வர மனசில்ல'' தயங்கிக் கொண்டே சொன்னாள்.

''அதெனா அப்பிடி.'' நியாஸ் எதிர்பாராத பதிலையல்லவா அவள் சொல்லிவிட்டாள்.

''எனக்கு செல்லியத்துக்கும் வெக்கமாயீக்கி. இப்ப ஒத்தருமே அங்க என்னோட பேசியல்ல... எல்லாருமே

குத்துவாத்த செல்லிய... இதுக்கெல்லம் நான்தான் காரணம்'' அவள் மெதுவாகத் தன் மனக்கதவுகளைத் திறக்க ஆரம்பித்தாள்.

''இதுக்கெல்லம் வராமீக்கியா — மடத்தனமான வேல... எல்லம் நான் பாத்துக்கொளுகியன்.''

நியாஸின் பெருந்தன்மையும் நல்ல மனமும் அவளை ஆகர்சித்தது. கடந்த காலங்களில் ஃபெக்டரியில் அவள் போக்கு நன்கு தெரிந்தும்கூட இப்படி உதவ முன்வந்ததே அதற்குக் காரணம்.

''சின்ன பொஸ்ஸட பேச்சக் கேட்டுத்தான் நான் அப்பிடியெல்லம் நடந்தன். ஆனாமனமென்டா எப்போம் ஒங்களியலட பொக்கிந்தான். நான் வழிபாக்காமலே என்ன ஸ்டோர் கீப்பராக்கினத்தாலதான் எனக்கிந்த அநியாயம் வந்த...''

''அதெல்லம் எங்களுக்குத் தெரீம்... ஒத்தரும் அப்பிடி மாத்தமா நடக்கியத்தால ஒரு சங்கத்த இல்லாமாக்கேல... அதச்சொட்டீம் நாங்க ஒங்கடமேல கோவப்படல்ல. ஆனா மனசிலீக்கிய ஆத்திரத்தக் காட்ட செலவங்க சும்ம செல்லுவாங்கதான்... அதுக்குப் பயந்து வராமீக்கியா?'' நியாஸ் நிதானமாகத் தனது அபிப்பிராயத்தை முன் வைத்தான்.

''நான் ரெணுமூணு நாளா யோசிச்சி யோசிச்சி இப்ப ஒரு முடிவுக்கு வந்தீக்கி.''

அந்த முடிவு என்னவோ என்பதை அறியும் ஆவல் அவனுக்குள் வியாபித்தது. ''சரி செல்லுங்கொ'' என்றான்.

''ஒன்டில் நான் ஃபெக்டரிக்கி வராமீக்கோணும்... இல்லாட்டி வந்து எல்லாரேம் போல வேல செய்யோணும்.''

''மிச்சம் தெறமான முடிவுக்கு வந்தீக்கி. இந்த சின்ன விஷயத்துக்கெல்லம் வராமீந்தா அது பெரிய அநியாயம்.'' என்பதோடு மாத்திரம் நிறுத்தினான். வழிக்குத் திரும்பி யுள்ளவளை, இழுத்தெடுத்து சேர்த்துக்கொள்ளாமல்... கொடிக்கம்பத்துக்கு சுயமாகவே வந்துசேர வழிவிட்டு நின்றான்.

''அப்பிடியென்டா என்னேம்...''

''செல்லுங்கொ''

''ஒங்கட சங்கத்தில சேத்துக்கோங்கொ.

''ஓ... நாங்க எப்பேம் ரெடி... அதுக்கு மட்டுமல்ல இப்பிடி நீங்க வாரத்தால அங்க ஒங்களுக்கு எனத்தியாவது கரச்சல் வந்தா அதுக்கும் நாங்க முன்னுக்கு வார.''

நியாஸின் தாராள வரவேற்பும் அதன் பின்னணியில் ஏற்படவிருக்கும் நிலைமைகளுக்கான பாதுகாப்பும் அவளுக்கு இவ்வளவு காலமும் நான் ஏன் இப்படி அகங் காரமாக இருந்தேன் என்ற வினாக்குறியைத்தான் அவள் மனதுள் எழுப்பியது.

''அப்ப நான் நாளக்கி வாரன்.''

''ஓ ஒங்கள நாங்க சந்தோஷமாக வரவேக்கிய. எங்களுக்குத் தெரீம் நீங்க எப்ப சரி வந்து சேரியென்டு...''

அப்பொழுதான் அவளது முகத்தில் பூரணச் சந்திரன் வந்தமர்ந்தது. அது விடைபெறும் அறிகுறியாகவும் படர்ந்தது.

''உம்மா நாங்க போமா?''

''பேச்சியள் முடிஞ்சா? அப்ப நாளக்கி ஃபெக்டரிக்கிப் போறா?'' உம்மாக்காரி மிகுந்த எதிர்பார்ப்புடன் கேட்டாள்.

''ஓ அநியாயமா எனத்துக்கன் நிக்கிய... நீங்க ஆள அனுப்புங்கொ.'' நியாஸ் அவளது உம்மாவைப் பார்த்துச் சொன்னான்.

''அதுதான் நானும் சென்ன மகன்... அப்ப பெய்த் திட்டு வாரம் ரஹ்மாத்தா.''

''அல்லாட காவல்.'' உம்மாவும் மகனும் வழியனுப்பி வைத்தார்கள். அங்கிருந்து வெளியேறும்போது புதிய தொரு உணர்வு அவளுக்குள் சங்கமித்திருந்தது.

## 20

மூன்று நாட்களாக ஃபாத்திமா வராதசெய்தி ஃபெக்டரியில் எல்லோரிடையேயும் பலவித சிந்தனை களை வளர்த்துவிட்டிருந்த வேளையில், நியாஸைச் சந்திக்கச் சென்ற செய்தியும் வந்து சேர்ந்து அங்கே மகிழ்ச்சியைத் தோற்றுவித்திருந்தது.

மாபெரும் தலைவியொருத்தியை வரவேற்கக் காந்திருப்பது போன்ற உணர்ச்சியோடும், என்னென் னவோவெல்லாம் கதைக்கும் ஆவலோடும் அத்தனை பேரும் அவள்வரும் வழியையே வைத்தகண் வாங்காமல் பதித்துக் கொண்டிருந்தனர்.

இவ்வளவு காலமாக ஒன்றாகப் போய்க்கொண் டிருந்த பயணத்தின் இடைநடுவில் இடர்பாடாகவிருந்த, பெருங்கல்லொன்று அகன்று கைகொடுத்ததே போன்ற பெருமிதம் அனைவருக்கும்.

''சின்னபொஸ் எனத்த செல்லுவாரோ தெரிய.'' சந்தேகக் கோடுகளைப் பலர் கீறினர்.

''கொஞ்சம் ஏசியொன்டும்... அவளவுதான் அவருக்குச் செய்யேன்ட.'' தயாவதி சட்டென்று சொன்னாள்.

''அவளுக்கு எனம்போதெரிய இந்த யோசின வந்த''

குழுக்குழுவாகக்கூடி ஃபாத்திமாவின் மனமாற்றத்தையிட்டு கதைத்துக்கொண்டனர். இச்செய்தி கேள்விப்பட்டால் சின்னபொஸ்ஸின் தலையில் இடி விழுந்ததுபோல்தானிருக்கும்! பாவம் என்னதான் செய்வார்...? ஒரேயொரு பிடிகயிறு... அதுவும் அறுந்துவிட்டபோது...

''அன்னன்ன ஃபாத்திமா வார''

முன்பெல்லாம் அவள் வருவதென்றால் நக்கலும் நையாண்டியும்தான் அவளுக்குக் கிடைக்கும்! மாறாக இன்று எல்லோர் முகங்களும் அலர்ந்த நிலையில் வாழ்த்துச் சோபனம் கூறின. அவளுக்குத்தான் என்னவாம்... நிலத்தைப் பார்த்தபடியே நடையிலவள் வரவேற்பு மரியாதையை ஏற்றுக்கொண்டவளாய் தயக்கம் கலந்த முறுவலுடன் மெலலமெல்ல நடந்து வந்தாள்.

டைம் மாக் பண்ணிவிட்டு வெளியே வந்ததும், ஒரேயடியாக எல்லோருமே அவளை மொய்த்துக் கொண்டனர். நஸீமா ஒன்றுமே பேச முடியாதவளாய் அவளை இறுகத் தழுவிக்கொண்டாள்.

''இவளவு நாளும் நான் பெரிய குத்தம் செஞ்சிட்டன். தயவுசெஞ்சி நீங்களெல்லாம் என்ன மன்னிச்சிக்கொளோணும்.'' அவள் மிகவும் பரிதாபமான குரலில் எல்லோரையும் வேண்டிக்கொண்டாள்.

''இல்லில்ல நாங்க அதப்பாக்கப் பெரிய குத்தம் செஞ்சீக்கி... போர வாரத்துக்காலும் உடாம கதகாரணம் சென்ன... அதச்சொட்டீம் நீங்கதான் எங்கள மன்னிச்சிக் கொளோணும்.'' நஸீமா மிகப் பொருத்தமாக அனைவர் சார்பிலும் கேட்டுக்கொண்டாள்.

''ஃபாத்திமாவ நீங்களியள் உடுகியல்ல போல்க்கி...''

இக்குரலுக்குரிய ஜினதாஸவைக் கண்டதும், ஃபாத்திமாவுக்கு வெட்கம் வெட்கமாக வந்தது. புதுப்பிரவேசத்துக்கான அங்கீகாரத்தை ஒவ்வொருவரிடமும் பெறும் அனுபவம் ஓர் இன்ப வேதனையாக விருந்தது, அவளுக்கு!

''இவளவு நாளும் புடிச்சிக்கொளப் பாத்த... ஏலாப்பெய்த்து... இனிமேல, எங்கட கைலீந்து தப்பிப்பொகேல.'' நஸீமா சொன்னாள்.

எட்டுமணியை பெல் எடுத்தியம்பியது.

ஸ்டோர் ரூமில் அமர்ந்து இருப்புச் சாமான்களைக் கணக்கிட்டுக் கொண்டிருந்தாள் ஃபாத்திமா. தொடர்ந்தும் இதே இடத்தில் இருக்கக்கிடைக்குமோ என்ற எண்ணமே அவளுக்குள் பூதாகாரமெடுத்து நின்றது.

சின்னபொஸ் அன்று வந்து சேரும்பொழுது வழமையைவிடக் கொஞ்சநேரம் தாமதித்துவிட்டது. அவர் வந்ததும் அவளுக்கு ஒரே படபடப்பு. தொழிற்சாலையைப் பொறுத்தமட்டில் மட்டுமல்ல, தனிப்பட்ட வகையிலும்கூட அவளுக்கொரு தாக்கமாகத்தான் இது அமையப்போகிறது.

சுமாராக பதினைந்து நிமிடமளவு கடந்தபின், கனைத்து... தனது வரவை முன்னறிவிப்புச் செய்து கொண்டு ஒஃபீஸுக்குள் நுழைந்தாள் ஃபாத்திமா.

''ஆ வாங்கொ வாங்கொ... நான்வர இன்டக்கி கொஞ்சம் பிந்திட்டு.'' வரவேற்பு வழமைபோல் அமைந்தது.

''மூனுநாளா சொகமில்ல...''

''அப்பிடியா இப்ப எப்பிடி?''

''சும்மா தடுமல் காச்சல்தான்''

''தெரியலே... இல்லாட்டிப் பாக்க வந்தீப்பன்.'' உள்ளர்த்தப் பாட்டுடன் சொன்னான்.

இதை அவளால் ரசிக்கவோ சகிக்கவோ முடிய வில்லை. முன்பென்றால் அதற்கு ஏதாவது இங்கிதமாகச் சொல்லியிருப்பாள்தான்.

''எனத்தியன் பேசாம நிக்கிய... இன்னேம் நசல்கொணம் பொகல்ல போல'' அவளது மன மாற்றந்தான் அதற்குக் காரணமென்று அவருக்கெங்கே தெரியப் போகின்றது.

''இல்ல இப்ப எனக்கு நல்ல சொகம்.''

''அப்ப... ஒரு மாதிரி...''

''ஒண்டுமில்ல புதிய செய்தியொன்டுசெல்லோணும்.' வார்த்தைகள் வர மறுத்தன.

''செல்லுங்கொ செல்லுங்கொ.''

''நானுத் இன்டக்கி... சங்கத்தில சேந்திட்டன்.''

''எனத்த?'' அவரது முகம் கணப்பொழுதில் மாறிப் போய்விட்டது. இப்படி எதையும் அவர் எதிர்பார்க்க வில்லை அல்லவா! குளிர்ச்சோலைக்குள்ளிருந்து அக்கினிக் கிடங்கிற்குள் தூக்கி எறியப்பட்டது போலிருந்தது அவருக்கு!

அந்த உரத்த குரலதிர்வால் அவளுக்கு வியர்த்துப் போய்விட்டது. நிமிர்ந்து அந்த முகத்தைப் பார்க்க முடியாத பயங்கரம்.

''இவனியள்ட சங்கத்தில சேந்தா?''

''ஓ...'' அவள் தலையாட்டுவதைத்தவிர வேறென்ன செய்யமுடியும்?

''இதப்போல நன்டிகெட்டவேல வேறெனத்த... இதுக்கா ஒனக்கு இவளவு நாளும் ஒதவி செஞ்ச.''

''நீங்க ஒதவி செஞ்சது மெய்தான். அதால நன்மயப் பாக்க கஷ்டந்தான் எனக்கு மிச்சம்.''

''எனத்தியன் பெய்த்தியமா ஒனக்கு?'' கோபம் பொறுக்க முடியாமல் இருக்கையிலிருந்து எழுந்து நின்றார்.

''ஒன்ன ஸ்டோர் கீப்பராக்கினது... சம்பளம் கூட்டினதெல்லாம் இதுக்கா... அட்டயத் தூக்கி மெத்தேல வெச்சா அது சருகுக்குள்ளயாம் போற... அன்ன அதப்போலதானீக்கி.''

''சங்கத்தில சேரவாணான்டு செல்லியா எனக்கு இப்பிடியெல்லம் ஒதவி செஞ்ச?'' நியாயமான கேள்வியொன்றைத்தான் அவள் தூக்கிப்போட்டாள்.

''அதச் செல்லத் தேவில்ல... தெரிஞ்சிக்கொளோணும்.''

''என சொன்னாலும் நான் என்னப்போல உள்ளவங்களோடதான் நிக்கோணும். நாளக்கி எனக்கொரு கஷ்டம் வந்தா அவங்கதான் ஒதவுவாங்க.

''ஓ அந்த எலக்கஜாதிக்கொணம் வரும்தான்.''

''நீங்க எப்படிச் சென்னாலும் காரியமில்ல.'' அவள் நிதானத்தையோ தைரியத்தையோ சிறிதும் இழக்க வில்லை.

''ஆ அப்ப பழயபடி தக்கியத்துக்குப் பொவோண்டிய தான்... இன்டக்கி மட்டுந்தான் இவடத்தில்'' என்றவர் தொப்பென்று அமர்ந்து எதையோ புரட்டத் தொடங்கினார்.

அவள் நினைத்தது சரியாய்ப் போய்விட்டது. அங்கேயுள்ள பொருள்களையும் பதிவுப் புத்தகத்தையும் ஒருமுறை செக்பண்ணிப் பார்த்தாள், ஒப்படைக்கும் நோக்கத்தோடு.

சின்ன பொஸ்ஸுக்கு இதைவிடப் பெரிய ஏமாற்றம் வேறென்னதான் இருக்க முடியும்! வரண்ட பாலை வனத்தில் குளிர்ந்த ஒரேயொரு ஊற்றும் வற்றி விட்டால் பிறகு என்னதான் செய்வது!

அவரின் வேண்டுகோளின்படி பொருள் பதிவுப் புத்த கத்தை அவள் ஒப்படைத்துவிட்டு, வெளியேறுவதற்கும் வேலை முடிவு நேரத்துக்கும் சரியாகவிருந்தது.

எதிர்பார்த்ததுபோல் ஃபாத்திமாவை எல்லோரும் சூழ்ந்துகொண்டனர். என்ன நடக்குமென்று எல்லோரும் எதிர்பார்த்தார்களோ, அதுவேதான் நடந்திருந்தது. ஆனால் அதற்காக அவள் ஆத்திரப்படவில்லை; அன்புக் கரங்களின் அரவணைப்பில் ஆனந்தித்தாள்.

வேலை நேரம் முடிந்ததால் வெளியேறுவதைத் தவிர, அங்கே கூடிக் கூடிக் கதைத்துக்கொண்டிருக்க முடியா தென்ற புதிய சட்டத்தைக்கூட எல்லோரும் மறந்து போயிருந்தனர்.

வெளிக்கிட வந்த சின்னபொஸ் ஃபாத்திமாவைச் சூழ்ந்துள்ள ஆதரவை, ஒருகணம் வியப்போடு தரிசிக்கத்

தவறவில்லை. இனி அவருக்கு எப்படிச் செய்திகள் கிடைக்கும்?

''இங்க நிக்கப்படாது தெரியவா.''

நியாஸ் சத்தமிட்டுக்கொண்டு ஜினதாஸவுடன் வந்தான். என்ன இருந்தாலும் சட்ட வரம்புகளை மதிப்பதில் அவன் முன்னிலை வகுப்பவன். அவனது சத்தம் எல்லோரையும் முன்னோக்கித் தள்ளும் உந்து சக்தியாகியது.

எல்லோரும் எங்கே வெளியேறுவார்களென்று பார்த்திருந்த கேட்கீப்பர் கேற்றை இழுத்து மூடினான்.

''நாளேலீந்து ஃபாத்திமாவ தையல் வேலக்கிப் போட்டீக்கம்... இது ஞாயமா?சங்கத்தில சேந்தத்துக்கு இப்பிடிச் செய்யேல... இதுக்கு நாங்க எனத்தியன்ச் செய்த'' கேற்றடியில் குழுமி நின்றவர்களிடம் ஜினதாஸ இப்படிக் கேட்டான்.

''இதுக்கு எங்கட சங்கமூலமா நாங்க எதுப்புத் தெரிவிக்கோம்.'' பல குரல்கள்.

'' ம்...இதுக்கு எல்லாரும் புரியமா?'' மீண்டும் ஜினதாஸ கேட்டான்.

''அதுக்கு சரியான முடிவு செல்லங்காட்டீம் நாளக்கி ஒத்தரும் வேல செய்யப்படாது.'' தயாவதி கர்ஜித்தாள்.

'' ஓ ஓ அப்பிடித்தன் செய்யோணும். நாங்க ரெடி.', மீண்டும் பல குரல்கள்.

அந்தத் தீர்மானத்துக்கு வந்தவர்களாக எல்லோரும் கலையத் தொடங்கினர்.

இந்தச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டபின் தனிப்பட்ட ஒருவரின் பிரச்சினையை முன்வைத்துள்ளது இதுதான் முதற் தடவை. அதுவும் இன்றுவந்த ஃபாத்திமாவுக்காக!

ஃபாத்திமா எதை நினைத்தோ கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

# 21

காற்றினால் சலசலத்துக்கொண்டிருந்த ஜேம் மர இலைகளோடு சேர்ந்து பெண்களின் குரல்களும் கலகலத்தன. ஜினதாஸவும் நியாஸூம் இன்னும் வந்து சேரவில்லை. அவர்களை எதிர்பார்த்துக்கொண்டே அங்கு எல்லோரும் குழுமி நின்றார்கள்.

ஃபெக்டரியின் வரலாற்றிலே அன்று புதுமை நிரம்பிய ஒரு நாளாகத் திகழப்போகிறதல்லவா? அதன் கதாநாயகர்களுக்குத்தான் எவ்வளவு மதிப்பு. தொழிலாளர் சங்கத்தின் பூரணத்துவம் இனிமேல் சுடர்விடப் போகின்றதென்பதில் ஃபாத்திமாவுக்கு ஒரு கிளுகிளுப்பு.

எட்டுமணிக்கு ஐந்தாறு நிமிடங்கள் இருக்கும்போது இருவரும் அங்கே வந்து சேர்ந்தனர். ஜினதாஸவின் கையில் சங்கக் கடிதத்தாளொன்று சுருட்டியபடியிருந்தது. நிர்வாகத்தினருக்கு ஃபாத்திமாவின் பிரச்சினை சம்பந்தமாக தயாரிக்கப்பட்டுள்ள கடிதப் பிரதிதான் அது என்பதில் எவருக்கும் சந்தேகமிருக்கவில்லை.

''எப்படியன் நஸீமா ரெடியா?'' நியாஸ் கேட்டான்.

''நான் மட்டுமல்ல எல்லாருமே ரெடி'' அவள் அனைவரது தைரியத்தையும் தொட்டுக்காட்டினாள்.

''செலநேரம் அடிபுழுந்தாலும் புழும். அந்த நேத்தக்கி எங்களேம் காப்பாத்தோணும்.'' நகைச்சுவை யாகச் சொன்னான் நியாஸ்.

''ஓ அதுக்குத்தானே எங்கட ரஃபீக்கா ஈக்கிய.'' கருணா சும்மா இருந்தவளை வம்புக்கிழுத்தாள்.

''ஓ ஓ எங்கவாப்ப பழய பொலிஸ் தெரீமா... அவருக்கிட்ட அடிபட்டவங்கெல்லம் இப்ப பள்ளீத் தோட்டத்தில படுக்கியாங்க.'' ரஃபீக்கா சும்மா விடுவாளா என்ன?

எட்டுமணி... வேலை நேரம் மணி...

ஒவ்வொருவரையும் தொழிற்கூடங்களுக்கு இழுத்துச் செல்லும் அந்த ஒலி அன்று ஏமாற்றத்தால் கூனிக்குறுகிப் போயிருக்கும்! ஏனென்றால் அத்தனை பேருமே அதை புறக்கணித்துவிட்டார்களல்லவா?

''எங்களுக்கும் அத வாசிந்துக் காட்டினால் நல்லந்தானே.'' தயாவதி கேட்டாள்.

''ஓ அதுக்கெனத்தியன்... வாசிக்கியன் கேட்டுக் கோங்க.''

எல்லோரது செவிகளும் கூர்மையாகின.

...தொழிலாளர் சங்கத்தில் ஒருவர் சேர்வதும் விலகுவதும் அவரவர் சுதந்திரத்தைப் பொறுத்தது. அதற்கும் நிர்வாகத்துக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை.

இந்நிலையில் எமது சங்கத்தில் செல்வி ஏ.எஸ். ஃபாத்திமா சேர்ந்தமைக்காக அவர், ஸ்டோர் கீப்பர் பதவியிலிருந்து கீழிறக்கப்பட்டுள்ளார். இது எமது

தொழிலாளர்களின் உரிமையை மறுத்தவொரு நிகழ்ச்சியாகும்.

இதனை எமது சங்கம் வன்மையாகக் கண்டிப்பதோடு, இந்நிலையிலிருந்து மீண்டும் அவரைப் பழைய பதவிககு கொண்டுவருமாறு கோருகிறோம். இதில் சுமுகநிலை ஏற்படாவிடின் இன்றே மேல்நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்வதுடன் அதுவரையில் அமைதியான முறையில் எமது எதிர்ப்பைத் தெரிவித்துக்கொண்டிருப்போம்.

''எப்பிடி நல்லாயீக்கா?'' வாசித்து முடிந்த நியாஸ் கேட்டான்.

''ஓ... இதப்பாத்தொடன கொச்சிக்க கடிபட்டமாதிரி சின்ன பொஸ் துள்ளியொண்டும்.'' ரஃபீக்காவின் விமர்சனக் குறிப்பு இது!

''எனத்தியன் ஃபாத்திமா ஒன்டுமே பேசாம நிக்கிய... இவளவு கொழப்பத்தேம் தொடங்கின. ம்... இப்ப எங்கட தலேல வெச்சீக்கி.'' ஃபாத்துமாவிடம் நியாஸ் சொன்னான்.

''என்னால எல்லாருக்குமே எவளவு கரச்சலன்'' அவள் அனுதாபத்தோடு சொன்னாள்.

''ஓ கஷ்டப்பட்டால்தான் பலன் கெடக்கிய'' நியாஸ் சொல்லி முடிப்பதற்கிடையில்...

''அன்ன சின்னபொஸ் வந்திட்ட''

''சரி அப்ப நீங்கெல்லாரும் இவடத்தில நில்லுங்கொ... அங்கலிங்கல பொகவாண. நாங்க ரெண்டுபேரும் பெய்த்து இதக்குடுத்திட்டு வாரம் நஸீமா நீங்கதான் எல்லாத்துக்கும் பொறுப்பு.''

ஜினதாஸவும் நியாஸும் ஒஃபீஸைச் சென்றடைந்தனர். ஃபெக்டரி சம்பந்தமான விடயங்களுக்காக

அவர்கள் அடிக்கடி செல்வதால் அப்படி ஏதோ வென்றுதான் அவர் முதலில் நம்பியிருக்கவேண்டும்.

''எனத்தியன் வந்த?'' இருவரையும் விழித்தார் அவர்.

ஜினதாஸ கடிதத்தாளைக் கையளித்துவிட்டுத் தள்ளி நின்றான். அவர் வாசிக்கத் தொடங்கினார். நொடிக்கு நொடி உணர்ச்சிப் பிழம்பு முகத்தில் அனல்கக்கியது.

''அப்ப நீங்களியள் எங்களுக்கு ஃபெக்டரி நடத்துடுகியல்ல போலீக்கி.'' மிகப் பரிதாபமாக அவர் கேட்டார்.

''அப்பிடி நீங்க நெனக்க வாண. ஃபெக்டரிய நல்ல மொறேல நடத்தச் செல்லித்தான் நாங்களும் செல்லிய.'' நியாஸ் நிதானமாகப் பதில் மொழிந்தான்.

''பாருங்கொ இப்ப நோம்புகாலம் முன்னுக்கு முன்னுக்கு வார... பெருநாள் பிஸனஸுக்கு ஓடர் வந்துகொண்டீக்கி... புளௌஸ் பொடவ... நூறெல்லாம் இன்டக்கி லொறீல அனுப்பியாம். இந்த டைமில நீங்களியள் இப்பிடியெல்லம் செய்சா ஞாயமா...?''

''அதுக்கும் இதுக்கும் சம்பந்தமில்ல பொஸ்... நீங்க ஓவர்டைம் குடுக்கியென்டா எல்லாரும் வேல செய்வாங்க... ஆனா இது வேற விஷயம்.''

''ஃபர்த்திமாட விஷயத்தத்தானே செல்லிய... கொஞ்சநாள் ஸ்டோர் கீப்பரா வெச்சீந்த. இப்ப மாத்தீட்டன். இதில எனத்தியன் குத்தம்?''

''அப்பிடி எங்கேம் நடக்கியல்ல பொஸ். திடீரென்டு எப்பிடியன் தேவில்லாப்போன... அவள் சங்கத்தில சேந்ததுக்குத்தானே இந்தத் தண்டன... நாளக்கி மத்தவங்களுக்கும் இப்பிடித்தான் நடக்கும். அதச் சொட்டீம் இந்த விஷயத்த நாங்க உட்டுக் குடுக்கியல்ல... நாங்க எந்த நடவடிக்கேம் எடுக்க ரெடி.'' ஜினதாஸ சற்று காரமாகவே சொன்னான்.

''சரி இப்ப நீங்க எனத்த செய்யப்போற?'' சின்னபொஸ் கேட்டார்.

''கொஞ்சம் வெட்டக்கிவந்து பாத்தாத் தெரீம்.'' அந்தச் சொற்கள் சட்டென்று அவரது நெஞ்சைக் குத்த ஜன்னலுக்குள்ளால் வீவிங் பக்கமாகப் பார்த்தார்.

அங்கே யாரையுமே காணமுடியவில்லை.

''அப்ப ஒத்தரும் இன்டக்கி வேல செய்தல்லயா?''

''இதுக்கு முடிவு வரங்காட்டீம் ஒத்தரும் வேல செய்தல்ல.'' நியாஸ் உறுதியாக இடித்துரைத்தான்.

சின்னபொஸ்ஸுக்கு, தான் எடுத்த முடிவை மாற்றுவது பெரிய அகௌரவமாகத் தெரிந்தது. அதே நேரத்தில் தனது முடிவை மாற்றியமைக்க வேண்டிய அளவுக்கு உறுதியுடன் சவால் விட்டுக்கொண்டிருந்த தொழிலாளர்களை அசட்டை செய்யவும் முடியவில்லை. போதாக்குறைக்கு டெலிஃபோன் செய்தியும் காதுக்குள் கிண்கிணுத்தது. தர்ம சங்கடமான நிலையில் அவரது மண்டைக்குள் உதித்தொரு உத்தி.

''மிச்சம் தூரத்துக்கு யோசிச்சி நான் ஃபாத்திமாக்கு அப்பிடிச் செய்யல்ல... அதுக்கெடேல அதப் பெரிசா எடுத்துக்கொண்டு...'' மெல்லவோ விழுங்கவோ முடியாத நிலையில் போடும் சமாளிப்புத்தான் இதுவென்று இருவருக்கும் விளங்கிவிட்டது. மனதுக்குள்ளால் சிரித்துக் கொள்வதைத் தவிர வேறென்ன செய்யமுடியும்!

சங்கம் உள்வட்ட ரீதியாக எடுத்த முதல் நடவடிக்கை வெற்றியளித்து விட்டதை அறிந்தால் அத்தனைபேரும் துள்ளிக்குதிக்கத்தானே போகிறார்கள். அந்த மகிழ்ச்சியான செய்தியை போய்ச் சொல்வதில் அவர்களுக்கும் அவசரம் இருக்காதா என்ன!

''அப்ப மிச்சம் நன்றி பொஸ்''

இருவரும் வெளிவரத் தயாராகையில்...

''நான் மொதல்ல சென்னத்துக்கு ஒரு மறுமொழீம் செல்லல்லயே.'' நீட்டி இழுத்தார் சின்னபொஸ்.

என்னவென்று இருவரும் ஒருவரையொருவர் பார்த்தனர்.

''ஒஃபானாப்பொறகுவேல செய்தத்தப் பத்தி...''

சங்கத்தோடு கலந்துரையாடி எடுக்கப்போகும் இந்த நடவடிக்கையும் அவர்களைப் பொறுத்தமட்டில் இன்னொரு வெற்றிதானே?

''அதில ஒரு பிரச்சினையும் வராது... புரியமான வங்க நின்டு வேல செய்வாங்க... அதுக்கு எவளவு குடுக்கியனென்டத்தப்பத்தி எல்லோரும் பேசித்தான் முடிவு செல்லோணும். சரி நாளக்கி சென்னாப் போதுந்தானே.''

''சரி இந்தாங்கொ தொறப்பு... ஸ்டோர் ரூமத் தொறந்துடுங்கொ''

ஸ்டோர் ரூமைத் திறந்துவிட்டு இருவரும் வெற்றிப் பெருமிதத்துடனும் ஜேம் மரத்தடியை அடைந்தனர்.

''எல்லாம் சரி... ஃபாத்திமா நீங்க ஸ்டோர் ரூமுக்கே போங்கொ... மத்தவங்க ஒங்கடொங்கட வேலயளுக்குப் போங்கொ.''

நியாஸின் அறிவிப்பைத் தொடர்ந்து ஒவ்வொருவரும் தங்களது கடமையை நாடி நடந்தனர்.

அப்போது ஹோன் சத்தத்தோடு வேன் வந்து நுழைந்துகொண்டிருந்தது.

# 22

வீட்டை அடைந்த நஸீமா களைப்போடு களைப்பாக முன்னிரவு ஏற்பாடுகளையெல்லாம் செய்து முடித்துவிட்டு மெல்லச் சாய்ந்தாள். அன்று ஃபெக்டரியில் ஏற்பட்ட சாதகமான வெற்றிகள்... அப்படிக் கொஞ்ச நேரம் கடந்த கால வளர்ச்சிப் படிகளில் அவளைத் தடம்பதிக்கச் செய்தது.

தங்களது நிலைப்பாடுகள் பற்றி எவ்வித சிந்தனைத் தெளிவும், வெளிப்பாட்டுத் திறனுமில்லாத... அமுக்குப் பொம்மைகளாக எல்லோருமிருந்த கட்டத்தில்தான், நஸீமா அங்குபோய்ச் சேர்ந்தாள். அவளும் அந்தக் குகைக்குள் அடங்கிய குடுமியாக இருப்பாளென்றுதான் எல்லோரும் எண்ணியிருப்பார்கள். ஆனால் அவளோ, சிறகுகளைப் புனைந்துகொண்டு சிந்தனைத் தேனை எல்லோருக்கும் புகட்டிக் கூட்டாகச் சிறகடிக்கவல்லவா முனைந்துவிட்டாள்.

அவள் மாத்திரம் இல்லாவிட்டால், அந்தப் பெண்கள் பட்டாளத்தையே நாசுக்காகக் கதைத்துப் போதித்து ஒன்று திரட்டியிருக்க முடியாது. உண்மையில் எல்லோருமே அநீதியை ஓரளவுக்காவது உணர்பவர்களும் அதனை ஒழித்துக்கட்டும் வேட்கையும் கொண்டவர்கள் தான். ஆனால் அவர்களையெல்லாம் முன்னெடுத்துச் செல்லும் தீரமும் துணிவும் கிளர்ந்தெழவேண்டுமே! எவ்வளவோ அடங்கியொடுங்கி இருந்தவள்கூட, ஸ்திரமான சூழல் உருவானபின் எவ்வளவு வேகமும் ஆவேசமும் பொருந்தியவர்களாகச் செயற்பட்டார்களென்பதற்கு வேறெங்குதான் உதாரணம் தேடியலைய வேண்டும்.

ஃபெக்டரிக்குள்ளேயே இப்படியென்றால் வெளியே என்னவாம்? அதுவுமொரு திருப்பம்தானே? அடுப்பறைக்குள் அடைபட்டுக்கிடந்த எத்தனை இளமங்கையர்கள் அலையலையாக தொழிலுக்குப் போகின்றார்கள்.

அதன்மூலம் சொந்தக் கைகளால் வாழ்க்கை வண்ணத்தை வரைந்துகொள்ள முடிகிறதே! இன்று யாருமே இதைப் பற்றிப் பேசுவதில்லை.

''இப்பிடியெல்லாம் இந்த துணியாவில நடக்கியதத்தப் பாத்துக்கொண்டீக்கேலுமா?'' என்று கொக்கரித்த 'கலாசாரக் கழுகு'கள் இப்பொழுதெல்லாம் கண்களை மூடிக் கொண்டிருக்கிறார்களோ என்னவோ!

''மகேள் அன்ன லைட் மங்கிக்கொண்டு வாரபோல'

உள்ளேயிருந்து உம்மாவின் குரலைக் கேட்டு எழுந்தவள், லைட்டை இறக்கி காற்றடித்துத் தூக்கிவிட்டு... உம்மாவுக்கு உதவிசெய்யாமல் இருந்துவிட்டேனே என்ற வருத்தத்துடன் அப்பக்கமாகச் சென்றாள்.

''எனத்தியனும்மா இன்னம் செய்யோணும்.'' என்று கேட்டுக்கொண்டே வந்து குந்திக்கொண்டாள்.

''ஒன்டுமில்ல பகலேக் கறியள சுடவெச்சீக்கி. சோறு மட்டுந்தான் கொஞ்சம் அடுப்பில் வெச்ச.'' எல்லாம் பூர்த்தியென்று உமமா உணர்த்தினாள்.

''பேச்சீல பேச்சீல மறுபேணம் நோம்பும் கிட்ட வாகீக்கி... அதுக்கும் இப்ப ரெடியாகோணேன்.''

''இல்லாட்டீம் இன்னம் ரெண்டு கெழமதான் ஈக்கிய... அதுக்கெடேல கொச்சிக்க சாமணியள் இடிச்சிக் கொளோணும்... மா இடிக்கோணும்... வேலவெட்டி அப்பிடியே ஈக்கி.''

''எனக்கு கருணாவதி நல்ல கொச்சிக்க கொஞ்சம் கொணந்துதாரென்ட உம்மா.''

''அப்ப வாப்போட சொல்லோனேன்... மறுபேணம் அவரும் தூக்கிக் கொணு வந்திருவாறு... அவரு எங்க போனஎ தெரிய,.. இன்டக்கி ஆஸிமாமீம் வாரெண்டு

செல்லியனுப்பீக்கி,'' மகளோடு சொல்லவேண்டுமென்று இருந்தவளுக்கு இது வாய்ப்பாக அமைந்துவிட்டது.

''எனத்துக்கன் நிண்டவாக்கில வார.'' ஒரு சந்தேக உணர்வோடுதான் நஸீமா கேட்டாள். காரணம் இல்லாமல்போகுமா என்ன?

ஆஸிமாமி நஸீமாவின் வாப்பாவின் ஒன்றுவிட்ட தங்கை.

அப்போது ''இன்னம் வரல்லியா?'' என்று கேட்டபடி வந்து சேர்ந்தார் நஸீமாவின் வாப்பா. சும்மாவல்ல பூவாழைப் பழமும் பிஸ்கட்டும் கையோடு எடுத்துக் கொண்டுதான்,

''இப்ப வட்டுமணி பிந்தீட்டு.., இனி ராவக்கி தின்டிட்டு ஆறியமந்துதான் வருவாங்க... எனா ஒங்களுக்கு இவளவு அவசரம்.'' உம்மா கேட்டாள்.

ஏதோவொன்றிருக்கிறதென்பதை புரியாதிருக்க நஸீமா என்ன சின்னக் குழந்தையா?

''சீனி கோப்பியலீக்கா'' மனைவியிடம் ஆர்வத்தோடு விசாரித்தார் அவர்.

''ஈக்கி... நோம்பு முன்னுக்கு வாரத தெரியவா. எவளவு சாமானீந்தாலும் போத... ஒரு மாஸ்தக்கி எடுத்து வெச்சிக்கொண்டா லேசி. பேச்சில பேச்சில நாள் பெய்த்திரும்.'' சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தேவைகளைத் தொட்டுக் காட்டினாள்.

நஸீமாவுக்கு அன்று சாப்பாடே இறங்க மறுத்து விட்டது. பொதுப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துக் கொண்டிருந்த நிலையில்... சற்று தேறுதல் ஏற்பட்டு வரும் வேளையில், வாழ்க்கைப் பிரச்சினைக்கும் முகம் கொடுக்கவேண்டிய சூழல் உருவாகிவிடும் போலிருந்தது. எல்லாம் மனிதனுக்குத்தானே என்ற சுய சமாளிப்பும்கூட!

ஆ வாங்க மதினி.''

வெளிவாசலில் உம்மாவின் குரல்தான் இது. வாப்பாவும் இந்நேரம் பல்லைக் காட்டாமல் இருக்க மாட்டார். உள்ளே நின்ற நஸீமா மோப்பம் பிடிக்கத் தயாரானாள்.

ஆஸிமாமியும் இன்னும் இரு பெண்களும் அங்கு வந்திருந்தார்கள். கூடவே கொண்டுவந்த பார்ஸல் மேசையில் புகலிடம் பெற்றிருந்தது. கொஞ்சநேரம் ஊர்உலகத்துக்கதை அலசல்; பழம்... பிஸ்கட்... கோப்பி உபசாரங்கள். பண்புக்காக ஒருமுறை முகம்காட்டி சிரித்துவிட்டு திரைக்குப் பின்னால் மறைந்து நின்றாள் நஸீமா.

''அப்ப வந்த விஷயத்தப்பத்தி பேசோமே'' வந்தவர்களில் ஒருத்தி ஆரம்பித்தாள்.

நஸீமாவின் காதுகள் கூர்மையாகின.

''ஒ இனிப்பேசோணுந்தானே...'' வாப்பாவும் ஒத்துப் பாடினார்.

''ஆஸியத்தும்மாட மகனுக்கு ஒங்கட மகள'' வாப்பாவைப் பார்த்து அந்த மனிசி.

''ஒ சொந்தத்துக்குள்ள செஞ்சிக்கொண்டா எனத்துக்கும் நல்லந்தானே... கொலம் கோத்திரம் நடப்பு எடுப்பெல்லம் தேடிக்கொண்டு திரியத்தேவில்ல'' அடுத் 'பொம்புளயும் வந்த பங்களிப்பைச் செய்யவேண்டாமா?

''எல்லாரும் புரியப்பட்டா சந்தோஷமா செய்ததானே.'' நஸீமாவின் உம்மா 'எல்லாரும் புரியப்பட்டா' என்ற ஒரு 'இக்' கன்னாவையும் வைத்துச்சொன்னாள்.

''ஓ... இனி யோசின பண்ணீச் செல்லியோம்.'' வாப்பா முடித்து வைத்தார்.

நஸீமா எதை எதிர்பார்த்தாளோ அதுதான் அங்கே நடந்துகொண்டிருந்தது. இந்த வருகைக்கு ஆஸிமாமி மட்டும் காரணமல்ல; அவர்களை அங்கு வரவைத்ததில் அவளது வாப்பாவுக்கும் முக்கிய பங்குண்டு. நீண்ட நாட்களாகவே அவர் மனதில் புதைந்திருந்த விடயந்தான் அது. நஸீமாவின் மனநிலை அவருக்குப் புரியாத தொன்றல்ல. என்றாலும் அவரது மனப்பான்மைக்கு அது ஒத்துவருவதாக இல்லை.

''அப்ப நாங்க பெய்த்திட்டு வார மைனி.'' அவர்கள் விடைபெற்றார்கள்.

''நல்ல விஷயம்'' அவர் மெதுவாக நஸிமாவின் நாடிபிடிக்க முயன்றார்.

''எந்த விஷயமாயீந்தாலும் மகளட புரியத்த முந்திக் கேட்டுக்கொளோணும். ஒரு கலியாணமென்டா லேசான வேலயா?'' மகள் பக்கம் சார்ந்து அவள் கருத்துரைத்தாள்.

''இதொண்டும் எனக்குச் சரிவராது... நான் இதியளுக்கு புரியமுமில்ல'' இதுதான் வாய்ப்பென்று நஸீமா பின்னாலிருந்து சொன்னாள்.

''ஓ இனி அவளுக்குப் புரியமில்லாட்டி நாங்க தங்கத்தால தேடினாலும் அம்மட்டுதான்.'' உம்மாவும் ஒப்பம் வைத்தாள்.

''நாங்க பாக்கிய ஒன்னக் கஷ்டத்தில போடவல்ல. சந்தோஷமா வெக்கத்தான். கொழப்பம் செஞ்சிக் கொண்டு திரீதவனியளக் காட்டி அசடாப்பெய்த்திடும்.'' கோபத்தோடு ஒரு போடு போட்டார்.

நியாஸைப் பற்றி அவருக்கு எப்போதுமே நல்லபிப்பிராயம் இருந்ததில்லை, 'கொழப்பம் செஞ்சிக்

கொண்டு...' என்று அவர் குறிப்பிட்டது நியாஸைத்தான். அநீதிக்கெதிராகக் குரல்கொடுப்பதைத்தான், வாப்பா வைப் போன்றவர்கள் இப்படிப் பிரஸ்தாபிக் கிறார்கள்.

இதற்குமேல் பார்த்திருப்பதில் அர்த்தம் இருப்பதாக அவளுக்குப்படவில்லை. நியாஸிடம் சொல்லி எந்த வகையிலாவது வாப்பாவை விரும்பவைக்க வழிவகுக்க வேண்டுமென அவள் அந்தக்கணத்திலேயே தீர்மானித்துக் கொண்டாள்.

அவளுக்கு அன்று தூக்கமேயில்லை, ஒரே நினைவுக் குழப்பம்.

'நியாஸ்...'

## 23

"எனத்தியன் நஸீமா நீ கொஞ்சநாளா இப்பிடித்தான்... ஒரே பாத்தாலும் கவல புடிச்சவங்க மாதிரி நிக்கிய."

"ஒன்டுமில்ல தயாவதி... ரெணுமூனு நாளாமேலுக்கு கொஞ்சம் ராஹத்தில்ல... அதுதான்."

"இல்லில்ல நீ எனக்கிட்ட மறக்கிய... ஒனக்கு எவளவு நசலென்டாலும் அதக் காட்டிக்கொளாமீக்கிய... எனத்தசரி கரச்சலொண்டில்லாம நீ இப்பிடீக்கியல்ல."

"அதுகளப் பேசிவேலில்ல. சும்ம எங்க பாத்தாலும் நாங்க கரச்சலுக்குள்ளதான் வாழோணும்."

வானத்தைப் பார்த்துக்கொண்டு நஸீமா சொன்னாள். ஏதோ மனப்போராட்டமொன்றுக்குள் சிக்கித் தவிக்கிறாளென்பது தயாவதிக்கு நன்றாகவே தெளிவாகி விட்டது. உயிர் நண்பி என்ற முறையில், அதில் அவள் பங்குகொள்ளத்தானே வேண்டும்.

''அப்பிடித்தான் நஸீமா... பிரச்சினயள் தாருக்கன் இல்லாத? ஒரொரு நாளும் புதியபுதிய பிரச்சினயள் உண்டாகிக்கொண்டுதானீக்கும்.''

''எனத்த சொன்னாலும் நாங்க பொம்புளயள்... நாங்க யோசிக்கியமட்டுக்கு இந்த ஆம்புளயள் யோசிக்கியலல தயா.''

இவ்வளவு வாடிப்போன நிலையில் இதற்குமுன் நஸீமாவை அவள் என்றுமே கண்டதில்லை.

''நஸீமா மனசிலீக்கியத்தச் செல்லுங்கொ சென்னாத்தான் பாரம் கொறயித.'' தயாவதி கெஞ்சிக் கேட்டாள்.

உண்மைதான் மனக்கவலைகளையும் பிரச்சினைகளையும் தீர்க்க முடியாமல் போனாலும்கூட, அவற்றை ஒளிவு மறைவின்றிக் கதைப்பதே பெரிய நிம்மதிதானே? நிம்மதி மட்டடுமல்ல; அது தேவையம்கூட! இல்லாவிட்டால் மனதுக்குள்ளே அடக்கியடக்கி... கலங்கிக் கலங்கி... கடைசியில் மனோவியாதிக்கே பலியாகி விடுவது தவிர்க்க முடியாததுதான்.

''தயா ஒனக்கு என்னப்பத்தி நல்லாத் தெரீம்... இதப்பத்தி செல்லக் கூடியவங்க ஒன்னத்தவிர எனக்கு வேறொத்தருமில்ல...''

''நீ பயப்புடாமச் செல்லு... என்னால ஏலுமென்டா ஒதவி செய்யப் பாக்கியன்.''

''நீ செய்ய ஒன்டுமில்ல. எனக்கும் கலியாணம் பேசியாங்க...'' இதைச் சொல்லும்போதே நஸீமாவின் கண்கள் கலங்கத் தயாராயின.

தயாவதிக்கு சட்டென்று புரிந்துவிட்டது. நஸீமா விரும்பாத எங்கோ, பேச்சு வார்த்தைகள் நடைபெறுகிற தென்று! அதே நேரத்தில் நஸீமாவுக்கும் நியாஸுக்கு மிடையில், வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளா விட்டாலும் உள்ரங்கமான விருப்பங்கள் தொழிற் படுவதும் அவருக்குத் தெரியும். இந்த நிலையில் நஸீமாவுக்கு செய்யும் உதவி, இந்த விஷயத்தை நியாஸுக்கு எட்டச் செய்வதுதானே?

''அப்பிடித்தான் நஸீமா காலம் வந்தா எப்பிடியென்டாலும் கலியாணம் செருசிவெக்கத்தானே உம்ம வாப்பமாறு பாக்கிய... எங்கட நியாஸுக்கு இதியளப் பத்தி அவளவுதூரம் யோசினில்ல... நான் இன்டக்கி ஆளப்புடிச்சி செல்லியன்.''

நஸீமாவின் உள்ளம் களிப்பால் பொங்கியது. தயாவதியால் செய்யமுடிந்த அந்த உதவி, நஸீமாவுக்கு இமாலயப் பிரச்சினையொன்றைத் தீர்த்துவைத்தது போலிருந்தது. அதன்பின்பு அவராகவே விசாரிக்கத் தானே செய்வார். அப்போது அடுத்த விஷயங்களை அவளாகத் தொடரலாந்தானே?

''எனத்தியன் ரெண்டுபேரும் தனியத்தனிய கத?'' என்றவாறு ஷிஃபாயாவும் பொடிஹாமியும் ஃபாத்திமா வும் வந்து சேர்ந்தார்கள்.

''இன்டக்கி பெரியபொஸ் வாராம்... அதப்பத்தித் தான்'' தயாவதி சமயோசிதமாகச் சமாளித்தாள்.

''அப்பிடியா... நாங்களும் அதுக்குத்தான் வந்த... இப்ப எனத்தியன் முடிவு.'' பொடிஹாமி கேட்டாள்.

''நாளக்கி நோம்பு தொடங்கிய... நோம்பு புடிக்கிய வங்க பகலக்கி சாப்பாட்டு நேரத்திலேம் வேல செய்த... நோம்பு புடிக்காதவங்க அரமணித்தியலேம் முந்தி வந்து அரமணித்தியாலம் பிந்திப் போற... எப்படீம் ஒருமணித் தியாலம் கூடவேல செய்த.'' நஸீமா அவர்களிடம் நேர ஒழுங்கை விபரித்தாள்.

''அப்ப அதுக்கு...'' ஃபாத்திமா இழுத்தாள்.

''ஸ்பெஷல் ரேட்... பேசித் தீர்மானிக்கிய.''

அதிக நேரம் அவர்களுக்கங்கே கதைத்துக்கொண் டிருக்க கிடைக்கவில்லை. வழமையான வேலைகள் அழைத்துக் கரம் நீட்டியது.

நெசவுப் பக்கத்திலிருந்து 'டக்க... டகா' சத்தம் ஆரம்பித்துவிட்டது. பொடிஹாமி அளவுப்படி வெட்டி வெட்டிக் கொடுத்தாள். வெட்டிக்கொடுத்த சட்டை களைத் தைப்பதற்கு, தையல் மெஷின்கள் தயாராயின. நஸீமாவின் கைகளும் கால்களும் மெஷினில் இயங்கிய போதும் மனமோ... நியாஸ் பற்றிய நினைவுகளில் லயித்திருந்தது.

அவர்கள் இருவரும் பல சந்தர்ப்பங்களில் பல விடயங்களைப் பற்றிக் கதைத்துக்கொண்டிருந்திருக் கிறார்கள். ஏன் இருவரும் தனியேகூட... எழுத்துவேலை களில் இயங்கியிருக்கிறார்கள். ஆனால் எப்போதாவது அவர்களது உள்ளத்து அன்புணர்வுகளையிட்டு ஒருசில நிமிடங்களாயினும் உரையாடியது கிடையாது. இருந்தா லும் மௌன மொழிகளில் உறவு ராகங்கள் ஒலிப்ப துண்டுதான்.

எது எப்பிடியிருந்தபோதிலும் நியாஸ் ஒருவகையான போக்குடையவனாயிற்றே! நஸீமாவின் கல்யாணப் பேச்சு விவகாரத்தை அறிந்தால் எப்படி நடந்து கொள் வான் என்பது எட்டாக்கனியாக இருந்தது.

''நஸீமாவ வரட்டுமாம்.'' பியோனின் குரல்.

நஸீமாவின் மெஷின் இயக்கம் ஸ்தம்பித்தது.

''மொதலாளி வந்தீக்கியபோல.'' பொடிஹாமி சொன்னாள்.

''எனத்தியோ தெரிய பெய்த்திட்டு வாரன்.''

வீவிங் பக்கமிருந்து தயாவதியும் வந்து சேர்ந்தாள். இருவருமாக ஓஃபீஸுக்குப் போய்ச் சேர்கையில் ஏற்கெனவே அங்கு ஜினதாஸவும் நியாஸும் பெரிய பொஸ்ஸுடன் கதைத்துக்கொண்டிருந்தார்கள்.

''முக்கியமான நாலுபேரும் வந்தீக்கியாங்க.'' சின்ன பொஸ் வாப்பாவுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

''இப்ப நாளக்கி நாளன்டக்கி நோம்பு வரப் போகுது... வருஷத்தில மூணு ஸீஸனுக்குத்தான் நாங்க சம்பரிக்கிய... அதில ஒரு ஸீஸன்தான் முன்னுக்குவார... அதச்சொட்டும் எல்லாரும்சேந்து கொஞ்சம்கூடக் கஷ்டப்படுங்கொ... நாங்க சும்முடுகியல்ல... மாச்சலத் தார.'' உதவிக்கரம் நீட்டிநின்றார் பெரியபொஸ்.

''நாங்க எந்த நேரமும் ரெடிதான் பொஸ்... நீங்களும் எங்கட நெலமய யோசிச்சிப் பாக்கோணும்.'' நியாஸ் பட்டும் படாமலும் எடுத்துச் சொன்னான்.

''நீங்களியள் எங்களுக்கு கரச்சல் தராமீக்கோணும்... இப்ப முந்தியப் போலயல்ல பிரச்சின மிச்சம்... என்டமட்டு ஒத்துழக்கப்பாருங்கொ.'' அவர் தனது கஷ்டத்தை பிரஸ்தாபிக்க தவறவில்லை.

''செல்லவேண்டியத்த செல்லோணுந்தானே பொஸ். இவளவு காலமா நாங்களும் ஈக்கியோம்... ஒரு முன்னேத்தத்தேம் காணல்ல... எந்த நாளும் இப்பிடி இருட்டுக்குள்ள ஈக்கேள மொதலாளி... நாங்க அநியாய

மான மொறக்கி கேக்கியல்ல... ஞாயமாத்தான் கேக்கிய நான் மட்டுமல்ல எல்லாருந்தான் கேக்கிய.'' ஜினதாஸ நேரில் கதைக்கக்கிடைத்த வாய்ப்பை மிகத்திறமாகப் பயன்படுத்தினான்.

''ஏன்ட தலேல பெரியோரு சிக்கலிப்ப... இதால வெளிசானொடன ஒங்கட பிரச்சினயள நீக்கியன்... அதுவரக்கும் கொஞ்சம் ஸபூர் பண்ணுங்கொ.''

''ஓ... மொதலாளி நாங்க ஒங்களுக்கு எத்தனயோ கடிதமனுப்பின... நேர்மொகமா செல்லீக்கி... லேபர் ஒஃபீஸாலேம் வந்திட்டுப்போன... ஒன்டுமே நடக்கல்ல... எல்லம் போதுமாகீக்கொண்டீக்கிய... இனி கடசி முடிவத்தான் எடுக்கவாகிய.''

''இன்ஷா அல்லா இன்னும் ஒரு மாஸம் பொறுங்க...'' பெரியபொஸ் பதற்றமில்லாமல் சொன்னார்.

தேநீர் வேளையின் கலகலப்பு...

''நீங்க ரெண்டுபேரும் கொஞ்சம் நில்லுங்கொ. கணக்கு பொஸ்தகங்களப் பாக்கோணும்... நோம்புல ஸக்காத்தும் குடுக்கோணும்... அல்லாட கட்டள நூத்துக்கு ரெண்டர வேறயாக்கீரோணும்...''

தான் அல்லாஹ்வுக்கு பயந்தவன் என்பதை சற்றே அழுத்திக்கொண்டார் பெரிய பொஸ்.

இருவரும் வெளியே வந்தபோது எல்லோருக்கும் ரஃபீக்கா லெக்ஷர் அடித்துக்கொண்டிருந்தாள். நோம்பு வஃவேற்புப் படலம் பற்றித்தான்.

நாளை—ஞாயிறன்று—ஃபெக்டரியில் சுடுசோறாக்கி... மௌலூது ஓதும் ஏற்பாடு. அதற்குத் தேவையான சாப்பாடு எப்படி அமைய வேண்டும் என்பது பற்றியே ரஃபீக்கா விபரித்துக்கொண்டிருந்தாள். அப்படிப்பட்ட விஷயங்களில் அவள் ஸ்பெஷலிஸ்ட் ஆயிற்றே!

# 24

ஃபெக்டரியில் அன்று ஏன் இவ்வளவு குதூகலம்? அங்கு மட்டுமல்ல... எங்குமே இந்தச் சில நாட்களாக, மகத்தான் வரவேற்பு ஏற்பாடுகள்தான். புனித ரமழானின் வருகையென்றால் இனிக்கேட்கவா வேண்டும்.

தோழியர்கூடி குஞ்சுவீடுகட்டி... தங்கள் கைகளா லேயே சோறு சமைத்து... கறி படைத்து சூழ்ந்து நின்று சுவைத்து மகிழும் அந்த இனிய நினைவுகள்... முதுமை யில்கூட எவரையும் விட்டகல்வதில்லையே!

ஃபெக்டரித் தோழிகளுமென்ன, முதுமையை எய்திவிட்டவர்களா என்ன? அதனால்தான் அவர்களும் ஒரு நாளைக்கு உள்ளத்தால் அதிஇளமையை அழைத்து இப்படி புளகாங்கிதமடைகிறார்களோ!

தையல்... நெசவுக் கலைகளில் கைகளை இயங்கவிடும் அதே இடத்தில் அன்று சமையற் கலையிலும் தங்கள் கைவண்ணத்தைக் காட்டத் தயாராகவிருந்தனர்.

வளவின் பின்பக்க மரநிழல்தான் அவர்களுக்கு திறந்தவெளிச் சமையற் கூடமாகக் கைகொடுத்திருந்தது.

கிணற்றடியில் நாலைந்துபேர் அரிசி அரிப்பதில் மும்முரமாக ஈடுபட... சுடுசோற்றுக்கேயுரிய கழியாக்கறி தயாரிக்க கத்தரிக்காய்... வாழைக்காய்களை அளவுத் துண்டுகளாக வெட்டுவோர் இன்னொரு பக்கம்! முன்கூட்டியே கொடுத்த ஓடருக்கு சுளையாகத் தனியிறைச்சி வந்து சேர்ந்திருந்தது. இறைச்சி வெட்ட சீர்மையான கைகள் வேண்டுமென்பார்களே!

சோறு... கறி... இறைச்சி போதாதா? அன்றைய ஸ்பெஷலாக வடைப்பொரியல் வேறு.

கற்களை உருட்டிவந்து அடுப்புகளை ஒழுங்கு செய்து... சமையலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து எல்லோருக்கும் கொஞ்சம் ஓய்வு. அந்நேரத்துக்குப் பொருத்தமாக 'கசட்டை'யும் கருப்பட்டியும்!

இப்படியான சந்தோஷங்கள் இல்லாது போனால் மனிதனுக்கு மனநிம்மதியே இருக்காதல்லவா?

''ஆ இனி இன்னமுள்ள வேலயச் செய்ங்கொ.''

இத்தனை ஏற்பாடுகளுக்கும் தன்னையே கதாநாயகியாக்கிக் கொண்டு, 'ஓடர்' கொடுத்துக்கொண்டும் குறைநிறைகளை கவனித்துக்கொண்டும் தலைகால் புரியாமல் இயங்கிக்கொண்டிருந்த ரஃபீக்காவின் குரல்தான் அது. அவள் இப்படியான வேலைகளுக்கு கெட்டிக்காரியென்பது எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டதாயிற்றே!

''காம்பராவ தூத்துப்போடோணும். வாழெல கொணுவரோணும்... இப்பிடிப்பிடி கண்ணுக்குத் தெரியாத சின்னச்சின்ன வேலயள் எத்தினீக்கன். இப்பவே பதினொருமணி பிந்தி.'' ரஃபீக்கா சொன்னபோதுதான் பலருக்கும் பொறுப்பு விளங்கியது.

இவர்களுக்குப் பாவிப்பதற்காக சின்னபொஸ் ஓர் அறைத்திறப்பைக் கொடுத்திருந்தார். ஷிஃபாயா தலைமையில் ஒரு குழு காம்பராவை பெருக்கி... தளவாடங்களை ஒதுக்கி... பிடவை சுற்றிவரும் கனத்தாள்களை விரித்து... அழகுபடுத்தியிருந்தனர்.

ஃபாத்திமா முந்தானைத் தொங்கலை இடுப்பில் சொருகிக்கொண்டு ''வாங்க'' என்றபடி கத்தியும் கையுமா பக்கத்து தோட்டத்து வாழை மரங்களைத் தேடினாள். நஸீமாவும் இன்னும் சிலரும் 'பெரலு'க்கு தண்ணீர் நிறைத்துக் கொண்டிருந்தனர்.

ஒரு மணிக்குத்தான் அடுத்த தோழிகளுக்கு அழைப்பு. இன்னும் சொற்ப வேளையில் அவர்களின் வரவை எதிர்பார்த்திருந்தனர். நோன்பை வரவேற்றுக் கொண் டாடும் குதூகலமாக இருந்தாலும் தோழிகள் என்ற முறையில்... ஒரே இடத்தில் தொழில் பார்ப்பவர்கள் என்ற வகையில்... அவர்களுக்கும் பங்கிருக்கத்தானே செய்கிறது.

சென்ற சித்திரைப் பெருநாளின்போது தயாவதி கருணா எல்லோரும் கூட்டுசேர்ந்து, இவர்களுக்கெல்லாம் பெருநாள் உணவுகளால் அள்ளியள்ளி உபசரித்தார் களே... அதையெல்லாம் அதற்கிடையில் மறந்துவிடவா போகிறார்கள்.

''அன்ன வாராங்க!''

தயாவதி உட்பட அங்கே ஒரு கோஷ்டி வந்து கொண்டிருந்தது. அதைத் தொடர்ந்து இருவர் மூவராக வந்த வண்ணமிருந்தனர். கதைக்கும் கலகலப்புக்கும் குறைச்சலே இருக்கவில்லை.

உணவுக் குழுவுக்கு மீண்டும் வேலை. அறைக்குள் உணவுகள் கொண்டு சேர்க்கப்பட்டன. பிறகென்ன சாப்பிடுவதுதானே?

''பெய்ஸ்கால்ல ஜினதாஸ வந்தீக்கி'' யாரோ தகவல் சொன்னார்.

''உள்ளுக்கு வராம எனம்பன் அங்க நிக்கிய.'' என்ற வாறு நஸீமாவும் தயாவதியும் கேற்றடிக்குச் சென்ற போது... சைக்கிளில் பெரியதொரு பழுத்த வாழைக் குலையையும் அவர்களால் காண முடிந்தது.

''இது வாங்கிக்கொணுவரல்ல. எங்கட தோட்டத் தால.'' என்றவாறு லகேஜிலிருந்து மெதுவாக குலையை இறக்கிக் கீழே வைத்தான் ஜினதாஸ.

''வாங்கொ கொஞ்சம் சோறுதின்ன'' நஸீமா அழைப்பு விடுத்தாள்.

''இல்ல—நியாஸூம் இல்ல நான் போறன்.'' சமயோசிதமாக அவன் விடை பெற்றான்.

''இப்பிடியான நல்ல நாளேல நியாஸ் இல்லாப் பெய்த்த. சும்ம நாளக்கே கதசமக்கியவனியள்... இன்டக்கும் நின்டா சும்மீப்பானியளா?'' மறுதலையாகவும் சிந்தித்து மனசைச் சரிபடுத்திக்கொண்டாள் நஸீமா?

நஸீமா நீ கவலப்படத்தேவில்ல. நான் செல்லோண்டியதெல்லம் நியாஸூக்கிட்ட நேத்தே செல்லீட்டேன். நீ நெனக்கிய மாதிரியல்ல... அவரு பேசாமீந்தாலும் எல்லாத்தப்பத்தீம் யோசிச்சுக்கொண்டுதான் நிக்கிய.''

தயாவதி இப்படிச் சொன்னதும் அதுவே பெரிய விருந்தாக நஸீமாவின் நெஞ்சத்தை நிறைத்துவிட்டது.

வாழைக் குலையைக் கண்டதும் அந்தச் சுமையில் பங்குகொள்ள இன்னும் எத்தனையோ பேர் ஓடோடி வந்துவிட்டனர். எதிர்பாராத இந்த அன்பளிப்பு ரஃபீக்காவுக்கு பெரும் பூரிப்பைக் கொடுத்துவிட்டது.

''எங்கியன் ஜினதாஸ வரல்லியா?'' பல குரல்கள்.

''எப்பிடியன் வார? இங்க வேற ஆம்பளயள் ஒத்தருமில்லாம.'' நஸீமாவின் இந்தக் கேள்வி எல்லோரது வாய்களையும் அடைத்துவிட்டது.

''அப்ப கேட் கீப்பர் பொடவயா உடுத்தீக்கிய?'' இக்கட்டான வேலைகளுக்குள்ளும் ரஃபீக்கா இப்படிக் கேட்டால் இனிப்பார்க்கவா வேண்டும்!

''பாவம் அந்த மனிசன்... வயஸாளி.'' இவர்களின் அர்த்தப்பாட்டுக்கு அப்பாற்பட்டவர் என்பதை பட்டென்று சொன்னாள் இன்னொருத்தி.

''ஆ எல்லாரும் வந்திரீங்கொ''

அங்கே வட்ட ஒழுங்கில் எல்லோரும் அமர்ந்தார்கள். முன்னே வாழை இலைப் பீங்கான்கள். நடுவில் ரஃபீக்கா கோஷ்டியின் நடமாட்டம். இருவர் சோற்றுப் பெட்டியைச் சுமக்க... ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கோப்பையாக அள்ளி வைத்துக்கொண்டு சென்றாள் ரஃபீக்கா. தொடர்ந்து கழியா... இறைச்சி... வடை இத்தியாதிகள். அதற்குமேல் யார்தான் பார்த்திருக்கப் போகிறார்கள். சாப்பிடும் படலந்தான். இடையிடையே தேவைக்கேற்ப பரிமாறல். எவ்வளவு அழகான காட்சி.

அதற்கிடையில் கேட்கீப்பருக்கும் சாப்பாடு அனுப்பி வைக்க மறந்துவிடவில்லை.

''கையக் கழுகுங்கொ... ஒத்தரும் ஒழும்பவான''

கைதுடைக்க கடதாசியும் வாழைப் பழங்களும் வழங்கப்பட்டன.

''ஆ... எலயள் அப்பிடீக்கட்டும்.''

மிகச் சிரமப்பட்டுத்தான் சிலர் எழுந்தார்கள். பொறுத்த சாப்பாடல்லவா! அதுவும் மனம் கலந்தவர் களெல்லாம் ஒன்றுகூடிச் சாப்பிடும் இனிமையை எப்படி வியப்பது?

எல்லாம் துப்பரவுசெய்து மீண்டும் பழைய நிலைக்கு ஒழுங்குபடுத்தி முடிக்கையில் மூன்று மணியை அண்மி விட்டது. பாராட்டு மழையில் ரஃபீக்கா நனைந்தே போனாள்.

அடுத்த அங்கம் மௌலூது ஓதல். அதற்கு இடைஞ்சலாக இருக்கக்கூடாதெனபதால்தான்போலும், அடுத்தவர்கள் நன்றியோடு விடைபெற்றார்கள்.

''நாளக்கிந்தட்டைமுக்கு எல்லாரும் நோம்பெலியன்.''

''பொற கண்டாத்தானே... ரேடியோவிலதான் கேக்கோணும்.''

கதையை நிறுத்திவிட்டு எல்லோரும் காம்பராவை அடைந்தனர். வெண்பிடவை விரிக்கப்பட்டு மௌலூது கிதாபுகள் தயாராக இருந்தன. எங்கும் ஊதுபத்தியின் நறுமணம்.

அதற்கு ஷிஃபாயாதான் தலைமை தாங்கினாள். ஓதல் என்றால் அவளுக்கு 'தண்ணிச் சொட்டுப்' போல! அதற்கேற்ப குரல்வளத்தை அல்லாஹ் கொடுத்திருந்தான்.

ரஃபீக்கா இடையிடையே நேரத்தைப் பார்த்துக் கொண்டாள். கோப்பி போடும் பொறுப்பு அவளுக்குத் தானே?

# 25

காலையில் அக்பரின் வீட்டுக்குப் போகாதது ஏதோ முக்கியமானதொரு கடமையைக் கைவிட்டது போலிருந்தது நியாஸுக்கு. அதனால்தான் முழுநாளும் பிரயாணக் களைப்பில் திளைத்திருந்தபோதிலும் அங்கு போக முடிவு செய்தான்.

மஃரிபுக்கு பள்ளிவாசலெல்லாம் அலாதியான பொலிவு பெற்றிருந்தது. மேலதிக விளக்கொளிர்வுகள்... உள் மண்டபத்தில் சுப்ரா விரிப்பு... நீர் நிரம்பி வழிந்தபடி ஹவும்... இத்தனையும் நாளை நோன்பென்றால் தராவீஹ் தொழுகைக்காகத்தான்.

தொழுதுவிட்டு நேரே அக்பர் வீட்டையடைந்தான் அங்கே அக்பரைக் காணவில்லை. லாஃபிர்தான் வரவேற்றான். இப்பொழுது அது லாஃபிர் வீடும்கூட அல்லவா?

''வெளண காணல்ல''

''மாத்தறக்கிப்போன... நாள் முழுக்க அங்கயே அலயவாகீட்டு''

''எனத்தியன் இனிப் புதினமியள்''

''எல்லம் பழய புதினம்தான்... ஒங்களுக்கென்டா இனிப் புதிய நோம்பு... புதிய பெருநாள்...''

''நீ சும்ம காஞ்சி காஞ்சி நிக்கியத்துக்கு நாங்க எனத்தியன் செய்த... விஷயத்தப் பாத்துச் சீக்கிரம் செஞ்சிக்கோ''

''அதும் 'கொடஉட' ஆகும் பொலீக்கி மசான்! இதுதான் நேரமென்று பார்த்து மன ஆறுதலுக்காகவும் ஆலோசனைக்காகவும் சொன்னான்.

''அதெனா அப்பிடிச் செல்லிய... நோட்டிஸ் மறுபொக்கத்துக்கு வேல செஞ்சிட்டா''

''சீச்சீ அப்பிடியொன்டுமில்ல... அந்தக்கதயெல்லம் அன்டயோட சரி''

''அப்ப குட்டி புரியமில்லயா?''

''பாவம் அவள் நல்லவள்''

''அப்ப எனத்தியன் மசான்... ஊட்டில பிரச்சினயா?''

''இல்லடா அவள்ட வாப்பா அவளுக்கு வேறெங்கயோ பேசியாம்.''

''அப்ப அவள்''

''அவளெங்கியன் புரியப்படுகிய... ஆனா வாயத் தொறந்து செல்லாமீக்கியோ தெரிய''

''ஒங்கட மாமக்கு ஒன்னப் புடிக்கியல்ல போல''

''ஓ மசான் பழய காலத்து மனிசன்... எங்கட போக்கு புடிக்கியல்ல... எத்தினயோ பைணம் அவரெனக்கு புத்தி செல்லீக்கி... குத்தூஸ் நானோடேம் நல்லம்''

''இது ஜாதிக்கதடா. ஒன்னப் புடிக்காட்டி அவரட மகளேம் அவருக்குப் புடிக்காது... அவளும் ஒன்னப் போலதானே... அவள் மட்டுமில்லாட்டி ஃபெக்டரீல எங்கடுருப் புள்ளயள் நாப்பதம்பதுபேர் ஈப்பாங்களா? அதுக்குள்ளேம் இவளவு நெலமக்கி வாரா...!''

''மெய்தான் மசான் இப்ப எனத்த செய்தென்டு எனக்கு வெளங்கல்ல.''

''நீ இதில யோசிக்கியத்துக்கு ஒன்டுமில்ல மசான். நீயும் அவளும் புரியமென்டா ஒத்தராலேம் ஒன்டும் செய்யேல... நீ எல்லாத்துக்கும் வெட்டுக்கத்தி மாதிரி முன்னுக்கு நிக்கிய... மத்தவங்களேம் இழுத்துக்கொணு போற... இதில மட்டும் எனத்தியன் யோசிச்சி யோசிச்சி நிக்கிய...?''

''இது சொந்த விஷயம்... நானெப்பிடியன் மாமாக்கிட்டப் போற''

''அப்ப ஒங்கட குடும்பத்தியளுக்கெடேல இதப்பத்தி ஒரு பேச்சிவாத்தேம் நடக்கல்லியா?''

''இல்ல... ஆனா எங்கடும்மக்கு ஏன்ட செய்தி தெரீம்''

''அப்ப நீ இப்பிடிச்செய்... உம்மாக்கிட்டப்பெய்த்து செய்தியச் செல்லு. அப்ப அவங்களுக்கு மாமாக்கிட்டப் பெய்த்துப் பேசேலுந்தானே.''

''வேறெனத்த செய்ய மசான். அவள் அழுதழுதீகி யாள் போலீக்கி. ஃபெக்டரீலேம் மொகம் சரில்ல... எனக்குப் பேசக் கெடக்கேமில்ல... நேத்து தயாவதிதான் செய்தியச் சென்ன.''

''டேய் பொம்புளயள் ஒருஜாதி வீக்கான ஆள்கள். நீ இப்பவே விஷயத்தப்பாரு''

''இல்லில்ல... ஒன்டுக்குப் பயப்புடவான எல்லம் சரிவருமென்டு செல்லியனுப்பின.''

''உம்மக்குப் பொகச் செல்லு... சரிவராட்டி வேறொரு ஆள்போடோம்''

''ஆ... நியாஸ் நானவா... பேச்சிக்கொரல் கேட்டு யோசிச்சன்... எனத்தியன் இன்டக்கி ராவேல'' உள்ளே யிருந்து லாஃபிரின் இளம் மனைவி ஸரீனா வந்து கேட்டாள்.

''ஓ இனி நோம்பென்டா ராவுதானே பகல்''

''அப்ப நோம்பு வரமுந்தியே பாரமெடுத்தீக்கிபோல''

''நானல்ல நீங்க ரெண்டு பேருந்தான் விசேஷமாப் பாரமெடுக்கோணும்... எங்களுக்கு எந்த நாளும் ஒன்டுதான்.'' அர்த்தம் வைத்துச் சொன்னான்.

கல்யாணம் முடிந்தபின் ஒருவருட பூர்த்திக்குள் வருவதெல்லாம் 'புதிசி புதிசி' என்ற பெயரில்தானே வருகின்றன. அதனால் புதிய ஏற்பாடுகளை மேற் கொள்வதும் சம்பிரதாய பூர்வமாகிப் போய்விட்டதே!

''ஓ இப்ப ஒங்களுக்கும் எல்லம் புதிசி புதிசாகப் பாக்க ஆசபோலீக்கி... ஒங்கட கூட்டாளிமாரெல்லம் குடும்பக் காரராகீட்டாங்க. நீங்க மட்டும் தனிய நின்டா அப்பிடித்தான்'' ஸரீனா பொருத்தமாகச் சொல்லி வைத்தாள்.

இவ்வளவு நேரமும் லாஃபிரோடு நடந்த உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்தாளோ, என்ற எண்ணந்தான் நியாஸுக்கேற்பட்டது; வெட்கமும்கூட!

''இன்டக்கி எப்பிடியன் ஓங்கட ஃபெக்டரீல சுடுசோறாம்.'' நல்லகாலம் தெரிந்தோ தெரியாமலோ ஸரீனாவே வேறொரு தடத்துக்கு கதையைத் திருப்பினாள்.

''அதுதானே எனக்கும் நிக்கேலாப் பெய்த்து.''

''மெய்யா... கேள்விப்பட்ட நல்ல சாப்பாடாம். ஜினதாஸ வாழக்கொலயொண்டு கொணந்தாம்.''

''ஆ... நான் சந்திச்சிப்படல்ல... அப்ப வேல ஜோரு''

''அஞ்சிமணியாகங்காட்டீம் மௌலூது ஓதினாம்''

''பொம்புளயள் நிக்கிய எடம் நல்ல கலகலப்புத்தான் நாங்கஎென்டா கணக்கில்லாமீப்போம்'' லாஃபிர் மனைவிக்கும் சேர்த்து மெல்லவிட்டான்.

''எனத்தியன் பொம்புளயள கொறச்சிப் பேசிய... ஆம்புளயளப்பத்திச் செல்லுவன் நான் இப்ப''

ஸரீனாவின் சீற்றத்தைப் பார்த்து இருவரும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

''மசான் இந்தக் கொஞ்சநாளா இருப்படமில்ல... நிம்மதியா ஈக்காம பெரிய தலக்குத்தொன்ட தூக்கிப் போட்டுக்கொண்ட... ம்... முந்தி எவளவு சந்தோஷமா ஈந்த''

''ம்... அந்த மனிசன்ட மனசக் கொழப்பாமிரீங்கொ... நியாஸ் நானா... நீங்க இவரு செல்லியதொன்டேம் கணக்கெடுக்கவாண சரியா...''

என்றவள் தேநீர் தயாரிக்கும் நினைவோடு உள்ளே ஓடினாள்.

''வேறெனத்தியன் செய்தியள்?''

''ஒரு முன்னேத்தமும் இல்ல மசான்''

''முன்னேத்தமில்லயா?''

''சம்பள விஷயத்தில...''

''அப்ப மத்ததெல்லம்...''

''சும்மவே சரிவந்திட்டு. எல்லாரும் ஒன்டு சேந் தொடன பயந்திட்டாங்க!!

''அப்ப அவங்கட குத்துவெட்டொன்டும் சரிவரல்ல போல''

''எனத்தியன்... எத்தின ஜாதி செஞ்சாங்க...ம். தெரீம்தானே செஞ்சதெல்லம்... சிங்கள— முஸ்லீம் என்டும் பிரிக்கப் பாத்தாங்க''

''யா அல்லா... அவங்கட வாசிக்கி எனத்தேம் செய் தது சல்லிக்காரண்ட கொணம்... நீங்களியள் புத்தியப் பாவிச்சி எல்லாரேம் ஒத்துமயாக்கி சங்கம் அமச்சிக் கொண்டத்தில தப்பின.''

''ஓ மசான் இந்த விஷயத்தில நஸீமா மட்டும் இல்லாட்டி ஒண்டும் நடக்கியல்ல... தயாவதியேம் புடிச்சி புத்தியா வேல செஞ்சாள்... இல்லாட்டி நாங்க ரெண்டு பேரும் ஆம்புளயள் எனத்த செய்யவன்.''

''மிச்சம் எடத்தில ரெணுமூனு சங்கம். கடசீல ஒன்டும் நடக்கியல்ல... எங்கட கொழும்பு ஃபெக்டரீலேய் ரெண்டு சங்கமாம்.''

''ஓ நானும் கேள்விப்பட்ட... இங்கயென்டா ஒத்தி தான் மறுபொகம் நின்ட. கடசீல அவளும் வந்திட்

டாள். சின்ன பொஸ்ஸுக்கு ஒன்டும் செய்யேலாப் பெய்த்து''?

''லேபரிலீந்து காயிதமியள் வரல்லியா?''

''காயிதமொன்டும் வரல்ல... அவனியருளுக்கும் பூந்துகீந்து 'தின்னக்' குடுத்தீக்குபோல... எல்லம் 'பகா'வுக்குத்தான் இந்தக் காலம்.''

''இந்தாங்கொ தேத்தண்ணி. பேசிப்பேசி வாய் நோவாயீக்கும்.'' ஸரீனா தேநீரோடு வந்தாள்.

''மசான் இனி ஸ்ட்ரைக் பண்ணியென்டு பயமுறுத்தோண்டியதான்.''

''ஓ பாத்துப் பாத்தீந்து வேலில்ல.''

''நோம்பு நோம்பு... பொறக்கண்டோவ்'' வெளியே சிறுவர் பட்டாளமொன்றின் ஆரவாரம்.

''நான் போற மசான்.'' நியாஸ் எழுந்து நின்றான்.

# 26

லாம்பு வெளிச்சத்துடன் பாதையின் இருபக்கமாகவும் இடையிடையே சின்னஞ்சிறு கடைகள். அவற்றிலே சின்னஞ்சிறு வியாபாரிகள். அவர்களைச் சூழ்ந்து சின்னஞ்சிறு வாடிக்கையாளர்கள். நோன்புக் களிப்பின் காட்சிகள்தான் இவை.

நாளெல்லாம் எதையாவது சுவைத்துத் திரியும் சிறுவர்களுக்கு நோன்பு துறந்ததும், பழைய பாக்கிகளை யெல்லாம் சேர்த்து தின்றுதொலைப்பது தானே வேலை.

எட்டுமணியாகிவிட்டால் போதும்... தராவீஹ் தொழுகை நேரமல்லவா? தொப்பி அணிந்த மனிதர்கள்தான் எங்கும் நிறைந்திருப்பர். பெண்களுக்காகவும் பிரத்தியேக இடங்களில் தொழுகை நடைபெறுவதால்... அவர்களோடு சேர்ந்து சிறுமிகளும் பிடவை உடுத்திக் கொண்டு 'சின்னப் பொம்பிளை'களாக பாதையில் குறுக்கறுக்கும் காட்சிகள் பார்க்கவே மகிழ்ச்சிதான்!

குத்தூஸ் நானா இடையிடையே வெள்ளிக் கிழமைகளில் மாத்திரம் ஜூம் ஆவுக்குப் போய்வருபவரெனினும் நோன்பு வந்ததும்தான் வந்தது, அவரது தலையிலும் தொப்பி... நீட்டக்கை ஷேட். அங்குமிங்கும் புகுந்து திரிந்து, யாருக்கு என்னகதி நேர்ந்தாலும் தன் கைக்கு 'துட்டு' வந்தால் சரி என்ற சித்தாந்தத்துடன் வாழப்பழகி விட்டவர் அவர். என்றாலும் நோன்பு காலத்திலாவது பக்தி வந்ததே என்று... விஷயம் தெரியாதவர்கள் நினைத்துக்கொள்ளலாம். உண்மையில் புனிதமான இந் நாட்களில் வந்து சேரும் நல்லவர்களை, முதலாளிமார்களை, வளைத்துப் பிடித்து கொஞ்சம்கூடப் பிடுங்கும் நோக்கம்தான் என்பது சிலருக்குத்தான் வெளிச்சம்.

பள்ளிவாசல் நிரம்பி வழிந்தது. குத்தூஸ் நானாவின் கண்கள் முன்வரிசை அலங்கரிப்பாளர்களையே கூர்ந்து நோக்கின. 'வேஜீ' முதலாளியைக் காணாதது பெரும் ஏமாற்றம் என்றாலும் வந்து சேர்ந்துவிடுவார் என்ற எதிர்பார்ப்பு.

தொழுகை ஆரம்பமானபோது அவர் பின்வரிசையில் இடம்பிடித்துக் கொண்டார். எதிர்பாராதுபோல ஒன்றாக வந்து சேர்ந்த காதர்... நியாஸ்... ஆகியோரும் குத்தூஸ் நானாவுக்குப் பக்கத்திலே சேர்ந்துகொண்டனர் அது அவருக்கு இடைஞ்சலாகப் போய்விட்டதுபோலும், ஸலாம் கொடுக்கும் போதெல்லாம் அவர் கண்கள் அங்கும் இங்கும் எங்கும் சுற்றிச் சுழன்றன.

தொழுகை முடிந்து வெளியேறிய குத்தூஸ் நானா விடுவாரா? நேரே நடக்கத் தொடங்கினார். பதினைந்தே நிமிடத்துக்குள் 'வேஜி' முதலாளியின் வீட்டை வந்தடைந்துவிட்டார். உள்ளே பளிச்சிட்ட மின் விளக்கொளிர்வு அவருக்கு வெற்றிபோலிருந்தது. கேற்றைத் திறந்துகொண்டு சென்றவர், அழைப்பு மணியை மெல்ல அழுத்தினார்.

''ஆ... வாங்க குத்தூஸ் நானாவா.'' சின்னபொஸ் கதவைத்திறந்து உள்ளே அழைத்தார்.

''எங்கபுள்ள வாப்ப. இன்னும் போகல்லியா?''

''இரீங்கொ செல்லியன்''

குஷன் கதிரையில் ஹாய்யாக அமர்ந்தார் குத்தூஸ் நானா. அங்கே தெரிந்த காட்சிகளிலும் தளவாடங்களிலும் லயித்த அவருக்கு, தான் எங்கு நிற்கிறேனோ என்றதொரு சந்தேகம் எழுந்திருந்தாலும் எழுந்திருக்கும்.

''ஆ குத்தூஸ் நானாவா'' உள்ளே இருந்து வந்தார் முதலாளி.

எழுந்து நின்று மரியாதை செய்தார் குத்தூஸ் நானா.

''மகன் குத்தூஸ் நானக்கு குடிக்க எனத்தியாலும் அனுப்பச் செல்லுங்கொ''

கொஞ்ச நேரத்தில் ஒரு உயர்ந்த கிளாஸ் நிறைய ஏதோ வந்தது. அதைக் குடிக்கும்போது சுவையாக, குளிராக தொண்டைக்குள்ளால் இறங்கியது. நல்லதொரு ராஹத்து உடலுக்கு ஏற்பட்டதுபோல...!

''ஆ... சிகரட்.''

லைட்டரோடு சேர்த்து நீட்டினார். விடுவாரா என்ன?

''ஹாஜியார் வந்து ரெணுமூனு நாளாகீட்டுபோல'

''நாலஞ்சி நோன்பாலும் புடிச்சிட்டுப் பொக நின்ட... நோம்புக்கு ஊரப்போல எங்கியாலும் சரிவாரல்ல...''

''ஓ... இந்த மாஸத்தில ஊடுவாசல்ல நின்டாந்தான் அமல் செஞ்சி கொளேன்டிய... ஒங்கட பிஸ்னஸப் பாத்தா இங்க நிக்கேமேல...''

சின்னபொஸ்ஸூம் ஒரு பக்கமாக வந்தமர்ந்து கொண்டார்.

''அப்ப எப்பேக்கன் போற யோசின?''

''எப்பிடியும் இன்னம் ரெண்டுநாளேல பெய்த் திடுவேன். போனா இனி இருவத்தேழுக்குத்தான் வரோணும்.''

''ஓ... இருவத்தேழுக்கு எப்பிடீம் வரோணும்தானே. எல்லா மனிசரும் வழிபாத்து நிக்கியேன்.''

''இந்தப் பைனம் அரிசி மூனுமூனுகொத்து குடுக்கத்தான் யோசின''

''அல்லா நெறவேத்தட்டும்... போன பைணம் ஒரு கொத்துத்தானே குடுத்த... எல்லம் இந்த ஏழ மனிசரட துவாபரக்கத்துத்தான்''

''ம் எனத்த செஞ்சாலும். இந்த மனிசருக்கு நன்டில்ல'' புதிய கருத்தொன்றை சின்னபொஸ் முன்வைத்தார்.

''நாங்க அல்லாட பேரிலமகன் குடுக்கியது.''

''சின்னபொஸ் செல்லியது சரி ஹாஜியார். ஒங்கட ஃபெக்டரீல வேல செய்த அத்தின புள்ளகளடேம் உம்ம வாப்பமாறு வருஷம் வருஷம் ஒங்களுக்கிட்ட பொரோசனம் எடுக்கிய... அவங்க அதயாவது யோசிக்கியல்லேன்'

''குத்தூஸ் நானா செல்லியதும் மெய்தான்''

''அதுக்கு இந்தப் பைணம் நல்லொருவேல செய்யோணும்... ஊட்டில குடுக்காமல் ஃபெக்டரீல ஸகாத்து குடுத்தா எப்பிடியன்.''

''அது நல்ல யோசின வாப்பா'' சின்னபொஸ் துள்ளினார்.

''எங்க குடுத்தாலும் ஒன்டுதான்.''

''இல்ல மொதலாளி இந்தப் பைணம் ஃபெக்டரீலதான் குடுக்கோணும்... அப்பதான் இருவத்தஞ்சுரு வாம் அரிசி பேக்கேம் கொணு பொகச்செல்ல புள்ளயளுக்கு வெக்கம் வார''

குத்தூஸ்நானாவின் ஐடியா முதலாளிக்கு இப்பொழுதுதான் ஜீரணமாகியது. என்ன இருந்தாலும் குத்தூஸ் நானாவும் 'கேம்'காரன்தான்.

''எல்லம் அந்த நியாஸ் படுவ செய்த வேலதான்'' தடம் மாறினார் குத்தூஸ் நானா.

''ம் அவன் மட்டுமில்லாட்டி ஒரு கரச்சலும் வாரல்ல. நல்ல பொடியனென்றுதானே எடுத்துப்போட்ட... கடசில ஜினதாஸேம் புடிச்சிக்கொண்டு... சும்மீந்த ஃபெக்டரிய அப்பிடியே கொழப்பிப்போட்ட'' சின்னபொஸ்ஸின் மனப்பிரலாபம் வெளிப்பட்டது.

''இதியளுக்கெல்லம் பயப்புடத்தேவில்ல. இவங்க என்ன கூத்து கூத்தடினாலும் ஒன்டும் நடக்கியல்ல. கடல்ல அல வாரமாதிரிதான்... எவளவு எரச்சலோட துள்ளிக்கொண்டு வந்திட்டு... மறுபேணம் திரும்பிப் போறதானே'' முதலாளியின் எதிர்பார்ப்பு இதுதான் போலும்!

''எனத்தியன்டாலும் எல்லம் ஒன்டு சேந்தேன் பாருங்கொ''

''எனக்கும் அதுதான் குத்தூஸ்நானா மனவருத்தம்... ஜாதியென்ட கக்கும இல்லாப் பெய்த்து''

''எல்லம் பொறப்பு வளப்பட குததம்''

''நான் கொழும்பு ஃபெக்டரீல இதப்பாக்கப் பெரிய எதினயோ கரச்சல்ல தலயடிச்சீக்கி... சும்ம ஒண்டும் தெரியாதமாதிரி நின்டத்துக்கு''

''ஒ பொஸ் இவனியளுக்கு உட்டுக்குடுக்கப்படாது. ஏன்டும புடிச்சவங்க... கேக்கியமாதிரி சம்பளம் குடுத்தா நாளக்கி ஊரில எங்களுக்கு தல தூக்கி நிக்கேலப் பெய்த் திரும்... ஊரு வேலவெட்டியெல்லேம் சும்மா நிக்கியா னியள்... எல்லாத்திலேம் கையடிக்க வாரதானே'' தனது வெறுப்பையும் கக்கிக்கொண்டார் குத்தூஸ் நானா.

''ம்... எழுதிப்போட்டு பெரிசா லேபரால அழப்பிச் சாங்க,கடசீல எனத்தியன் நடந்த? இன்னேம் ஒரு செய்தீ மில்ல... இப்ப ஸ்டைக் பண்ணப் போறாமென்டு கதக்கி யாங்களாம்... அதச்செஞ்சாலும் இப்பிடித்தான்.''

''அவனியள் செய்ததத்தச் செய்யட்டும். கணக்குக்கு மிஞ்சினா ரெண்ணுமூனு மெஷின ஒடச்சிப்போட்டு... நாயி யளபொலிஸிலகொணுபெய்த்து அடக்கிய தானே. பாவம் பாவமென்டு பாத்துக்கோ நிக்கிய... அவங்க ஸ்டைக் மட்டும் போடட்டே பாடம் படிப்பிச்சிக் காட்டியன்'' சின்னபொஸ் தன் கடைசி மருந்தை விபரித்தார்.

''ஒ நாங்க ஃபுல் ஸபோட் பண்ணிய... ஊரெல்லமே ஒங்கட பொகம்தான்... பயப்புடவான. அந்த நாயியளுக்கு தாரனீக்கிய? உம்ம வாப்பமாறாவது அவனியளட பின்னால போரல்ல... நீங்க ஊருக்கு வேலசெய்த போதுமான மனிசனெ்டு சின்னப் புள்ளக்கிம் தெரீம்...',

''சரி எல்லாத்துக்கும் அல்லாஈக்கியான். இப்ப பதினொரு மணியாகீட்டு...மிச்சம் தூக்கம் முழிக்கியதும் எனக்குச் சரில்ல ... மறுபேணம் செல்லல்லயென்டு செல்ல வாண. இருவத்தேழுக்கு நேரத்தோட வாங்கொ... எல்லா விஷயத்தேம் நீங்கதான கவனிக்கோணும்.''

''சரிமொதலாளி'' சென்றகாரியத்தில் சிறப்பு வெற்றியுடன் வெளியேறினார் குத்தூஸ் நானா.

'இருவத்தேழுக்கு நேரத்தோட வாங்கொ' என்று சொல்லிவிட்டார் அல்லவா... அதற்குத்தானே இவ்வளவு நேரமும் சுற்றிச்சுழன்றார்.

ஆங்காங்கே வீடுகளிலிருந்து குர்ஆன் ஓதும் ஒலி எழுந்துகொண்டிருந்து.

ஒரு பெரும் புள்ளியை ஸக்காத் காலத்தில் பிடித்து விட்ட களிப்புடன் அவர் வீரநடை போட்டுக் கொண்டிருந்தார்.

# 27

புனித நோன்பு, பெருநாளை எட்டிப்பிடிக்க வேக மாக விரைந்துகொண்டிருந்தது. ஃபெக்டரியில் பசி... தாகம்... சோர்வை மறந்து அத்தனைபேரதும் மும்முர மான இயக்கம்.

இம்முறை பெருநாள் விசேட தயாரிப்புக்கென்றே, மெல்லிய சின்னப் பூக்கள் பதித்த பலவர்ணப் பிடவைகள் வருவிக்கப்பட்டிருந்தன.

''ரஃபீக்கா நோம்பு எப்பிடியன்? நல்லாப் போகுதா? நஸீமா தான் பேச்சை ஆரம்பித்தாள்.

''நோம்பெல்லாம் நல்லாத்தான் போகுது... மஸ்கத் மாதிரி கெலவல்லன் மீன் மலிஞ்சி பெய்ந்தீக்கி... நல்லாத் தீச்சித் தீச்சித் தின்னியது தான் வேல,'' ரஃபீக்காவின் பதில்.

''இதெனத்தியன்டீ... நோம்பென்டா பசீலீக்கியது... நீ எனத்தியன்டா தின்னியத்தப் பத்தித்தான் பேசிய''

''மெய்தான் யோசிக்கோண்டிய செய்தி...ம்...நோம்பு காலத்தில தான் தின்டு தொலக்கிய''

''ரோட்டில போறவார மனிசரப் பாருங்கொ. சும்ம நாளப்பாக்க அவங்க கொணுபோற சாமன்டமட்டு... கறிகாய்... கீர... தயிர்... பாணி... ஏன்ட வாப்பே.'' கருணா தன் அவதானிப்பை சரியாகச் சொன்னாள்.

''சரி இனிப் பெருநாளெல்லம் எப்பிடியன்? புதிய புதிய பெடன் ஸாரியெல்லம் வந்தீக்காம்.'' நஸீமா அவளது வாயை மேலும் கிண்டினாள்.

''ஓ வாங்கிவாங்கி அடுக்கியடுக்கி வெச்சீக்கி. பெருநாள் முடிஞ்சொடன எனக்குக் கலியாணம்... அதுக்கும் சேத்தித்தான்.''

ரஃபீக்காவின் இலேசான குத்தல் நஸீமாவுக்குத் தைத்துவிட்டது.

''அப்ப எங்களியளுக்குத் தெரியாம தனியத் தனிய ரெடியாக்கீக்கிரபால'' அவளும் விட்டு வைக்கவில்லை.

''ஓடி நாங்க ரெண்டுபேரும் பேசிக்கொண்டது... உம்ம வாப்பாக்காலும் தெரிய'' ரஃபீக்காவிடமிருந்து இனி எப்பிடித்தான் தப்பிவிடமுடியும்? ஏன்தான் அவளது வாய்க்கு இரைபோட்டேனென்று தன்னையே நொந்து கொண்டாள் நஸீமா.

''ஷிஃபாயா எப்பிடியன்?'' ரஃபீக்காவை விட்டு விட்டு அடுத்தவளை இழுத்தாள் நஸீமா.

''எங்களுக்கெனத்தியன்... பெருநாள் வாரமாதிரி வந்து போறமாதிரி பொகட்டும். சல்லீந்தா எந்தநாளும் பெருநாள்தான்'' யதார்த்த நிலையை அவள் பிரஸ்தாபித்தாள்.

''பொடவ சட்ட பெய்த்தீக்கிய வெலக்கி பெருநாள் உடுக்கியத்தப் பாக்க உடுக்காமீக்கியது நல்லம்... எங்களுக்கா சின்னப் புள்ளயளுக்குத்தானே பெருநாள்.''

''அதுதான் பெருநாள் வரச்செல்லே எனக்கு நெனக்கிய எனத்துக்கன் பெருத்தெண்டு. ஒரு யோசினேம் இல்லாத காலத்தில வாப்போட சண்டபுடிச்சி நல்ல சொகா பெருநாள் உடுத்ததான். இப்ப ஒன்டொன்டா யோசிக்கச் செல்லே எல்லமே வாணான்டுபோற.'' வறுமைச் சுமை ஷிஃபாயாவின் பேச்சிலே தொனித்தது.

''எதப்பாத்தாலும் இப்பிடித்தான். தின்னேலாதவனு மீக்கி. தின்ன ஒன்டு மில்லாதவனுவனுமீக்கி... பெரிய மாளிக கெட்டிக் கொண்டும் வாழியாங்க... ரோட்டு ரோட்டாகேம் அலைதாங்க... இப்பிடித்தான் உலகம். உள்ளவனுக்கி மத்தவங்களப்பத்தி யோசினில்ல... யோசினுள்ளவனுக்கிட்ட குடுக்கியத்துக்கு ஒன்டுமில்ல.'' கைகளை உதறியபடி நஸீமா சொன்னாள்.

நோன்பு காலம் ஆரம்பமானதிலிருந்தே பகல் சாப்பாடு உட்கொண்ட பின் மேலதிக நேரத்தை நகர்த்துவதற்காக தயாவதி... கருணா இப்படிப் பற்பலரும் அங்கே வந்து சேர்ந்து விடுவார்கள். அவர்களது பொறுப்புக்கு அப்பாற்பட்டதாயினும் கூடவே அவர்கள் வேலை செய்து உதவுவார்கள்.

''ஒங்கியளுக்கு சந்தோஷமான செய்தியொன்டு தெரீமா.'' தயாவதி புதிய செய்தியொன்றைக் கொண்டு வந்திருந்தாள்.

''செல்லே எனத்தியன்?''

''பெருநாளக்கி ஆளுக்கு ஐநூறுருவ எட்வான்ஸ் தரப்போறாம்''

''ஆ... தாரன் சென்ன?''

''மொதலாளி அறிவிச்சிக்கெண்டு சின்ன பொஸ் சென்ன''

''எங்களுக்கு மட்டுமா?''

''இல்ல... சிங்களப் பெருநாளக்கி அவங்களுக்கும் குடுக்கியாம்''

''அப்ப வாசிதான்''

முண்டியடித்துக்கொண்டு விசாரித்து, மகிழ்ச்சியால் துள்ளிக்குதித்தனர். சும்மாவா பெருநாளைக் கொஞ்சம் பசையாகக் கொண்டாடலாம் அல்லவா?

நஸீமாவுக்கு இச்செய்தி அவ்வளவு களிப்பைக் கொடுக்கவில்லை. அதுவொரு ஏமாற்றுவேலை என்பதை விளங்கிக்கொளள அவளுக்கு அவ்வளவு நேர மெடுக்கவில்லை.

அக்கதை வேகமாக ஃபெக்டரியெங்கும் பரவியது. போதாக்குறைக்கு சின்னபொஸ்ஸும் புது நடையுடன் ஆங்காங்கே போவதும் வருவதுமாகவிருந்தார்.

ஒரு பகுதியினரின் வேலை ஐந்து மணிக்கே முடிவுற்ற போதும் யாருமே வீடு செல்லவில்லை. கொஞ்ச நேரம் தாமதித்துச் செல்லுமாறு நஸீமா காதோடு காதாகச் சொல்லியிருந்தாள்.

அரைமணி நேரத்துக்கு மறுபகுதியினரதும் வேலைகள் ஓய... நோன்பு துறக்கவேண்டிய அவசரத்தில் தான்போலும் சின்னபொஸ்ஸும் புறப்பட்டுவிட்டார்.

எல்லோருமே முற்றத்தில் நின்று அன்றைய முக்கிய தகவலையிட்டு பலரக விமர்சனங்களில் ஈடுபட்டிருந் தனர். நியாஸும் ஜினதாஸவும் முன்னறிவித்தலின்றியே கூட்டத்தை நடத்தத் தயாராகிவிட்டனர்.

''இந்த... எங்களுக்கு இவங்கள நம்பிக்கில்ல... நின்ட வாக்கில கண்டகண்ட எடத்திலயெல்லம் கூட்டம் கூடிய'' ரஷீக்காவின் ஆட்சேபனை எல்லோரது கவனத்தையும் ஈர்ந்தது.

''ஓ... நின்டவாக்கில கூட்டம் கூடியது மட்டுமல்ல, நின்ட வாக்கிய ஆள்கள வெலக்கேமேலும் எங்களுக்கு'' இது நியாஸ்!

''அடி நோம்பு தொறக்கப் பொகோணும். சும்ம சொனக்காம வாயப்பொத்திக்கோ.'' ரஷீக்கா கதையை வளர்க்காமல் எல்லோரும் சேர்ந்து அவளை அடக்கி விட்டார்கள்.

''இப்ப ஒங்களுக்கு நோம்பு பெருநாளக்கி எட்வான்ஸா ஐநூறு தாரெண்டு அறிவிச்சீக்கி... இது உண்மேல சந்தோஷமான செய்திதான்... மத்தது நாங்க ஸ்டைக் பண்ணப்போறெண்டு ஊரெல்லாம் பேச்சா யீக்கி... இதப்பத்தி ஒங்கட யோசினயளேம் செல் லுங்கொ.'' நியாஸ் ஒருமுறை எல்லோரையும் பார்த்தபடி நின்றான்.

''இப்பிடித் தாரது எங்களுக்கு ஒரு ஒதவிதான். அத மாஸம் மாஸம் சம்பளத்தில வெட்டுவாங்க. ஆனா அத இந்த நேரத்தில தந்து எங்கள ஏமாத்தப்பாக்கியாங்க... இல்லாட்டி எங்க வேகத்தக் கொறக்கப் பாக்கியாங்க.'' நஸீமாவின் கண்ணோட்டம் எல்லோருமே ஏற்றுக் கொள்ளத் தக்கதாக இருந்தது.

''ஒரு பக்கத்தால இப்பிடித் தரப்போறாங்க... மறு பொக்கத்தால ஸ்டைக் கதய எடுத்துட்டீக்காங்க. இப்ப மொதலாளி சல்லி பங்கிட வாரகாலம் அவருக்கு நாங்க கரச்சல் குடுக்கியென்டத்தக்காட்டி ஊருமனிசர எங்களுக் கெதிரா திருப்பப் பாக்கியாங்க... இதக் கொஞ்சம் கவனமா நாங்க யோசிக்கோணும்.'' நியாஸின் விளக்கம் பலரின் கண்களைத் திறந்துவிட்டன.

''இத நாங்க ஒடணடியா இல்லாமாக்கோணும்''

பெரிய பொஸ் வாரத்துக்கு முந்தி... நாங்க கேட்டீக் கியமாதிரி சம்பளத்தக் கூட்டித்தாரெண்டு பொருந் தோணும்... இல்லாட்டி வேல செய்தல்லயெண்டு அறிவீங்கொ''

''நாங்க எதுக்கும் ரெடி. எங்களுக்கு அநியாயம் செஞ்சிசெஞ்சி...எங்கள அநியாயக் காரணியளா காட்டப் போறாங்க''

பல கருத்துக்கள் களமேறின. நியாஸுக்கோ ஜினதாசவுக்கோ மேலதிகமாகச் சொல்ல எதுவுமே இருக்க வில்லை.

''அப்ப நாங்க பெரிய பொஸ்ஸுக்கு கடசிக் காயித மனுப்பிய... மறுமொழிகராட்டி எல்லாரும்ரெடிதானே.'' ஜினதாஸ இறுதியாகக் கேட்டான்,

''ஒ நாங்க ரெடி''

உணர்வுக் கொதிப்பின் ஆரவாரத்தோடு எல்லோரும் கலைய ஆரம்பித்தனர்.

நஸீமா கொஞ்சநேரம் தாமதித்து, நியாஸைப் பார்த் தாள். அந்தப் பார்வையில் ஆயிரம் சோகக் கவிதைகள். அவள் உள்ளேயும் ஒரு பெரிய போராட்டத்தை நடத்திக் கொண்டல்லவா இருக்கிறாள்.

# 28

இருபத்திநான்கு நோன்புகளை வெற்றிகரமாக பிடித்துவிட்ட களைப்பில் கட்டிலில் சாய்ந்து கொண்டிருந்தாள் நஸீமா. இப்பொழுதெல்லாம் அவள் சாய்ந்து கொண்டே பொழுதைக் கழிப்பது கொஞ்சம் அதிகம் தான், இல்லாவிட்டால், ஏதாவது புதியபுதிய வேலைகளைத் தேடித்தேடிச் செய்து கொண்டிருப்பவளாயிற்றே! நல்லகாலம் நோன்பு வந்து வாய்த்ததால், ஏதோ களைப்புதான் என்று அடுத்தவர்கள் எண்ணிவிடுவார்கள்.

ஸாவியாவுக்கு தராவீஹ் தொழுகைக்காகச் சென்ற நஸீமாவின் உம்மா இன்னும் வந்து சேரவில்லை.

கட்டிலில் புரண்டபடி உம்மாவின் வரவை எதிர்பார்த்திருந்தவளுக்கு அங்கே வாப்பாவின் வருகை எதிர்பார்க்காததாக இருந்தது. அவர் பள்ளிவாசலில் தொழுதால் அதைத் தொடர்ந்து இடம்பெறும் ஹிஸ்பு ஓதலிலும் பங்குபற்றிவிட்டுத்தானே வீட்டுக்கு வருவார்.

''வாப்ப இன்டக்கி நேரத்தோட வந்தீக்கி''

''எனத்தியன்புள்ள அந்தக் குத்தூஸ்நான செல்லிய... ஃபெக்டரியாம் சம்பளமாம்... கொழப்பமாம்... எனத்தியன் இதட வெளப்பம்.''

''ம் ஃபெக்டரீல நடக்கியதெல்லம் குத்தூஸ்நானக்கு எனத்துக்கன்.'' அவள் ஒரேயடியாகக் கேட்டாள்.

''இல்லமகள் அவரு செல்லியத்திலேம் ஞாயமீக்கி''

''அப்பிடியா எனத்தியனீக்கிய ஞாயம்?''

''முஸ்தஃபா மொதலாளி ஊரு ஏத்துக்கொண்ட மனிசன். சும்மாவா வருஷம் வருஷம் ஆயிரக்கணக்கில அள்ளியள்ளிக் குடக்கியவரு. எங்களுக்கும் நாப்பதம்பது கெடக்கிய. அப்பிடிக்கச் செல்லே எங்கட புள்ளயளே அந்த மனிசனுக்கு கரச்சல் குடுத்தா அல்லாவாலும் பொறுக்கியா?''

''மெய்தான் வாப்பா, நீங்களியலெல்லம் ஒரு பொக்கத்த மட்டுந்தான் பாக்கிய... கண்ணைத் தொறந்து மறு பொக்கத்தேம் பாக்கோணும்.''

''இந்தக் காலத்துப் புள்ளியளீக்கே... நீயுந்தான் பேச்சில பெருச்சாளியள்...இதியளால எங்களுக்கொண்டும் நடக்கியல்ல புள்ள... குஞ்சிக்கோழி கொக்கரிச்சி முட்டு டுகியல்ல.''

உண்மையைத் தேடி விளங்கிக்கொள்ளவேண்டு மென்ற நிலையில் வாப்பா இல்லையென்பது நஸீமாவுக்கு என்றோ தெரிந்த விஷயம். அவர் எப்பொழுதுமே இப்படித்தான். அவரது கருத்துக்கள், கேட்டிருப்போரை ஒரு நூற்றாண்டுக்கு முன்னே இழுத்துச் செல்லும்.

''மகள் நாங்க ஊரோட ஒத்துப்பொகோணும். சும்ம அநியாயமா பெரிய மனிசரட மொகத்த முறிச்சிக் கொளப்படாது. நாளேப் பின்னுக்கு எங்களியளுக்கும் தேவயளீக்கி...''

நஸீமா அதற்குமேல் ஒன்றும் பேசவில்லை. இன்னு மின்னும் பேசி வாப்பாவின் ஆத்திரத்தைக் கிளப்பி கொள்வதைத் தவிர வேறென்னதான் நடக்கப்போகிறது?

''எனத்தியன் வாப்பாம் மகளும் கதயாயீக்கி''

புதிய குரல்... நஸீமா கூர்ந்து பார்த்தாள், அவளது தேகம் புல்லரித்தது. நெஞ்சத்தில் நினைவுச் சுழிகள்.

''ஆ ரஹ்மாவா.'' வாப்பா சகோதர வாஞ்சையோடு வரவேற்றார்.

''எவளவோ நாளா வரோணுமென்டு நெனச்சிக் கொண்டீந்த. வந்துபடுகியல்லேன்... இன்டக்கி எப்பிடிச் சரி வரோணுமென்டு வந்த... இனி எப்பிடியன் சொக செய்தியள் ?''

''அல்லாட காவல்ல சொகமாத்தானீக்கிய''

''நஸீமா இப்ப ஃபெக்டரிக்கிப் போறெனா... சும்மீக்கியத்தப் பாக்க நல்லந்தானே''

''ஓ... மாமி.'' அதற்குமேல் நஸீமாவுக்கு பேச்சு வரவில்லை. இத்தனை நாள் எதிர்பார்த்து எதிர்பார்த்து வந்து சேர்ந்திருக்கும்போது...

''ஃபெக்டரிக்குப் பொறது நல்லந்தான். சும்மா தேவில்லாத கொழப்பத்தியள்ள தலபோடாமீந்தா...''

வாப்பாவின் பேச்சு அவளுக்கு கோபத்தைத்தான் கொண்டுவந்தது. நல்லதொரு பேச்சுவார்த்தை அரங்கேறப் போகும் வேளையில், இந்த 'மூசல'ப் பேச்சு...

''அதுதான் நானும் நியாஸுக்கு ஒரே செல்லிய...'' போதாக்குறைக்கு மாமியும் ஒத்தடம் கொடுக்கத் தொடங்கினாள்.

அங்கு நிற்கவே பிடிக்காத நஸீமா, குசினிக்குள் போய்ப் புகுந்துகொண்டாள். அங்கு அவளது உம்மா தோடம் பழரசம் பிழிந்துகொண்டிருந்தாள்.

''உம்மா மாமி வந்தீக்கியே.'' மெதுவாகத்தான் சொன்னாள்.

''ஓ ஒங்கட விஷயத்துக்குத்தான் வந்தீக்கிபோல''

நஸீமாவுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. இன்னுமின்னும் அதைப்பற்றிக் கதைக்கவேண்டும் போலிருந்தது. வெட்கம் விடுமா என்ன?

''நாங்க இவளவு நேரமும் வேலியோரத்தில கதச்சிக்கோ நின்டிட்டுத்தான் உள்ளுக்குவந்த. வாப்ப புரியக்கொறவெண்டும் தெரீம்... அதுதான் மெதுவா வாப்போட கதக்கச் சென்ன''

''வாப்பட மனச தாரேோ அசடாக்கி வெச்சிக்கும்மா''

''ஓ அந்த குத்தூஸ் நானவெல்லம் வாப்பட கூட்டாளியேன்... அந்தக் காலத்திலீந்தே நியாஸோட வைரம்''

தோடம் பழச்சாற்றை நானாவுக்கும் தங்கைக்கும் எடுத்துக்கொண்டு உம்மா செல்வதோடேயே, அவளும் திரைமறைப்புக்குப் பின்னால் வந்துவிட்டாள்.

''குடீங்கொ மைநி''

''நோம்பு நாளேல தோடங்க... கு௫ம்பயள கண்ணால காணேம் அரும...''

''ஓ... இது அடுத்தூட்டு மமஜாபிர் கடேலீந்து வரச்செல்லே கொணந்தத்தில எங்களுக்கு ரெண்ட னுப்பீந்த''

''அதுசரி நானா இந்த நல்ல மாஸ்தேல ஆண்டவன்தான் ஹைறாக்கோணும்... நானொரு பேச்சிவாத்தக்கி வந்த''

''ஆ...'' பிடரியைத் தடவியவாறு தனக்கு விளங்கிவிட்டதென்பதை மெய்ப்பித்தார்.

''எனத்தியன் மைனீ... குத்தம்கொற இல்லாத மனிசனீக்கா...? அதியள பொகப்பொக நாங்கநாங்க சரிபண்ணிக் கொளோணும்... பொஞ்சாதி புள்ளயாகச் செல்லே சும்மவே சரிவார''

வாப்பா வாய்திறக்காமலேயே இருந்தது நஸீமா வுக்கு...

''எனத்தியன் நீங்க பேசாமீக்கிய?'' மாமி விடவில்லை.

''... கட்டாயம் செய்யோணுந்தான். ஆனா சீனிப்புள்ளக் கலியாணம்மாதிரி நெனச்சவாக்கில செய்யேல. மிச்சந்தூரத்துக்கு யோசிக்கோணும் வெளங்கியா''

''எனத்த யோசிக்கவன்... ம்... முந்திப்பிந்தி தெரியாத மனிசரா''

''மெய்தான்... முடிவொன்டச் செல்லுங்கொ.'' ஜொஹராத்தாவும் கணவனைப் பார்த்து அழுத்தமாகச் சொன்னாள்.

''அந்தப் பொடியனுக்கும் எத்தினயோ எடத்தால பேசிவார. அவன்ட மனசப்பத்தி எனக்குத் தெரிஞ்சசொட்டும் நான் ஒரு பேச்சீம் குடுக்கியல்ல. நாங்க நாங்க சொந்தத்துக்குள்ள செஞ்சிக்கொளுகியது எவளவு நல்லமன். இனி நீங்க யோசின பண்ணோணு மென்டா யோசின பண்ணிச் செல்லுங்கொ... முன்னுக்கு வாரது நோப் பெருநாள் மாஸம்.''

மாப்பிள்ளை வீட்டார் பெண் கேட்பதை பெரும்பாலும் கௌரவக் குறைச்சலாகக் கருதும் சமுதாய அமைப்பில், தான் விரும்பும்... தன்னை விரும்பும் பெண்ணுக்காகவல்லவா நியாஸ் இப்பிடி யெல்லாம் உம்மாவை அனுப்பிவைத்திருக்கிறான்!

''இப்பிடித்தான் மைனி ஒங்கட நான ஒரு விஷயத்திலேம் ஒடனே முடிவெடுக்கியல்ல. இத்தின வருஷக்காலமா நானும் பார்த்துக்கொண்டுதான் வார... அவரு யோசிச்சி நல்ல முடிவச் சொல்லியொண் டும்.'' நிலைமையைச் சமாளித்ததோடு கணவனுக்கும் ஒரு ஸேடிபிகேட் கொடுத்தாள் ஜொஹராத்தா.

நஸீமாவின் மனம் சமநிலையை எய்தியதாக இல்லை. மீண்டும் பழையபடி குழம்பியே நின்றது.

''நான் போற மகள்.'' மாமியின் விடைபெறல்தான்.

''அல்லாட காவல்'' என்றவாறு நஸீமா எட்டிப் பார்த்தாள்.

குசுகுசுத்தபடி மூவரும் தோட்டத்துக்குள்ளால் இறங்கி நடந்துகொண்டிருந்தார்கள்.

# 29

இருபத்தேழாம் நோன்பு மாண்பு மிக்கது. அன்றைய நாளைப் பார்த்து சில இடங்களில் கொடை வள்ளல்கள் வந்திறங்கிவிடுவதுண்டு. அந்தவகையில் நாளை மலரப் போகும் அந்நாள் எல்லோரது எதிர்பார்ப்புக்கும் இலக்காகி நின்றது.

முஸ்தஃபா ஹாஜி வந்துள்ள செய்தி ஊரெல்லாம் பரவுவதற்கு அதிக நேரம் செல்லவில்லை இம்முறை 'முப்பது ரூபாவும் மூன்று கொத்தரிசியும்' என்ற செய்தி அதைவிட வேகமாகப் பரவியது,

ஆனால் ஃபெக்டரிக்குள்ள மாத்திரம் அவர் பற்றிய அபிப்பிராயம் மறுபக்கமாக இருந்தது. ஒரு வாரத்துக்கு முன்பு அனுப்பப்பட்ட கடிதத்துக்கும் எவ்வித பதிலும் இல்லாமல்போனது. எல்லோருக்கும் கொதிப்பை ஏற்படுத்தியிருந்தது.

முதலாளி வந்துள்ள செய்தி ஊர்ஜிதமானதும் ஜினதாஸ ஓடோடி வந்தான் நியாஸிடம்.

''மசான் மொதலாளி வந்தீக்காம்''

''ஓ நாளக்கி சல்லி பங்கிடியேன்''— நியாஸ் சொன்னான்.

''எங்கட கடிதத்துக்கு ஒரு மறுமொழீம் இல்லயே''

''இனி எனத்த... நாங்கெடுத்த முடிவுப்படி நடத்திய தானே''

''செலநேரம் நேரடியா வந்தே செல்ல நிக்கியோ தெரிய''

''ஓ வாரான்டு பாப்போம்... வராட்டி நாங்க ஊட்டுக்குப் பெய்த்துக்கேப்போம்''

''ஒரு வருஷமா நாங்க எத்தின காயிதமெழுதீக்கன்... எத்தின பைணம் செல்லீக்கன்''

''அத உடு... எப்பிடியன் அந்த விஷயம்? எல்லாம் சரியா?''

''ஓ அதெல்லம் சரி...''

''அன்ன வேன் வாரபோலீக்கி''

',ம் செல்லியனுப்பாமே. வேன் வார... சாமனெல்லம் ஒடனக்கொடன ஸேலாகுது போலீக்கி''

வேனில் பொஸ்ஸும் கூடவே வந்திருந்தார். முதலாளி வந்தது இருவருக்கும் வசதியாகிப் போய்விட்டது. இம்முறை அவர் என்னதான் சமாதானம் சொன்னாலும் அதெல்லாம் படுதோல்வியிலேயே முடியுமென்பதை அவர் சிந்தித்திருக்கமாட்டார்தான்.

''வேன் வந்தீக்கே''

சின்னபொஸ் இருவரிடமும் ஓடிவந்து சொன்னார், ஏதாவது அவசரமாகச் செய்யவேண்டுமென்ற எதிர் பார்ப்புடன்தான்.

''இரிக்கிய சாமானியள அனுப்போம். கொணு பெய்த்து மூணுநாள்தானே?'' ஜினதாஸ கேட்டான்.

மூவரும் பல பக்கமாகவும் ஆளாய்ப் பறந்தனர். வேறென்ன செய்ய?

''சாமன் கொணுபொக வேன் வந்தீக்கி,'' புளௌஸ் பக்கம் நுழைந்தபடி நியாஸ் சொன்னான்.

''கொணுபெய்த்து எத்தின நாளன்... அதுக்குள்ள மறுபேணம் வந்தா...?'' பொடிஹாமி வியந்து கேட்டாள்.

''எல்லம் வித்து முடிஞ்சாயீக்கும்... பெருநாள் டைமில எவளவீந்தாலும் அழீததானே''

''ஏ... சாமனீக்கி வேண்டியமட்டும். வெட்டினது... பொத்தம் புடிக்காதது... எல்லம் கொணுபொகச் செல்லுங்கொ.'' ரஃபீக்கா ஒரு பட்டியலையே வாசித்தாள்.

''அதோட சேத்தி இதுமொரு சாமனுமீக்கி''

''ஆ... ரஃபீக்காவா?'' ஷிஃபாயா கேட்டாள்.

''இந்தச் 'சாமனே'ம் கொழும்புக்கு கொணுபோனா நல்லாத்தானீக்கும்'' நியாஸின் பதில் எல்லோருக்கும் சிரிப்பை வரவழைத்துவிட்டது.

''ஒரு பத்து டசின் தரேணும்... மத்ததெல்லம் அரகொறதான்!'' பொடிஹாமி இறுதியாகச் சொன்னாள்.

''அப்ப இப்பிடிச் செய்ங்கோ. வெட்டிய வேலயள நிப்பாட்டிட்டு எல்லோரும் சேந்து சின்னவேளயள முடிச்சி ஏன்டமட்டேம் அனுப்பப் பாக்கோம்...''

''அப்ப சரி அப்பிடிச் செய்யோம்,''

வீவிங் பக்கமிருந்து ஜினதாஸ வந்துகொண்டிருந்தான். இருவரும் முதலாளியைச் சந்திக்கும் எண்ணத்துடன் சென்றனர். நல்லவேளை அவரும் ஓய்வாகத்தானிருந்தார்.

''பொஸ், ஒங்களோட கொஞ்சம் கதக்கோணும்.'' நியாஸ்தான் கேட்டான்.

''ஆ எனத்தியன் விஷயம்?''

''நாங்க ஒரு கெழமக்கி முந்தி ஒரு காயிதமனுப்பின.'' இது ஜினதாஸ.

கொஞ்ச நேரம் யோசித்துவிட்டு'' ஓகெடச்ச''

''அதப்பத்தி...''

''நீங்களியள் இந்த டைமிலேம் கரச்சல்தார. தெரீந்தானே இந்த மாஸ்தேல ஆயிரக் சுணக்கில குடுக்கியது. இப்ப நான் வந்தீக்கியேம் அதுக்குத்தான். அல்லாட பாதேல செலவழிச்சுக் கொண்டீக்கச் செல்ல...''

''அப்பிடிச் செல்லவாண பொஸ். ஒரு வருஷத்துக்கு மூந்தி நாங்கனுப்பின காயிதத்திலேம் சம்பள விஷயத்தக் கேட்டீக்கி... நீங்க சீக்கிரம் முடிவு செல்லியன்ட... ஒரு வருஷமாகீம் முடிவில்ல... இது ஞாயமில்லயென்டு ஒங்களுக்கே தெரீந்தானே பொஸ்,'' ஜினதாஸ பழைய விடயத்தையும் எடுத்துரைத்தான்.

''இன்னும் கொஞ்சம் பொறுங்கோ. நோம்பு முடிஞ்சாப்பொறகு எல்லம் பாத்துச் செய்தன். இவளவு காலமீந்தா இனமொரு மாஸம் பொறுக்கேலவா''

''இப்பிடி நாங்க எத்தினயோ பைணம் பாத்து ஏமாந்தீக்கி...எங்கட மத்தாக்களெல்லப்பொல்லாதமாதிரி கொழம்பிக்கோ நிக்கிய... நீங்க மறுபேணம் பொழயா நெனக்க வாணா... அந்தக் காயிதத்தில செல்லீந்த மாதிரிதான் நடக்கும்...''

''ஒத்தரும் கணக்கெடுக்க மாட்டாங்க... நீங்களியள் முருகசாதிமாதிரி நடந்துகொண்டா நாங்களும் அதுக்கேத்தமாதிரி நடந்துக்கொளுகிய... மறுபேணம் யோசிக்க வான.'' பொஸ் தனது தீட்சண்யக் கண்களை உருட்டிச் சொன்னார்.

''நாங்களும் எல்லாத்துக்கும் ரெடிதான்.'' ஜினதாஸ வெகு நிதானமாகச் சொல்லிவிட்டு வெளியேறினான்.

அடுத்த கணம் புளௌஸ் பெட்டிகள்... சாரிக்கட்டு களையெல்லாம் ஒழுங்குபடுத்தி ஏற்றும் படலத்தில் இரு வரும் மூழ்கிப்போயினர்.

இதற்கிடையில் நாளை எல்லோருக்கும் அரைநாள் லீவு என்ற செய்தியும் தெரிவிக்கப்பட்டிருந்தது. பின்நேரம் அவருக்குப்பின் ஸகாத் வழங்கப்பட இருக்கிற தல்லவா?

அன்று ஃபெக்டரி கலையும்போது எல்லோரும் குழுமி நின்றனர். பொஸ்ஸுடன் கதைத்ததுபற்றி அறிந்து கொள்வதே ஒவ்வொருவரதும் எதிர்பார்ப்பாகவிருந்தது.

''நாங்க பெரிய பொஸ்ஸோட சம்பள விஷயமா மிச்சநேரம் கதச்ச... இனமொரு மாஸம் பொறுக்கவாம்... விஷயமென்டா நடக்கியமாதிரில்ல... அவரும் எல்லா ஜாதிக்கும் ரெடியாத்தானாம் நிக்கிய.'' நியாஸுக்கு மேல் பேச யாரும் இடம் வைக்கவில்லை.

''அவருக்கு முந்தியே நாங்களும் ரெடி!'' ஏகோபித்த குரல்!

எல்லோரும் வீடு சென்றதும் ஜினதாஸவும் நியாஸும் மிகச் சிரத்தையுடன் கதைத்தபடி மெதுவாக வந்து கொண்டிருந்தனர். எதிர் பார்க்காதபடி நாலைந்து இளைஞர்கள் வந்து அவர்களைச் சூழ்ந்துகொண்டனர். பார்த்த முகங்கள்... பார்க்காத முகங்கள்... இப்படி யிப்படி.

''எங்க மூனு பேரேம் ஒங்களியளுக்கு நல்லாத் தெரீம்... கண்டீக்கிதானே... இவங்க ரெண்டுபேரும் எங்கட கூட்டாளி மாறுயள்'' அறிமுகப்படலம் நடந்தது.

''ஆ செல்லுங்கொ'' நியாஸ் புன்னகைத்தபடியே மேலும் கேட்டான்.

''நாங்க ரெண்டு பேரும் கொழும்பு வேஜீலதான் வேல... ஆறு வருஷமா வேல... எல்லம் ஊருப்

பொடியன்மார் ஏழெட்டுப்பேர் பெருநாளக்கி வந்தீக்கி... அங்கேம் மிச்சம் நாளா கொழப்பம்தான்... நாங்க ஒங்களியலுக்கு எங்கட ஃபுல் ஸபோட்டத்தார.'' துடிதுடிப்பான ஓர் இளைஞன் கூறினான்.

''மிச்சம் நன்டி'' ஜினதாஸ அவர்களின் கையைப் பிடித்துக்கொண்டு நன்றி கூறினான்.

''நீங்க ரெண்டுபேரும் எங்கமுனுபேரேம் மன்னிக் கோணும்... நாங்க ஒண்டும் தெரியாம குத்தம் செஞ்சிட்டம். இவங்க வந்தாப் பொறகுதான் எங்களுக் கெல்லம் வெளங்கிய.'' முரட்டுத் தோற்றமுடைய இளைஞன் சொன்னான்.

''இனியினி...''

''ஒங்களுக்கெதிரா நோட்டிஸ் ஒட்டின நாங்கதான்... ஃபெக்டரிக்கி காயிதமனுப்பினேம் நாங்கதான்... பஜார் மாடின நாங்கதான் கூட்டிக்கொணு வந்த... சின்னபொஸ் எங்களுக்கு 'எல்லாஜாதீம்' எடுத்துத் தந்த... நாங்க யோசிக்காமச் செஞ்ச... இப்பதான் எல்லம் வெளங்கிய... தயவுசெஞ்சி மன்னிச்சிக்கொளோணும்.'' வாலிபன் கவலையோடு கெஞ்சினான்.

''இப்பிடி தாரச்சரி புடிச்சித்தான் செய்தென்டு எங்களுக்கு நல்லாத்தெரீம்... தெரியாமச் செஞ்சத்துக்கு நாங்க எனத்துக்கன் கோவப்படுகிய.'' என்றவாறு நியாஸ் முதுகைத் தட்டிச் சொன்ன பொழுதிலேயே அவர்களும் நேச நெஞ்சங்களாக மாறிவிட்டனர்.

''இனிமேல ஒங்களுக்கு நாங்க ஃபுல்ஸபோட்... வேண்டிய டைமுக்கு கூப்பிடுங்கொ... சரிவாங்க எல்லாரும் சந்தோஷமா தேத்தண்ணி குடிக்கோம்...''

விடுவார்களா... தேநீர்க்கடை கலகலத்தது.

உதவிக் கரங்கள் அவர்களை இன்னுமின்னும் தைரியப்படுத்தின.

# 30

மாலை மூன்று மணியாகும்போது ஃபெக்டரி வளவெங்கும் மக்கள் வெள்ளம் நிரம்பி வழியத் தொடங்கியது. முன்பெல்லாம் வீட்டில் நடைபெறும் இந்நிகழ்வு இம்முறை ஏன் இங்கு நடைபெறுகிறதென எவரும் சிந்திக்கவில்லை. ஆண்கள்... பெண்கள்... போதாக் குறைக்கு விளையாட்டு நோக்கில் சிறுவர்கள். இத்தடவை மாத்திரமல்ல பல வருடங்களாக இவ்வாறு ஸக்காத் கொடுப்பதன்மூலம் கொடைவள்ளல் என்ற பெயரையும் மதிப்பையும் பெற்றுக்கொண்டவர் முஸ்தஃபா முதலாளி.

இந்தமுறை முந்திய தடவையைவிட கூடுதலாக வழங்கப்படுமாம் என்ற செய்தி, வசதி குறைந்த சனங்களுக்கு பெரும் மகிழ்ச்சியை அளித்தது. அவர்களின் துஆ ஒன்றே போதுமே!

காலையிலிருந்து பலநூறு பைகளில் அரிசி போடப்பட்டு ஒழுங்காக வைக்கப்பட்டிருந்தன. அங்கே கண்காணிப்பு வேலைகளில் குத்தூஸ் நானா மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தார். அவரது நோன்புக் கோலம் பலரை ரசிக்கவைத்ததோடு சிலரையாவது சிந்திக்கவும் வைத்திருக்கும்தான்.

நேரம் நகரநகர எதிர்பார்ப்பு உச்சியை எய்திக் கொண்டிருந்தது. எல்லோரும் வந்து நிறைந்திருக்கும் வேளையில் வந்திறங்கினால்தானே, கௌரவத்தின் கூட்டு மொத்தமான வெளிப்பாட்டை தரிசிக்க முடியும்.

''எங்கடூரில இன்னம் எத்தின சல்லிக்காரனியலீக்கி. ஈந்தத்துக்கு வெளிச்சமில்லேன். சேத்திச் சேத்தி வெக்கிய. மௌத்தாகச் செல்லே கொணுபோறத் துக்காயீக்கும்.''

''மனமெரங்கி மத்தவங்களுக்கு குடுத்தாத்தானே... அவங்களுக்கு இனுமொரு பொக்கத்தால கெடச்சிப் போற... இதுமட்டுமல்ல தெரியாமத் தெரியாம எங்கட ஹாஜியார் எத்தின பேருக்கு ஒதவி செய்தன்.''

''அல்லாதான் அவருக்கு இன்னமின்னம் பரக்கத்தக் குடுத்து அவரட ஹயாத்த நீளிச்சி வெக்கோணும்.''

அங்கு கூடிநின்ற பலரும் தங்களது சிந்தனைக்கு எட்டிய வகையில் அவரைப் புகழ்ந்து பிரார்த்தித்து தங்களது நன்றிக்கடனை வெளிப்படுத்தி நின்றனர்.

''எனாஇது நிக்கிய மாதிரி? இப்பிடி நின்டா ஹாஜியார் எனத்த நெனப்பாரு. இப்ப வார டைமாகீட்டு. ஆம்புளயள் ஒரு பொக்கத்துக்கும் பொம்புளயள் ஒரு பொக்கத்துக்குமா நில்லுங்கொ.'' கட்டுப்பாட்டதிகாரியாகத் தன்னை கற்பித்துக்கொண் டாரோ என்னவோ குத்தூஸ் நானாவின் ஆக்ஞைதான் இது.

''சின்னப்புள்ளயெல்லம் போங்கொ... ஒங்கிளியலுக்கு இங்க எனத்தியன் வேல. கேட்டுக்கு வெட்டேல பெய்த்து நில்லுங்கொ.''

அவரது உருவத்துக்கும் தடித்த குரலுக்கும் பயந்து சிறுவர்கள் ஓடியொளித்துக் கொண்டார்கள்.

''ஆ காரு வருது... காரு வருது''

கூட்டத்துக்குள்ளிருந்து பல குரல்கள் ஒலித்ததும் குத்தூஸ் நானா துள்ளிப்பாய்ந்தார்.

''ரோட்ட உடுங்கொ. ரெண்டு பொகத்துக்குமாகி நில்லுங்கொ...''

பெண்கள் முக்காடுகளை இழுத்துப்போட்டு முகங் களைக் காட்டத் தயாராக... ஆண்கள் தொப்பித் தலை களை வெளிக்காட்ட... கேற்றுக்குள்ளால் அன்றைக் கென்று புதிய டொயாடோ கார் பிரவேசித்து... ராஜ பவனிபோல நகர்ந்து ஃபெக்டரி வாசலில் நின்றது. அதிலிருந்து முஸ்தஃபா ஹாஜி இறங்க, அவரோடு சூட்கேஸும் கையுமாக சின்னபொஸ்ஸும் இன்னொரு வரும் உள்ளே சென்றனர். அவர்களோடு நான்காவது பிரமுகராக குத்தூஸ் நானாவும் புகுந்தார்.

பழைய கலகலப்புத் தொடங்கிவிட்டது. இன்னும் சற்றே நேரத்தில் 'சல்லி பங்கிட' தொடங்கிவிடுவார்களல்லவா?

ஒஃபீஸில் சூட்கேஸோடு முதலாளி ஒரு பக்கமாக அமர்ந்திருக்க... பெயர்களைப் பதிய மற்றவர்கள்... வாசலில் அரிசிப் பக்கற்றை கொடுக்கவும் கட்டுப்பாட்டை மேற்கொள்ளவும் குத்தூஸ் நானா. அத்தோடு பெண்களிலும் ஆண்களிலும் குத்தூஸ் நானாவால் நியமனம் செய்யப்பட்ட நாலைந்து ஒழுங்கமைப்பாளர்கள் வேறு.

''சத்தம் போடாம நில்லுங்கொ. இன்னும் பத்து நிமிஷத்தில தொடங்கிய... வரச்சொன்னா ஆடுமாடு மாதிரி வராம ஒழுங்கா ஃபோலினில வாங்கொ.'' வெளியே வந்து குத்தூஸ் நானா, முன்னால் நின்றவர்களைப் பார்த்துச் சொல்லிவிட்டு மீண்டும் உள்ளே சென்றார்.

அப்போதுதான் யாருமே எதிர்பார்க்காத அந்த ஆரவாரம்...! வேஜீ ஃபெக்டரி ஊழியர்கள் அனைவரும் ஒழுங்காக, எங்கோ இருந்துவிட்டு கேற்றைத்தாண்டி உள்ளே வந்துகொண்டிருந்தார்கள். அவர்களைக் கண்டதும், எல்லாம் மறந்து எல்லோரது கவனமும் அங்குதான் குவிந்தது.

ஜினதாஸவும் நியாஸும் முன்னே வந்து கொண்டிருந்தார்கள். நியாஸின் கையில் துண்டுப் பிரசுரக் கட்டொன்று. நஸீமாவும் தயாவதியும் அங்குமிங்குமாக ஓடி எதையோ தங்களுக்குள் ஏற்பாடு செய்தார்கள். தங்களுக்கென்று ஒருபக்கமாக ஒதுங்கி எல்லோரும் நின்ற தோற்றமே பார்க்க அலாதியாக இருந்தது.

இந்த நிலையில் கேற்றுக்குள் நிறைந்த பார்வையாளர்களோடு லாஃபிர்... காதர்... அக்பர் ஆகியோரும் கூடிநின்றனர். அவசர அவசரமாக வந்துபுகுந்த பத்துப் பதினைந்து பேர்களில் 'ஒருமாதிரியான' பொடியன்களும் இருந்ததை பலரும் அவதானிக்கத் தவறவில்லை.

''நாங்க வேண்டிய ஸபோட் தார.'' நேற்று ஜினதாஸவையும் நியாஸையும் அழைத்து மன்னிப்புக் கோரி...தேநீரும் வாங்கிக்கொடுத்த கோஷ்டிதான் அது. இவர்களுக்கு ஆதரவளிக்கும் நோக்குடனேயே வந்திருக்க வேண்டும்.

அடுத்தகணம் பிரசுரம் பல பக்கமாகவும் பகிரப் பட்டது; பெண்களுக்கும் ஆண்களுக்குமாக, ஒன்றும் விளங்காத சனம் என்ன செய்வார்கள்? சிலர் வாய் விட்டு வாசித்து... தங்களுக்குள் ஒவ்வொரு சின்ன வட்டத்தை திரட்டிக்கொண்டிருந்தனர். இங்கு அதிசயமென்ன வென்றால் சுமார் நூறு தொழிலாளர்களில் பேர்பாதிப் பேரின் உம்மா—வாப்பாக்கள் அங்கே ஸக்காக் பணம் பெறுவதற்காகத் திரண்டிருந்தது தான்.

'ஆயிரமாய் லாபத்தை ஈட்டித்தரும் தொழிலாளர் களுக்கு அரை வயிற்றுக்கும் போதாத சம்பளம்'.

'ஒரு நாளைக்கு இரைபோட்டு ஓராண்டு முழுவதும் ஊரவர்களை, தமக்கு ஆதரவாளர்களாக திரட்டிக் கொள்ளும் திட்டமா.'

'இது ஸக்கத்தர் அல்லது தங்களைப் பிரபல்யப் படுத்திக்கொள்ளும் விளம்பர முயற்சியா?'

இப்படியெல்லாம் துண்டுப் பிரசுரத்தில் காணப்பட்ட சுவையானதும் சூடானதுமான வசனங்களைப் பொறுக்கி, சத்தமிட்டு வாசித்துக்காடடி ஆங்காங்கே அவற்றுக்கு விளக்கவுரைகளும் வழங்கப்பட்டுக்கொண்டிருந்தன.

ஒஃபீஸுக்குள் இருந்தவர்களுக்கு வெட்கமும் அதிர்ச் சியுமாக இருந்தது. தங்களுக்குள் என்னவோவெல்லாம் கதைத்துக்கொண்டு முதலாளியைத் தவிர்ந்த மற்றவர் களெள்லாப் வெளியே வந்தனர். அப்போதுதான் அந்தச் சுலோக அட்டைகள் எழுந்தன.

'நியாயமான சம்பளம் வேண்டும்'

'எங்களை எவராலும் பிரித்துவிட முடியாது'

'நாங்கள் வெளிச்சத்துக்கு வந்துவிட்டோம்'

'பசுத்தோல் புலிகளை இனம்கண்டுகொண்டோம்'

சுலோகக் கோஷங்களால் செவிப்பறைகள் பிளந்து விடாமல், அவர்களால் உள்ளே போவதைத்தவிர வேறென்னதான் செய்யமுடியும்?

''கொழும்பு ஃபெக்டரீல வேல செய்த பொடியனிய லும் வந்தீக்கி வாப்பா''

''ஆ... பெருநாளக்கென்டு லீவெடுத்துக்கொண்டு இதுக்கா வந்தீக்கியானியள். ஈந்தீந்திட்டு இவனியள் தொடங்கினடைமப்பாருங்கொ... ஃபெக்டரிப் பிரச்சினய ஃபெக்டரீல வெச்சுக்கொளாம... இது உலகத்தில நடக்காத ஜாதியொண்டே குத்தூஸ் நானா...'' முதலாளி தவித்துத் தடுமாறினார்.

''முந்தியே ஒழுங்கான நடவடிக்க எடுத்தீந்தா ஒன்டும் நடக்கியல்ல. அந்த நாயியள் ரெண்டுபேரேம் அடிச்சிப்போட்டு... சாமான் கொஞ்சத்த ஒளிச்சி... ரெணுமூனு மெஷின ஒடச்சி... அந்த டைமிலே நான் சென்ன. நீங்க பாவம் பாத்த... இப்பினி யோசிச்சி வேலிலீல... எனத்தியன் இப்ப பெய்த்து பொலிஸக் கொணுவரவா'' குத்தூஸ் நானா... நாக்கும் உதடுகளும் முட்டிமோத... பொலீஸ் தன்கைக்குள்தான் என்பது போலக்கேட்டார்.

''வாணவாண இன்டக்கிப் பொலிஸுக்குப்போனா... கடசீல பேப்பர் கீப்பரிலயேல்லம் வந்து ஏன்டபேருதான் அசடாப்போற.'' முதலாளி தான் சரியான இக்கட்டில் மாட்டியிருப்பதை எண்ணி இடிந்து போனார்.

''அப்ப அவனியள் அவனியள்ட பாட்டுக்கு கூத்தடட்டடும். நாங்க குடுக்கத் தொடங்குவோம்'' மீண்டும் குத்தூஸ் நானாவின் ஆலோசனை.

''அது சரி அப்பிடிச் செய்யோம்.'' சின்னபொஸ் ஆமோதித்துவிட்டார்.

''அப்ப வரச்செல்லுங்கொ.'' மூளை எங்கோ வேலை செய்தபோதும், விரல்கள் பணத்தாள்களில் விளையாடின

''ஆ சல்லி பங்கிடப்போற... தலப்புக்கு பொம்புளயள் ஒத்தரொத்தரா வாங்கொ.'' இந்த ஒலிபரப்பு வளவுக்குள் அமைதியை ஏற்படுத்தியது.

''ஆ வாங்கொ வாங்கொ''

எந்தப் பெண்ணுமே அசையவில்லை; இது அவர்கள் நினைக்காததொன்று.

''அப்ப ஆம்பிளயள் வாங்கொ... அஞ்சிமணீம் கிட்டவாகப் போகுது.'' குத்தூஸ் நானாவும் பலவீன மடைந்துவிட்டதை அவரது குரல் பிரதிபலித்தது.

ஆண்களும் அசையவேயில்லை!

முஸ்தஃபா முதலாளியின் 'சல்லி'க்கு ஏங்கிய நெஞ்சங்களெல்லாம் ஏன் போக மறுத்தன? அவரைப் புகழ்ந்த வாய்களெல்லாம் ஏன் மௌனமாகிவிட்டன?

''பாவம்... முந்தி அந்தப் புள்ளயளட சம்பளத்துக்கு முடிவு செல்லட்டு''

சனத்துக்குள்ளிருந்து எழுந்த குரல்களின் வேகம் குத்தூஸ் நானாவை மீண்டும் ஒஃபீஸுக்குள் தள்ளியது.

தொழிலாளர்களுக்கு ஆதரவாக, அங்கே துள்ளி யெழுந்த சனங்களில் நஸீமாவின் வாப்பாவும் ஒருவர்.

''இவங்கட அநியாயமெல்லம் எங்களுக்கு இப்பதான் வெளங்கிய.'' ஒரு கையிலிருந்த துண்டுப் பிரசுரத்துக்கு மறுகையால் அடித்தபடி கத்தினார் அவர்.

அத்தனை சனங்களையும் கிழித்துக்கொண்டு நியாஸின் கண்கள் நஸீமாவைப் பார்த்தபோது··· அவளும் அவனையே பார்த்து வியந்தாள். இருவரது கண்களும் ஒன்றாகவே அவளது வாப்பாவை பார்த்த போது... அவர் அலாதியான சிரிப்பொன்றை இருவருக்கும் பகிர்ந்தளித்தார்· நிச்சயமாக அது அவர் களுக்கு வழங்கிய சம்மதத்தின் அறிகுறிதான். இந்தப்

பொதுப் போராட்டத்துக்கு மத்தியில் அவர்களின் தனிப்போராட்டத்துக்கும் வெற்றி கிட்டியதை இருவராலும் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை.

''ஆ... ஒத்தராலும் வாரல்லியா... ஊரு மனிசருக்கெடேல எனக்கிந்த மானம் மருவாரியெல்லம் இல்லாமாக்கீட்டானியள்.'' முதலாளி மையத்துபோல் கதிரையில் சாய்ந்தார்.

'குத்தூஸ் நானாவின் முகம் கவிழ்ந்துபோயிருத்தது' அதற்கு இவையெதுவும் காரணமல்ல, கொஞ்சம் சல்லி விளையாட்டு ' செய்துகொள்ள முடியாமல் போய்விட்டதென்பதுதான்!

''இதுக்கங்களகேக்கிய சம்பளத்தக் குடுக்காம எனத்த செய்யவன்.'' என்றவாறு முதலாளி எழுந்து முன்னே வந்தார்.

மீண்டும் கோஷங்கள் அதிகரித்தன...சுலோக அட்டைகள் உயர்ந்தன... ஊர்ச் சனங்களும் அவர்களோடுசேர்ந்து நோன்பின் களைப்பு அதிகரித்த வேளை என்பதையும் மறந்த நிலையில்... குரலெழுப்பிக்கொண்டிருந்தார்கள்.

எதை எல்லோரும் கேட்கிறார்களோ, அதை அவர்களுக்கு வழங்குவதாக முடிவெடுத்துகொண்டுதான் முதலாளி முன்னே வருகிறார் என்பது அவர்களுக்குத்தெரியவில்லை.

'வேஜி தொருலாளர் சங்கம்' 'கொழும்ப வேஜீ' தொழிலாளர்கள் ' இந்த அட்டைகள் கம்பீரமாக நின்று கண்களை உறுத்தின.

முதலாளிக்கு வார்த்தைகளே வரவில்லை. ஒன்று திரண்டுள்ள சக்தி அவரை திக்பிரமையடையச் செய்தது. அவர்களையெல்லாம் எப்படி விழிப்பதென்று அறியாது திக்குமுக்காடி நிற்கையில்..........

ஜினதாஸ புத்தம் புதுச்சுலோக அட்டையொன்றை எடுத்துக்கொண்டோடிவந்து, முதலாளியின் முன்னே தூக்கிப்பிடித்தான். அவரது கண்கள் அதிலேநிலைகுத்தின.

'தொழிலாளர்களின் வியர்வை உலருமுன்பே அவர்களுக்கேற்ற ஊதியத்தைக் கொடுத்துவிடுங்கள்—' **முஹமது நபி (ஸல்).** □

முற்றும்